திருக்கோயில்

நவம்பர் - டிசம்பர் 1983 விலை ரூ. 4-00



கோடம்பாக்கம் வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவில், மூலவர் விமானம்-தெற்கு, கிழக்குக் கோபுரங்கள் ஆகியவற்றிற்குக் குடமுழுக்கு விழா நடைபெறும் காட்சி. (6.2.84)

கோடம்பாக்கம் வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவினையொட்டிய நவக்கிரக ஹோம பூஜையில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் **இராம. வீரப்பன்** அவர்கள் கலந்து கொள்ளுதல் (6.2.84)

முகப்பு

அருள்மிகு சுவாமிநாத சுவாமி
திருக்கோயில் சுவாமிமலை

திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 25 | திருவள்ளுவர் ஆண்டு 2014, ருத்ரோத்காரி ஆண்டு-கார்த்திகை, மார்கழி நவம்பர் & டிசம்பர் 1983 விலை ரூ. 4-00 | மணி : 11 & 12

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் "திருக்கோயில்" திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:

உள்நாடு	ரூ. 24.00
வெளிநாடு	ரூ. 36.00

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

கம்பர் கோட்டக் கால்கோள் விழா

அருள்நந்தி சிவாசாரியார் —ஆசிரியர்

மயில் ஏறும் இராவுத்தன்

இன்கருப்பூர் விருப்பன்
—திரு. டாக்டர் இரா. கலைக்கோவன்

திருமந்திரயோகம்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்

அப்பர் எனும் சொற்பொருள்
—ஆசிரியர்

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலை

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் (உரை)

பஞ்சபூதத் தலங்கள்
—ஆசிரியர்

ஆகமங்களின் தொன்மை
—திரு. மு. அருணாசலம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

கம்பர் கோட்டக் கால்கோள் விழா

(செய்திச் சுருக்கம்)

திருவள்ளுவராண்டு 2015, 1984ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17, 18 சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாள்களிலும், கவிச்சக்கர வர்த்தி கம்பர் அவதரித்த தேரழுந்தூர்த் திரு நிலத்தில், அறநிலையத்துறை-சுற்றுலாத்துறை-செய்தி மக்கள் தொடர்புத்துறை ஆகியவற்றின் சார்பில், மிகவும் சிறப்புற நடைபெற்றது. இந்த இனிய விழா, மிகவும் சிறப்புற நிகழ்வதற்கு அறநிலையத்துறையின் ஆணையர் திரு.கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. அவர்களும், சுற்றுலாத்துறையின் இயக்குநர் செயலர் திரு.இரா.கிருபாகரன், இ.ஆ.ப. அவர்களும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் திரு.சி.என்.கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. அவர்களும், தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. சத்பதி, இ ஆ.ப. அவர்களும் எல்லா ஏற்பாடுகளையும் நன்கினிது செய்திருந்தனர்.

தமிழக அரசின் நிதிஅமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், செய்தி அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு.கு.சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்களும், தமிழக அரசின் வணிகவரி-அறநிலையத் துறைச் செயலர் திரு. ஆர்.ஷண்முகசிகாமணி, இ.ஆ.ப. அவர்களும் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு திரு. மு.மு.இஸ்மாயீல் அவர்களும் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

16.3.84 வெள்ளிக்கிழமை யன்று காலையில் அழகுற அமைக்கப்பெற்ற தேரின்மீது, கம்பர் திருவுருவச் சிலை, தேரழுந்தூரிலிருந்து, மல்லியம்-மூவலூர்-சித்தர்காடு - மயிலாடுதுறை மங்கைநல்லூர்-கோமல் வழியாகத் திருவுலாச் செய்யப்பெற்றுத் தேரழுந்தூர் வந்தடைந்தது.

17.3.84 சனிக்கிழமை காலை 8 மணியளவில், 'கோகில கான இசைச் செல்வர்கள்' எஸ்.ஆர்.ஜி.எஸ்.வசந்தகுமார் - மோகன்தாஸ் சகோதரர்கள் குழுவினரின் நாயன மங்கலஇசை நிகழ்ந்தது. காலை 9 மணியளவில் நீதிபதி மாண்புமிகு திரு.மு.மு. இஸ்மாயீல் அவர்கள், தலைமையுரை நிகழ்த்தினார். தஞ்சைமாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.சத்பதி, இ.ஆ.ப. அவர்கள், வாழ்த்துரை வழங்கினார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் திருப்பெருந்திரு. சிவப்பிரகாச தேசிக பண்டாரசந்நிதி அவர்களும், திருப்பனந்தாள் காசிமடத்தின் தலைவர் 'கயிலைமாமுனிவர்' திருப்பெருந்திரு. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஆசியுரை அனுப்பியிருந்தனர்.

அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம.வீரப்பன் அவர்கள், 'அருள்மொழியரசு' திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், திரு.எம்பார் விஜயராகவாச்சாரியசுவாமிகள் ஆகிய இருபெருமக்களுக்கும் பாராட்டுச் செய்யும் முறையில், பொன்னாடைபோர்த்திச் சிறப்பித்தார். அவர்கள் இருவரும் பாராட்டினை ஏற்றுச் சிறப்புரைகள் வழங்கினர்.

பின்னர்க் காலை 11 மணியளவில் ''கம்பர் காட்சி உரையரங்கம்'' பேராசிரியர் திரு.அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் தலைமையில், நடைபெற்றது. திரு.சிதம்பரம் சுவாமிநாதன்(அழியா அழகன்), திரு.சுகிசிவன் (அருங்குணச் சீதை), திரு.அ.வெ.இராசகோபாலன் (இளையநம்பி), திரு.சோ.சத்தியசீலன் (இலங்கை வேந்தன்), ஆகியோர் பற்றி உரைநிகழ்த்தினர்.

அடுத்து மாலை 3 மணியளவில் (பேராளர் பேரவை), சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு.க. பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில், நடைபெற்றது. திரு. குத்தாலம்இரெ.இராசமாணிக்கம்,எம்.எல்.ஏ., திரு. குடந்தை இராமலிங்கம், எம்.பி., தேரழுந்தூர்ப் புலவர் திரு. ஆர். இராமபத்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாலை 5 மணியளவில், ''இலங்கைத் தம்பியருள் ஏற்றமுடையவன் வீடணன்'' என்னும் பொருள்பற்றி 'வழக்காடும் மன்றம்' நிகழ்ந்தது. திரு.பா.நமசிவாயம் நடுவராகவும்;

திரு. இரா. செல்வகணபதி, வழக்காடுபவராகவும், திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் எதிர் வழக்காடுபவராகவும் உரைகள் நிகழ்த்தினர். இரவு 8 மணியளவில் திரு. நரசிம்மாச்சாரியார்-திருமதி. வசந்தலட்சுமி குழுவினரின் ''கம்ப ராமாயண நாட்டிய நாடகம்'' சிறப்பாக நடைபெற்றது.

மறுநாள் 18.3.84 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில், தமிழக அரசவையின், இளங்சுலைஞர்கள் ஆகிய திருப்பாம்புரம் திரு. டி.கே.எஸ். சாமிநாதன், திரு. டி.கே.எஸ். மீனாட்சிசுந்தரம் சகோதரர்கள் குழுவினரின் நாயன மங்கல இசை நிகழ்ந்தது. 10 மணியளவில் ''இவர்கள் பேசினால்'' என்னும் தலைப்பில், கவிமாமணி திரு. நா. சீ. வரதராசன முன்னிலையிலும், கலைமாமணி திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலும், கவியரங்கும் நடைபெற்றது. திருமதி. சௌந்தரா கைலாசம் தொடக்க உரை நிகழ்த்தினார். கவிஞர்கள் திருமதி. அரசுமணிமேகலை (இராமர்), திரு. இ. முத்துராமலிங்கம் (சீதை), தமிழவேள் (தசரதன்), சொ. சொ. மீ. சுந்தரம் (இராவணன்), மரியதாஸ் (கும்பகர்ணன்), திரு. ம. வே. பசுபதி (பரதன்), திரு. பழனி இளங்கம்பன் (இலக்குவன்), புதுவயல் செல்லப்பன் (அநுமன்), ஆகியோர் பற்றிக் கவிதைகள் வழங்கினர்.

மாலை 3 மணியளவில் நிகழ்ந்த பேராளர் பேரவையில், திரு. எஸ். டி. காசிராசன், இ.ஆ.ப. திரு. ஏ. எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., திரு. இரா. கிருபாகரன், இ.ஆ.ப., ஆகியோர், கலந்து கொண்டனர். மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஆகியவற்றின் மாணவர்கள், சிறப்புரைகள் வழங்கினர். அவர்களுக்குத் தக்க பரிசுகள் வழங்கப்பெற்றன.

அதன்பின்னர் மாலை 4 மணியளவில் ''கம்பர் பெரும்புகழுக்குக் காரணம் கற்பனை வளமா? கதையின் நலமா?'' என்னும் பொருள் பற்றிக் ''கலைதெரி மன்றம்'' நிகழ்ந்தது. டாக்டர் அவ்வை நடராசன் நடுவராக இருந்தார். 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், துவக்கஉரை நிகழ்த்தினார். 'கற்பனை வளமே' என்பதுபற்றி, டாக்டர் சரசுவதிஇராமநாதன்-திரு. த. இராமலிங்கம்-டாக்டர் திரு. சு. பாலச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். 'கதையின் நலமே' என்பது பற்றித் திருமதி இளம்பிறை மணிமாறன் - புலவர் அ. அறிவொளி-செல்வி. சுதாசேஷையன் ஆகியோர், உரை நிகழ்த்தினர். பின்னர் 'புலவர்திலகம்' கீரன் அவர்களின் சிறப்புரையும், தருமையாதீனம் திருப்பெருந்திரு. சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களின் அருளாசியுரையும் நிகழ்ந்தன.

மாலை 6 மணியளவில், ''கம்பர் கோட்டக் கால்கோள் விழா'' நடைபெற்றது. தமிழக அரசின் வணிகவரி-அறநிலையத்துறைச் செயலர் திரு. ஆர். ஷண்முகசிகாமணி, இ. ஆ. ப. அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினார். அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு மு. மு. இஸ்மாயீல் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம், இ. ஆ. ப. அவர்கள், தஞ்சைக் கலைக்கூடம் தொகுத்த ''தெய்வத் திருமேனிகள்'' என்னும் நூலை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்தினார்.

தமிழக அரசின் அறநிலையத்துறைஅமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில், நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கல்வெட்டுத் திறப்புச் செய்து, கம்பரின் கவிதை நலங்கள் குறித்து, அரிய இனிய இலக்கிய ஆராய்ச்சிச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அறநிலையத்துறையின் ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை, இ. ஆ. ப. அவர்கள், விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும், நன்றியுரை நவின்றார்.

பின்னர்க் 'குடந்தைச் சோழன் போக்குவரத்துக் கழகக்' குழுவினரின் மெல்லிசையும், கலைமாமணி கவிஞர் முத்துக்கூத்தன் குழுவினரின் பொம்மலாட்டமும், சிறப்புற நிகழ்ந்தன. விழா நிகழ்ந்த இரண்டு நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள், பல ஊர்களிலும் இருந்து பெருந்திரளாக வந்திருந்து, விழாவைக் கண்டும் கேட்டும் களித்து மகிழ்ந்தனர். **

கீதை நூல்கள்

'கீதை என்றதும், நாம் அனைவரும் பெரும்பாலும் நினைவு கூர்வது, கண்ணபிரான் அருச்சுனனுக்கு அருளிச் செய்த, பகவத் கீதையேயே யாகும். ஆயினும், கீதை என்னும் பெயரால் மற்றும் எத்தனையோ பல நூல்கள், நிலவி வருவதாகத் தெரிகின்றது. அவற்றுள் சிலவற்றின் பெயர்கள் வருமாறு :

1.	உதத்திய கீதை	2.	வாமதேவ கீதை	3.	ரிஷிப கீதை
4.	ஷடாஜ கீதை	5.	சம்பக கீதை	6.	மங்கி கீதை
7.	போத்ய கீதை	8.	ஆரித கீதை	9.	விருத்திர கீதை
10.	பராசர கீதை	11.	அம்ஸ கீதை	12.	கபில கீதை
13.	பிட்சு கீதை	14.	தேவி கீதை	15.	சிவ கீதை
16.	ரிபு கீதை	17.	இராம கீதை	18.	சூர்ய கீதை
19.	வசிஷ்ட கீதை	20.	அஷ்டவக்ர கீதை	21.	அவதூத கீதை
22.	உத்தர கீதை	23.	ஈசுவர கீதை	24.	பாண்டவ கீதை
25.	வியாச கீதை	26.	பிரம கீதை	27.	உருத்திர கீதை

அருள்நந்தி சிவாசாரியர்

(ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

முன்னுரை :

அருள்நந்தி சிவாசாரியர், தமிழ்நாட்டில் தோன்றியருளிய 'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' மிகப்பலருள் தலைசிறந்தஒருவர். ''தம்மானை அறியாத சாதியார் உளரே'' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வியந்து வினவி இரங்கியமைக் கேற்ப, அருள்நந்திசிவம்போன்ற அரும்பெருஞ் சான்றோர்களைப் பற்றி அறிந்து கொள்ளாமலே, நம் தமிழ் மக்களுள் எத்துணையோ பல்லாயிரவர் வாழ்ந்து வருகின்றனர்! தமிழ்நாட்டுச் சான்றோர்களுள் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையில் தலைசிறந்து திகழ்ந்தொளிரக் காண்கின்றோம். இலக்கணத் துறையில் தொல்காப்பியரும், நீதிநூற்றுறையில் திருவள்ளுவரும், காப்பியத் துறையில் இளங்கோவடிகளும், கவிதைத் துறையில் கம்பரும், பக்தித் துறையில் மாணிக்க வாசகரும், வரலாற்றுத் துறையில் சேக்கிழாரும் போல, அருள்நந்திசிவம் தத்துவத் துறையில் தலைசிறந்த வித்தகர் என விளங்குபவராவர்.

அருள்நந்திசிவம், நமது சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களில் ஒருவர்; ஆசிரியர் மெய்கண்ட சிவத்தின் மாணாக்கர்களுள் முதன்மை மிக்கவர். வடமொழியும் தென்மொழியும் மறைகள் நான்கும் பிறவுமெல்லாம் துறைபோகக் கற்றுணர்ந்தவர்.

''பண்டைமறைகளும் அதுநான் ஆனேன்என்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக்காணே''

என வரும் இவர்தம் திருமொழி இவ்வுண்மையினை வலியுறுத்தும், நான்மறைகளைமட்டுமேயன்றி, இவர் சகல வகையான ஆகமங்களையும் ஐயந்திரிபறச் செவ்விதிற் கற்றுவல்ல பேரறிஞராகத் திகழ்ந்தமையின், இவருக்குச் 'சகலாகம பண்டிதர்' என்னும் சிறப்புப்பெயர் வழங்கி வந்தது. இவர் உண்மையிலேயே சகலாகமங்களிலும் வல்லவராக விளங்கியவர் தான் என்பது, உலகாயதன் முதற் பாஞ்சராத்திரி ஈறாக உள்ள பதினான்கு வகைச் சமயக் கொள்கைகளையும் நிரலே கிளந்தெடுத்துக் கூறி, அவற்றையெல்லாம் தமது சிவஞான சித்தியார் பரபக்கப் பகுதியில் தருக்க நெறிமுறை வழுவாது மறுத்துரைத்திருக்கும் மாட்சிமையாற் புலனாகும். இவர் தமது அருட் பெரும் குரவராகிய மெய்கண்டார் பெருமான் பால், தமது பலதிற ஐயங்களையும் வெளியிட்டு அவற்றிற்குரிய விடைகளைத் தெரிந்து கொண்டு துதித்து மகிழும் முறையில், 'இருபா இருபஃது' என்னும் இனிய சிறிய நூல் ஒன்றனையும் இயற்றியுள்ளார்.

தத்துவத்துறைப் பெருநூல் :

சொற் சுருங்கிப் பொருள்நலம் பெருகித் தெளிவுமிக்குத் திகழும் வகையில், அறிவு நூல்களின் முடிபெலாம் அகத்தடக்கி, ஆசிரியர் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்னும் நூலைத் தழுவி, அதன் வழிநூலாகச் 'சிவஞான சித்தியார்' என்னும் பெயரால் இவர் இயற்றியருளிய சிறந்துயர்ந்த மெய்ப்பொருள் நூல், தமிழ்மொழிக்கண் உள்ள தத்துவ நூல்களுளெல்லாம் மிகவும் தலைசிறந்து நிற்பதாகும். ''சிவத்துக்குமேல் இல்லை தெய்வம்; சிவஞானசித்திக்கு மேல் இல்லை நூல்'' எனப் பாராட்டித் தமிழ் கூறும் நல்லுலகம் இதனைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்து வருகின்றது.

''பார் விரித்த நூல்எல்லாம்
பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதி போதும்...'' (1)

''பாதிவிருத் தத்தால்இப்
பார்விருத்த மாகஉண்மை
சாதித்தார் பொன்னடியைச்
சாரும்நாள் எந்நாளோ?'' (2)

எனச் சான்றோர்கள் இதன் அருமைபெருமைகளை இனிதெடுத்துப் பாராட்டியுள்ளனர். 'தண்டமிழின் மேலாம் தரம்' எனக் கூறத்தக்க நூல்களுள் ஒன்றாக ஒளிவிட்டுத் திகழும் சிவஞானசித்தியார், தமிழ்மக்களின் சமய தத்துவ உண்மைகளை விளக்கும் தன்னிகரற்ற நூலாகத் தனி மேம்பாடுற்று விளங்குகின்றது. இதனைச் 'சிவாகமப் பொருள்களுக்கெல்லாம் ஓர் உரையாணி' என ஆசிரியர் சிவஞானசுவாமிகள் பெரிதும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்தின்புறுகின்றார். இலக்கண இலக்கிய எழில் வளங்களும், தருக்கநெறிகளின் திட்ப நுட்பங்களும், திருமுறை நூல்களின் செம்பொருட் கருத்து நலங்களும், யோக ஞான அனுபவ உண்மைச் செய்தித் திறங்களும் பிறவுமெல்லாம் செறிந்

தொளிர்ந்து, சிவஞான சித்தியார் அறிவின்ப விருந்தாய்ச் சுவை துளும்பித் திகழா நிற்கின்றது. சிறந்துயர்ந்த இனிய அரிய செய்யுள் நடையில் இத்துணைப் பலதிற எழில்நலங்களெல்லாம் ஒருங்கியைந்து இனிதமைய இயற்றப்பட்டுள்ள பிறிதொரு நூலை, வேறு பிறிதெங்கணும் காண்டல் அரிது என்று, நாம் துணிந்து கூறுதல்கூடும். தமிழ் மொழிப் புலமைத் துறையில் ''நூலாருள் நூல்வல்லார்'' எனப் பிறங்க விரும்பும் எவரும் இதனை இன்றியமையாது கற்றுணரற்பாலராவர்.

அறிவு நெறியாளர் :

அருள்நந்தி சிவம், மிகச் சிறந்த ஓர் அறிவு நெறியாளர் (Rationalist). அவர் 'சகலாகம பண்டிதர்' என விளங்கியிருந்தாராயினும் தமது நூலில் வெறும் ஆகமப் பிரமாணங்களுக்கே முதன்மை கொடுத்து, அவற்றினின்று மேற்கோள்களை எடுத்துத் திரட்டிக் காட்டிச் செல்லாமல், பொதுஅறிவு நெறிக்கு இயைந்து நிற்கும் வழி வகைகளிலேயே தம் கருத்துக்களைக் கூறி வலியுறுத்திச் செல்கின்றார். ஆகமப் பிரமாணத்தினும் அனுமானப் பிரமாணத்திற்கே அருள்நந்தி சிவம் முதன்மை கொடுத்துள்ளனர் என்பதனை,

''ஈண்டுக் கூறுவன எல்லாம் பொருந்துமாறு பற்றியன்றி ஆகம அளவை பற்றியல்ல''

என வரும் சிவஞானசுவாமிகள் உரை (சுபக். 28) யால் உணரலாம். இங்ஙனம் எத்துணை எளியரும் தாமே கருத்துக்களைச் சிந்தனை செய்து அவற்றின் வன்மை மென்மைகளை உணர்ந்து கொண்டு நலம் பெறற் பொருட்டே, அதற்கோர் உறுகருவியாக, 'அளவையியல்' என்னும் பகுதியினைத் தமது நுண்மாண் நுழைபுலம் தோன்றச் சிவஞானசித்தியார் சுபக்கத் தொடக்கத்தின்கண் அழகுற அமைத்து, ஏற்றபெற்றி சுருங்கவுரைத்து விளங்க வைத்துள்ளார். இவ்வாற்றால் ஆசிரியர் அருள்நந்தி சிவனார் ஒரு சமய தத்துவ நூலறிஞர் (Philosopher) மட்டும் அல்லர்! மிகச் சிறந்த ஒரு தருக்கநூற் பேரறிஞரும் (Logician) ஆவார் என்பதனை, நாம் உணரப் பெறுகின்றோம்.

''ஒருவனோ டொருத்தி ஒன்றென்
றுரைத்திடும் உலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும்!
தான்முதல் ஈறு மாகி
மருவிடும்! அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே!''

எனவரும் சிவஞானசித்தியார் முதற் சூத்திரச் செய்யுளுக்கு மறைஞானசம்பந்த தேசிகர் வகுத்துள்ள உரை, ஆசிரியர் அருள்நந்தி சிவத்தின் தருக்கநெறி பிறழாத் தன்மையினை விளக்கும் சான்றாக, ஈண்டைக்கு இயைபு பற்றி எண்ணி யுணர்ந்து இன்புறற் பாலது.

''இப் பிரபஞ்சத்துக்குக் கருத்தா உண்டு என்பது பிரதிக்ஞை. அதற்கு ஏது யாது? என்னில், ஒருவனோடு ஒருத்தி என்று அவயவப் பட்டிருத்தலால் என்பது ஏது. அஃது என் போல்? என்னின், கடாதி காரியத்துக்குக் குலாலனைப்போல் என்கை திருட்டாந்தம். இக் கடாதி காரியத்துக்குக் குலாலன் உளன் என மதித்தாற்போல, ஒருவனோடு ஒருத்தி என்னும் காரியத்திற்கு ஒரு கர்த்தா உண்டு என மதிக்கை உபநயம். முன்சொன்ன திருட்டாந்தத்துக்கு இந்தத் திருட்டாந்தம் ஒத்திருக்கையால் ஏதுவாகிய காரியத்துக்கு ஒரு கர்த்தா உளன் என்ற பிரதிக்ஞையைத் திடம் பண்ணுகை நிகமனம்''

தமிழ்த் தத்துவ விரிவுரையாளர்:

அருள்நந்தி சிவனார், தமது ஆசிரியராகிய மெய்கண்டார் பெருமானின் அடிச்சுவடு பின்பற்றிச் சிறிதும் பிறழாது நூலியற்றிச் சென்றிருக்குந் திறம் பெரிதும் வியக்கற்பாலதாக உள்ளது. முதல் நூலாகிய சிவஞானபோதத்தினைச் சிறிதும் பிறழாது அடியொற்றி நின்று, சிவஞானசித்தியார் தத்துவக் கருத்துக்களை இலக்கியச் சுவைபெருக விளக்கிச் செல்கின்றது. தாம் சகலாகமங்களையும் பயின்றுணர்ந்து கைவந்த வடமொழிப் பெரும் புலவராக விளங்கியிருந்தனராயினும், சங்கரர், இராமாநுசர், மத்துவர் என்பவர்களைப் போல வடமொழியிலேயே தமது ஒப்புயர்வற்ற தத்துவநூலைச் செய்தொழியாமல், தமது ஆசிரியரின் திருக்குறிப்பின் வழிநின்று தமிழ் மொழியிலேயே ஆக்கியளித்தமையும், அதுதானும் இழுமெனும் மொழியான் விழுமியது பயிலத் தங்குதடையின்றிப் பொங்கி எழும் அழகிய இனிய அரிய கவிதை வடிவில் அமைத்தருளினமையும், நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைவிக்கின்றன. சிவஞான போதம் சுருங்கிய மூலம் போலவும், சிவஞான சித்தியார் அதற்குச் செய்யுள் வடிவில் அமைந்த ஓர் அரிய விரிவுரை போலவும் விளங்குகின்றன எனலாம். பிறவகை உரை நூல்களோடு ஒப்பிட்டுக் காணுங்கால், சிவஞானபோதத்திற்குச் செய்யுள் வடிவில் அமைந்த விரிவுரை நூல் போலத் திகழும் சிவஞானசித்தியாரின் அருமை பெருமைகள், மேலும் செவ்விதின் இனிது தெளியப்படும்.*

---

* "The Scholastic Period also dates from the second century A.D.,....The literature soon becomes grossly polemical. We find a brood of schoolmen, noisy controverialists indulging in oversubtle theories, and fine-spun arguments, who fought fiercely over the nature of logical universals. Many Indian scholars dread opening their tomes which more often confuse than enlighten us. Instead of thought we find words, instead of philsophy, logic-chopping. Obscurity of thought, subtlety of logic, intolerance of disposition mark the worst type of the commentators........"

—Dr. S. RADHAKRISHNAN, *Indian Philosophy* p. 59.

மங்கல வாழ்த்து :

தமிழிலக்கியங்களுள் முதன் முதலாகச் சிவஞான போதத்தின்கண் 'மங்கலவாழ்த்து' முறையினை ஆசிரியர் மெய்கண்டார் அமைத்துக் காட்டினர். அழகிய அரிய அம்முறையினைத் தாமும் பின்பற்றிக் கடைப்பிடித்து,

''அறுவகைச் சமயத்(து) ஓர்க்கும்
அவ்வவர் பொருளாய், வேறாங்
குறியது வுடைத்தாய், வேதா
கமங்களின் குறியி றந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி,
அம்மையோ டப்ப னாகிச்,
செறிவொழி யாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம்''

என அருள்நந்திசிவனார் அருளிச் செய்திருக்கும் திறம், பெரிதும் சுவைதுளும்பிச் சிறந்தொளிர்கின்றது.

''இதனுள், அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் எனவே மேற் கூறிப்போந்த பரபக்கத்துப் பொருளும், வேறாங்குறியது வுடைத்தாய் எனவே முதற் சூத்திரம் முதலிய ஐந்து சூத்திரங்களிற் கூறப் படும் தடத்தப்பொருளும், வேதாகமங்களின் குறியிறந்து எனவே இரண்டும் அன்றி ஏனைச் சொரூபலக்கணம் கூறும் ஆறாம் சூத்திரப் பொருளும், அறிவினில் எனவே ஆன்மசொரூபம் கூறும் ஏழாம் சூத்திரப் பொருளும், அருளால் மன்னி எனவே ஞானதரிசனம் கூறும் எட்டாம் சூத்திரபொருளும், அம்மையோடப்பனாகி எனவே ஞானமும் ஞேயமும் ஞாதிருவுமாகக் காணப்படும் ஒன்பதாம் சூத்திரப்பொருளும், செறிவொழியாது நின்ற எனவே ஏகனாகி நிற்றல் கூறும் பத்தாம் சூத்திரப்பொருளும், சிவனடி சென்னிவைப்பாம் எனவே அரன் மலரடிக்கீழ் இருத்தல் கூறும் பதினோராம் சூத்திரப் பொருளும், சென்னி வைப்பாம் என்னும் சொல்லியல்பான் அணைந்தோர் தன்மை கூறும் பன்னிரண்டாம் சூத்திரப்பொருளும் குறிப்பான் அறியக்கிடந்தன. இங்ஙனம் தொகுத்துக் காட்டுதல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமென உணர்க....''

எனவும் பிறவாறும், சிவஞான சுவாமிகள் நுண்ணிதின் உணர்ந்து வரைந்திருக்கும் உரைத் திறம், பொன்னினும் மணியினும் பெரிதும் பொதிந்து போற்றற்பாலது.

உத்தமக் கவிஞர் :

அருள்நந்தி சிவம் ஒரு சிறந்த தத்துவ வித்தகர், தருக்கநூற் கலைஞர், சிவஞான போத விரிவுரையாசிரியர் மட்டுமேயல்லர்! 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய 'உத்தமக் கவிஞரும்' ஆவார்! ஒரு சிறு சொற்றானும் வறிதே விரவாமல், ஆழ்ந்த பெரும்பொருள் நலங்கள் பொதுளிப் பொலிய, மாற்றார் கருத்துக்களையெல்லாம் மறுத்தொழித்துத் தமது கொள்கைகளை நிலைபேறுற நிறுவும் வகையில், அவர்தம் அழகிய இனிய செய்யுட்கள் அமைந்து விளங்குதல் காணலாம்:

''நித்தமாய் அருவாய் ஏக
நிலையதாய் அகிலத் திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகம்
தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யும் அன்றே''

''மாயையின் சொரூபம் கூறுவார், 'புவன போகமும் தனுகரணமும் உயிர்க்காய்' என்றும்; அதுவும் மாத்தியமிகர் மதம் பற்றிச் சூனியத்திற் செல்லாமைப் பொருட்டு 'அகிலத்திற்கோர் வித்துமாய்' என்றும்; அதுவும் கணிகவாதிகள் மதம்பற்றிச் சார்பினிற்செல்லாமைப்பொருட்டு **நித்தமாய்** என்றும்; அதுவும் உலகாயதர் மதம் பற்றிப் பூதங்களிற் செல்லாமைப் பொருட்டு அருவாய் என்றும்; அதுவும் வைசேடிகர் முதலியோர் மதம்பற்றிப் பரமாணுக்களிற் செல்லாமைப் பொருட்டு **எங்கும் வியாபியாய்** என்றும்; அதுவும் சாங்கியர் மதம்பற்றி முக்குணங்களிற் செல்லாமைப் பொருட்டு **ஏக நிலையதாய்** என்றும்; அதுவும் பாற்கரியர் மதம் பற்றிப் பிரமத்திற் செல்லாமைப் பொருட்டு **விமலனுக்கோர் சத்தியாய்** என்றும்; அதுவும் சிவாத்துவித மதம் பற்றிச் சிற்சத்தியிற் செல்லாமைப் பொருட்டு **அசித்தாய்** என்றும்: அதுவும் மாயாவாதி மதம்பற்றி அநிருவசனத்திற் செல்லாமைப் பொருட்டு **வைத்ததோர் மலமாய்** என்றும்; இத்தன்மைத்தாகிய மாயை ஆணவ மலம் போல மயக்கமே செய்யும் என்னும் சைவருள் ஒரு சாராரை மறுத்தற் பொருட்டு, **மயக்கமும் செய்யும்** என்றும் கூறினார்...'மயக்கமும்' என்னும் உம்மை அது தன்னியல்பன்மை யுணர நின்றது''.

எனச் சிவஞான சுவாமிகள் விளக்கியிருக்கும் உரைத் திறனால், ஒரு சிறு சொற்றானும் வறிதே விரவாமல், திட்ப நுட்பங்கள் செறிய இச்செய்யுள் அமைந்திருத்தல் காணலாம். சிவஞான சித்தியாரில் இன்னோரனைய செய்யுட்கள் பல அமைந்து காணப்படுதல், ஆசிரியர் அருள்நந்தி சிவத்தின் அளப்பரு மாட்சிமைகளைப் புலப்படுத்துவதாகும்.

பல்கலைக் குரிசில்:

அருள்நந்தி சிவம் 'சகலாகம பண்டிதர்' மட்டுமேயன்றி, ஒரு சிறந்த 'பல்கலைக் குரிசில்' எனவும் விளங்கியிருந்திருக்கின்றார். மந்திரம் யோகம் மருத்துவம் இரசவாதம் முதலிய கலைகளில் அவர்க்கு நுணுகிய பேருணர்வு அமைந்திருந்தது எனத் தெரிகின்றது. இறைவன் ''இந்தனத்தின் எரிபோல் மந்திரத்தின் வந்து திப்பன்'' எனவும், ''.....அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க மதி அருக்கன் அணையரவம் போல் தோன்றும் ஆன்மாவில் அரனே'' எனவும் பிறவாறும் ஆங்காங்கே மந்திரங்களின் இயல்பு பற்றி அருள்நந்திசிவம் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

''அங்கித்தம் பனைவல்லார்க்கு
அனல்சுடா தாகும்,
அவுடதமந் திரம் உடையார்க்கு
அருவிடங்கள் ஏறா''

என அவர் கூறுதலும் ஈண்டு உணரற்பாலது. பிரணவ மந்திரம் 'சமட்டி' 'வியட்டி' என இருவகைப்படும் என்றும், அவற்றுள் வியட்டிப் பிரணவமாகிய அகர உகர மகர விந்து நாதங் களும் அவற்றின் அதிதெய்வங்களும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களைச் செலுத்தி நிற்கக், கடலின் கண்ணே திரை புதிது புதிதாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோல, உயிரின்கண் பல திற உணர்வுகள் உதித்து ஒடுங்கும் என்றும், இவ்வுண்மையானது இடைகலை பிங்கலை நாடிகள் வழியாய் ஓடும் வாயு இரண்டினையும் தடுத்துச் சுழுமுனை நாடியிற் செலுத்திச் செய் யும் யோகப் பயிற்சி யுடையோர்க்கே அறி தல் இயலும் என்றும் (சுபக். 193.194), அருள் நந்தி சிவம் குறிப்பிடுகின்றார். அம்மட்டோ! சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம் தாசமார்க்கம் என்பவைகளைப் பற்றி விளக்க நேர்ந்துழி,

''சகமார்க்கம் புலன்ஒடுக்கித் தடுத்துவளிஇரண்டும்
சலிப்பற்று, முச்சதுர முதலா தாரங்கள்
அகமார்க்கம் அறிந்தவற்றின் அரும்பொருள்கள்
உணர்ந்தங்கு
அணைந்துபோய் மேலேறி, அலர்மதிமண்
டலத்தின்
முகமார்க்க அமுதுஉடலம் முட்டத் தேக்கி,
முழுச்சோதி நினைந்திருந்தல் முதலாக,
வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும்
உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப்
பெறுவர்''

என அவர் அட்டாங்க யோகத்தின் இயல்பு களைப் புலப்படுத்தி யிருத்தலும் நம்மனோர் உளங்கொளற்குரியது. இவ்வாறே இரசவாதம் பற்றிய செய்திகளை, 'செம்பிற் காணலுறும் களிம்பு இரத குளிகை பரிசிக்கக் கழியும்'' ''செம்பு இரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்ச்செம்பொனுடன் சேரும்'' 'அருங் களங்கம் அறுக்கும் அக்குளிகைதானும் பொன் ஆகாதாகும்'' என்று ஆண்டாண்டு உவமை யாகக் கூறிச் சுட்டிச் செல்லுதலின், அருள் நந்தி சிவத்திற்கு இரசவாதம் முதலிய கலை களில் இருந்த உணர்வு புலனாகின்றது. மற்றும் அவர் தோற்பாவைக்கூத்து, தொல்லை மரப் பாவை இயக்கம், நாடகம் நடித்தல், அதன் கண் ஒருவனே இராவணாதி பாவகம் உறுதல், பார்ப்பாய வேடம் கட்டி ஆடும் பரிசு முதலிய பலசெய்திகளைக் குறித்தலும் காண்கின்றோம்.

ஈதொன்றோ! இவர்க்குச் சோதிடக் கலை யிலும் நல்ல புலமை அமைந்திருந்த தென்பது, பரபக்கம் 36ஆம் செய்யுளாற் புலனாகின்றது. மேலும்,

''வண்டுகள் ஆகி மாறும் மயிர்க்குட்டி
மற்றோர் செந்துப்
பண்டைய உருவம் தானே
வேட்டுவ னாய்ப் பிறக்கும்''

''இரங்கியவா ரணம்ஆமை மீன் அண்டம்
சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும்
பரிந்திவைதாம் ஆக்கும்...'' [பார்த்தும்

எனப் போதரும் சுபக்கச் செய்யுள்களால் (சுபக் 134, 328). இஞ்ஞான்றைச் சிற்றுயிர்நூற் றுறைகளிலும், அருள்நந்திசிவம் கொண்டிருந்த ஈடுபாட்டுணர்வை இனிது தெளியலாம். இங் ஙனமெல்லாம் இவர் பெற்றிருந்த பலதிறக் கலைப் பயிற்சிகளினாலேயே,

''மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்தயோ
கத்தால்
மணிஇரத குளிகையினால் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய, வேத
சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தமிலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும்...''

எனக் கட்டுரைத்துக் கூறக்கூடிய திறமுடையவ ராகத் திகழ்கின்றார்! இவ்வாற்றால் அருள் நந்தி சிவம் இணையற்றுச் சிறந்துயர்ந்த ஒரு பெரும் 'பல்கலைக் குரிசில்' ஆவர் என்னும் உண்மையை, நன்கினிது நாம் உணர்தல் கூடும்.

உலகியல் நடைமுறை உவமைகள் :

அருள்நந்திசிவம் தாம் கூற எடுத்துக் கொண்ட தத்துவக் கருத்துக்கள், பொது மக்க ளால் உணரப்படுதற்கு மிகவும் கடினமானவை எனினும், அவற்றை 'எண்பொருளவாகச்செலச் சொல்லி' இன்சுவைகெழும விளக்குந் திறம் பெரிதும் உடையவராகத் திகழ்கின்றார். யாவ ரும் இனிதறிந்த உலகியல் நடைமுறைகளில் வைத்துத் தாம் கூறுதற்குரிய கருத்துக்களை எளிமையமையவும் சுவைபொருந்தவும் அவர் கூறிச் செல்லுந்திறம் பெரிதும் வியந்து மகிழற் பாலதாயுள்ளது. இறைவன் மாயையினின்று உலகங்களைப் படைக்கும் முறைமையினை,

''காரிய காரணங்கள் முதல்துணை
நிமித்தம் கண்டாம்;
பாரில்மண், திரிசை, தண்ணு
மவன், முதல் துணைநிமித்தம்;
தேரின்மண் மாயை யாகத்,
திரிகைதன் சத்தி யாக,
ஆரியன் குலால னாய்நின்று
ஆக்குவன் அகிலம் எல்லாம்!''

எனவும், இறைவனது மறக்கருணையின் இயல் பினை,

''தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொ
லாற்றின்
வந்திடா விடின், உறுக்கி வளாரினால் அடித்துத்தீய
பந்தமும் இடுவர், எல்லாம் பார்த்திடிற் பரிவே
யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ, ஈசனார் முனிவும்
என்றும்?''

எனவும்; உயிர்கள் இன்ப துன்பங்களை நுகரு மாறு செய்து, இறைவன் அவற்றின் நல்வினை தீவினைகளை முறையே அறுத்துத் தீர்த்தரு ளும் செய்தியினை,

''மண்ணுளே சிலவியாதி
மருத்துவன் அருத்தியோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடும்; சிலநோய் எல்லாம்
கண்ணிய கட்டிபாலும் கலந்துடன்
கொடுத்துத் தீர்ப்பான்;
அண்ணலும் இன்ப துன்பம்
அருத்தியே வினைஅறுப்பன்''

''மறைகள் ஈசன்சொல் ,அச்சொல்
வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள் மாநிரயம், இட்டபணி
செய்வோர் செல்வத்தோடும்
உறையும்மா பதிகள் உம்பர்
உலகங்கள்; யோனிக் கெல்லாம்
இறைவன் ஆணையினால் இன்ப
துன்பங்கள் இயைவ தாகும்!''

எனவும்; இறைவன் மாயாமலத்தினின்று தனு கரண புவன போகங்களைப் படைத்தளித்து உயிர்களின் ஆணவ மலத்தினைப் போக்கும் தன்மையினை,

''எழும்உடல் கரணம் ஆதி
இவைமலம்; மலம், மலத்தாற்
கழுவுவன் என்று சொன்ன
காரணம் என்னை? என்னில்,
செழுநவ அறுவை சாணி
உவர்செறி வித்து, அழுக்கை
முழுவதும் கழிப்பன்; மாயை
கொடுமலம் ஒழிப்பன் முன்னோன்!''

எனவும்; யாவரும் இனிதறிந்த எளிய உலகியல் நடைமுறை உவமைகளின் வைத்து, அரிய பெரிய தத்துவக் கருத்துக்களை, அருள்நந்தி சிவம் விளக்கியருள்யிருக்கும் வித்தகத் திறம், பெரிதும் வியந்து போற்றத் தகுவதொன்றன்றோ?

புராண கதைகள்:

தத்துவக் கருத்துக்களும் செய்திகளும் பொதுவாகப் பெரும்பாலான பாமர மக்களுக்குச் சுவைபயவாதவை; அவர்களாற் புரிந்துணர்ந்து கொள்ளப்படுதற்குக் கடினமானவை (1). எனினும், அவற்றை இங்ஙனம் உலகியல் நடைமுறை யுவமைகளைக் கொண்டு மட்டுமேயன்றி, இனிய எளிய புராண கதைகளை எடுத்துக் காட்டியும், தாம் விளக்கத் தலைப்படும் கருத்துக்களைக் 'கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறுபோல' இனிமையூட்டிச் சுவைநிரம்பச் செய்து 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாக்கி 'விளக்கிச் சொல்லும் சொல்வன்மைத் திறத்தில், அருள்நந்திசிவம் தனிப் பெருஞ் சிறப்புற்றொளிர்கின்றார்! இவ்வாற்றால், கற்றறிந்த ஒரு சிலருக்கே தனியுரிமையுடைமையாகக் கருதப் பெற்றுவந்த தத்துவநூற் செய்திகளைப் பெரும்பாலான பாமர மக்கள் அனைவருக்குங்கூட உரிய பொதுவுடைமையாகத் தமிழிற் செய்தருளிய பெருமை (2), ஆசிரியர் அருள்நந்தி சிவத்தினைச் சாரும் எனலாம். அவர் ''சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும்'' எனச் சுட்டியருளிய குறிப்பின் நுட்பமும், நம்மனோர் நனியெண்ணி யுணரற்பாலது. முதல்வன் அசிந்திதனாயினும் சிந்திதனாய் உருவத் திருமேனி கொள்ளுதல் உலகுயிர்களுக்கு அருள்புரிதற் பொருட்டே என்பதனை,

''நாயகன் கண்ந யப்பால்
நாயகி புதைப்ப, எங்கும்
பாயிருள் ஆகி மூடப்,
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே
சுடர்ஒளி கொடுத்த பண்பில்,
தேயமார் ஒளிக ளெல்லாம்
சிவன்உருத் தேச தென்னார்''

என்றும், இங்ஙனம் உலகுயிர்களுக்குப் பல்வேறு வகைப்பட அருள்புரிதொழிலை நிகழ்த்துதற் பொருட்டு, ஒன்றொடொன்று ஒவ்வா வேடமாகிய பலதிற உருவத் திருமேனிகளைக் கொண்டு, உலகை நீங்கி நிற்கும் இறைவன், உலகினுக்கு உயிருமாய் நிற்கும் இயல்பினை,

''கண்ணுதல் யோகிருப்பக் காமன்நின் றிடவேட்
கைக்கு
விண்ணுறு தேவர்ஆதி மெலிந்தமை ஓரார்!மால்
தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித்து, இமவான்
பெற்ற
பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப் பேரின்பம் அளித்
ததோரார்''

என்றும்; இறைவன்பால் அன்பில்லாதார் செய்யும் சிறந்த அறங்களும் மறமாகும், இறைவன்பால் அன்புடையோர் செய்யும் கொடிய மறங்களும் நல்லறமாகும் என்னும் கருத்தினை,

''அரனடிக்கு அன்பர் செய்யும்
பாவமும் அறம் அதாகும்;
பரனடிக்கு அன்பி லாதார்
புண்ணியம் பாவம் ஆகும்;
வரமுடைத் தக்கன் செய்த
மாவேள்வி தீமை யாகி,
நரரினிற் பாலன் செய்த
பாதகம் நன்மை யாய்த்தே''

என்றும்; பிறவிதோறும் உயிர்களின் கன்மத்துக்கேற்ப உடம்பும், மூலவடிவமும் (யோனியும் அச்சும்) மாறும் என்னும் உண்மையினை,

''அகலியை கல்ல தானாள்,
அரிபல பிறவி பெற்றான்,
பகலவன் குலத்திற் றோன்றிப்
பாரெலாம் முழுதும் ஆண்டு
நிகரிலா அரச னாகும் சிலந்தி,
நீடுலகம் போற்றச்
சகமதில் எலிதான், அன்றோ?
மாவலி யாய்த்துத் தானே?''

என்றும்; அருள்நந்திசிவம் இனிய எளிய புராண கதைகளை வாயிலாகக் கொண்டு, அரிய பெரிய தத்துவநூற் கருத்துக்களைச் சுவைபெருக விளக்கியுள்ளமை காணலாம். ஆயினும், இது

---

1. "It is easy to smile at the exquisite rhapsodies of Plato or the dull dogmatism of Descarte or the arid empiricism of Hume or the bewildering paradoxes of Hegel, and yet withal there is no doubt that we profit by the study of their works."

—Dr. S. RADHAKRISHNAN, *Indian Philosophy*, p. 55

2. "They are the great literature of the country, and at the same time vehicles of the great systems of thought. The Puranas contain the truth dressed up in myths and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in metaphysics is achieved in India."—*Ibid.*, *p.* 25.

பற்றிச் சைவசித்தாந்தத்திற்குப் புராண கதைகளே அடிப்படைபோலும் என்று எவரும் கருதிவிடற்க! இப்புராண கதைகளெல்லாம் 'கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்' கூறுதற்குரிய ஆசிரிய இலக்கணத்திற் கேற்ப 'அவ்வளவின் அவன் மகிழ்க' என்னும் நியாயம் பற்றி எடுத்தாளப் பட்டனவேயன்றிப் பிறிதில்லை என, அனைவரும் கடைப்பிடிக்க.

தத்துவநூலில் நீதிநூற் கருத்துகள்:

இந்தியத் தத்துவ நூல்கள் உலகியல் நடைமுறை ஒழுக்க இயல்புகள் (ETHICS) குறித்து விளக்குவதில்லை என, மேலை நாட்டு அறிஞர்கள் ஒரு சிலர் குறை கூறுவதுண்டு (3). ஒழுக்கம் என்னும் அடிப்படைக் கால்கோளின் மீது தான், சமயவுணர்வும் வாழ்வும் ஆகிய பெருமாளிகை அமைந்து திகழ்தல் இயலும். ஒழுக்கம் இல்லாதபொழுது வெறும் சமயவுணர்வும் நம்பிக்கைகளும் சிறிதும் பயன்படமாட்டா. உயர்ந்தஒழுக்க நெறியில் நின்று உள்ளத்தூய்மையையும், உயிர்த் தூய்மையையும் பெற்ற புனிதப் பெரியோர்களுக்கே, தத்துவச் சிந்தனை உலகில்மிகமேலான மெய்யுணர்வுக் கருத்துக்களைக் கண்டுணர வல்ல பெருநலங்கள் வாய்ப்பனவாகும் (4). இவ்வுண்மைகளை எல்லாம் செவ்விதின் உணர்ந்தவர் நம் அருள்நந்திசிவம்! ஒருசில மேனாட்டுத் தத்துவ நூலாசிரியர்களின் வரலாற்றினை நாம் படித்துப் பார்க்குங்கால், அவர்கள் உலகியல் ஒழுக்க நலங்கள் குறித்துப் பெரிதும் கருத்துச் செலுத்தியவர்கள் அல்லர் என்பது புலப்படும். அன்றியும், மேலைநாட்டுத் தத்துவ ஆசிரியர்களிற் பலர், வெறும் அறிவாராய்ச்சித் துறைகளில் மட்டுமே பெரிதும் ஈடுபட்டு நிற்கக் காண்கின்றோமேயல்லாமல், கடவுளுணர்வில் தலைசிறந்து நிற்கக் காண்கின்றிலேம். மற்று நம் இந்திய நாட்டிலும் கூட, ஒருசில தத்துவ ஆசிரியர்கள் கடவுளுணர்வு இல்லாதவர்களாக இருந்திருக்கின்றனர். இத்தகைய குறைபாடுகளுக்கெல்லாம் ஆசிரியர் அருள்நந்திசிவம் தமது நூலில்இடந்தரவில்லை. அவர் தமது ஒப்புயர்வற்ற தத்துவ நூலாகிய சிவஞான சித்தியாரின்கண் ஒழுக்க நெறிமுறைகளைப் பெரிது வற்புறுத்துகின்றார்! கடவுளுணர்வும் வழிபாடும் மக்களுக்கு இன்றியமையாதன எனக் கட்டுரைத் தருள்கின்றார்!

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்க ளானால்,
இரங்குவான் பணி அறங்கள்"

என்னும் செய்யுளால், உலகத்தோடு ஒட்ட ஒழுகல், யாவர்மாட்டும் நேயமுடைமை, இரக்கமுடைமை, நற்கடைப்பிடியுடைமை, தக்கவர்களைப் போற்றும் தன்மை, பிறர்பாற் கலந்து பழகும் இயல்புடைமை, இன்சொல் முதலிய நற்பண்புகளுடைமை, ஐம்பொறியடக்கல்-விரதங்காத்தல்முதலியதவமுடைமை, தக்கோர்க்கு உவகையோடு அளிக்கும் கொடையுடைமை, தன்னின்மூத்தாரை வழிபடுதல், பணிவுடைமை, மெய்ம்மை, பிறன்மனையையும் வரைவின் மகளிரையும்விழையாமையாகிய ஆண்டகைமை, தீநெறிக்கட் செல்லாத புலனடக்கம், தக்கன இன்ன தகாதன இன்ன என்று பகுத்தறிதல், கல்வி கேள்வி முதலியவற்றின் உயர்ந்தாரைச் சிறப்பித்தல் என்னும் பதினாறும், சமய வாழ்க்கைக்குப் பொதுவகையான் வேண்டப்படும் இன்றியமையா அடிப்படை ஒழுக்கப் பண்புகள் என விதித்தும், இவற்றின் மறுதலைத்த தீமைகளைச் சமய வாழ்க்கையொடு மாறுகொள்ளும் குற்றங்கள் என விலக்கியும், ஆசிரியர் அருள் நந்திசிவம் அருளிச் செய்திருத்தல், ஈண்டு நாம் அறிந்தின்புறற்பாலது! இவ்வாற்றால் சிவஞான சித்தியார் ஆகிய தத்துவநூலில் நீதிநூற் கருத்துக்களும் விரவிப் பயின்று வந்துள்ளமை காணலாம்.

இவ்வாறே மனிதப் பிறப்பின் அருமை, உலகியல் வாழ்க்கையின் நிலையாமை, இறை வழிபாட்டின் இன்றியமையாமை முதலிய செய்திகளையும், ஆசிரியர் அருள்நந்தி சிவம் இனிதெடுத்து உருக்கம் மிக உணர்த்தும் திறம், எவருள்ளத்தையும் கவரும் இயல்புடைய தாகத் திகழ்கின்றது.

"நரர்பயில் தேசம் தன்னில்
நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல்
மிக்கபுண் ணியந்தான் ஆகும்!
தரையினிற் கீழை விட்டுத்
தவஞ்செய் சாதியினில் வந்து
பரசம யங்கள் செல்லாப்
பாக்கியம் பகரொ ணாதே" (1)

"மானுடப் பிறவி தானும்
வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்
அரன்பணிக் காக அன்றோ?
வானிடத் தவரும் மண்மேல்
வந்தரன் தனைஅர்ச் சிப்பர்!
ஊனெடுத் துழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ!" (2)

---

(3) "It is often urged against philosophy that it is non-ethical in character.....Ethical perfection is the first step in divine knowledge"—*Ibid.* 52.

(4) "The highest triumphs of philosophy are possible only to those who have in themselves a purity of soul..."—44.

(5) "The Samkhya system is silent about the existence of God, though certain about its theoretical indemonstrability. Vaisesika and Yoga while they admit a supreme being,do not consider Him to be the creatorof the universe and Jaimini refers to God only to deny his providence and moral government of the world. The early Buddhist systems are known to be indifferent to God, and we have also the materialist Carvakas, who deny God, ridicule the priests, revile the Vedas and seek salvation in pleasure."—*Ibid*, 27.

''ஒருபுலன் நுகரும் போதுஅங்கு
ஒன்றில்லை; ஒன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி
வந்திடும்; எல்லாம் மாறும்;
ஒருபொழுது உணரின் உண்டாம்
அல்லதுஇவ் அல்லல் வாழ்க்கை,
மருள்கன வதுவும் போல
மாயும் பின் மாயும் அன்றே!'' (3)

''பிணத்தினை ஒத்து வாழ்வோர்
பின், நடைப் பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர்! உங்கள்
உடலுயிர் உணர்வு மெல்லாம்!
கணத்திடைத் தோன்றி மாயும்
காயம்என் றறிந்தொ ருக்கால்
வணக்குநீர் அரனை! என்றும்
வானவர் வணங்க வைப்பன்!'' (4)

இறையருட்டிறன் :

இந்தியச் சிந்தனைகளெல்லாம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள இனிய நேயத் தொடர்பினை விளக்கும் முறையில் அமைந்துள்ளன. ஆனால் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே பெரியதோர் இகலும் பகையும் ஏற்பட்டிருப்பது போன்றே, மேலை நாட்டுணர்வு சென்றுள்ளது. இவ்வுண்மைக்கு இவ்விரு நாட்டின் புராண கதைகளும் சான்று பகரும் என்பர் அறிஞர் (6). அஃதெங்ஙன மாயினும், இறைவன் உயிர்கள் மாட்டுப் பேரருள் கொண்டு புரிந்தருளும் அருட்டிறங்களையெல்லாம் ஆசிரியர் அருள்நந்திசிவம் அழகுற விளக்கியருள்கின்றார். அகளமாய் யாரும் அறிவரிய நிலையிலுள்ள இறைவன், தனது பேரருட்டிறனால் மக்களெல்லாம் ஈடேறுதற் பொருட்டுச் சகள வடிவம் மேற்கொண்டு, மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல, மானுடச்சட்டை தாங்கிப், பலவகைத் தீக்கைகளைச் செய்து, மலமாசுகளை அகற்றித் தூய்மை செய்து ஆட்கொண்டு, சிவபோகப் பெருவாழ்வையளித்தருளும் பெருங்கருணை நலத்தினைப் பின்வரும் சிவஞானசித்தியார் செய்யுட்கள் சிறப்புற விளக்குதல் காணலாம்!

''மன்னவன்றன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்,
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமாபோல்,
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்,
துணைவனையும் அறியாது துயருறும்தொல்
லுயிரை,
மன்னும்அருட் குருவாகி வந்து, அவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்!
(1)

''சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண்
சேர்த்திச்,
செனனமொன்றி லேசீவன் முத்தர் ஆக
வைத்துஆண்டு, மலங்கழுவி, ஞான வாரி
மடுத்து, ஆனந் தம்பொழிந்து, வரும்பிறப்பை
அறுத்து,
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன்! என்று
மொழிந்திடவும், உலகரெலாம் மூர்க்கர் ஆகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்! இதுஎன்ன
பிராந்தி?'' (2)

(தொடரும்)

(6) " There is a cordial harmony between God and and man in Indian thought, while the opposition between the two is more marked in the West. The mythologies of the peoples also indicate it. The myth of Prometheus, the representative man, who tries to help mankind by defending them against Zeus who desires to destroy the human race and supplant them with a new and better species, the story of the labours of Hercules who tries to redeem the world, the conception of the Christ as the Son of Man, indicate that man is the Centre of attenion in the West......In India man is a product of God. The world is due to the sacrifice of God. The Purusha Sukta speaks of such an eternal sacrifice which sustains man and the world."

—*Ibid.*, 41.

" இல்லை!எவர், ஏதும் இணை "

(வெண்பா)

''தத்துவ ஞானநலச் சான்றோர் தலைவர்'' என,
எத்தகையோ ரும்போற்றி ஏத்தும்உயர் — வித்தகராம்
நல்லஅருள் நந்திசிவம், நற்சிவ ஞானசித்திக்(கு),
இல்லை!எவர், ஏதும் இணை*.

—ந. ரா. முருகவேள்

* அருள்நந்தி சிவத்திற்கு எவரும் இணையில்லை; சிவஞானசித்தியார் என்னும் நூலுக்கு ஏதும் இணையில்லை என்பது பொருள்.

விநாயகர் திருவுருவ விளக்கம்

விநாயகப் பெருமானின் திருவுருவ அமைப்பு, பல தத்துவ நுண்பொருள்களை உள்ளடக்கிக் கொண்டு, தெள்ளிதின் விளக்குவதாகத் திகழ்கின்றது. அவை வருமாறு:

(1) ஒப்புயர்வற்றவர் என்பதை விநாயகரென்ற பெயரால் அறிகிறோம்; வீநாயகர்-தமக்குமேல் ஒருவர் இல்லாதவர்.

(2) ஆண் பெண் அலியல்லாதவர் என்பதை ஒற்றைக்கொம்பு உணர்த்துகின்றது; ஆணென்றால் இருகொம்பு வேண்டும்; பெண்ணென்றால் கொம்பில்லா திருத்தல் வேண்டும்; அலி என்றால் மதமில்லா திருத்தல் வேண்டும். விநாயகருக்கு, ஞானமதம் உளதெனச் சைவநூல் கூறும்.

(3) பரை முதலிய பஞ்ச சக்திகளை உடையவரென்பதை, அவரது ஐங்கரங்கள் குறிக்கும். அவ்வைங் கரங்களாலும், ஐந்தொழில்கள் புரிந்து, ஐந்து மலங்களையும் அழித்தலால் அவைகளைச் சக்தி என்கிறோம்.

(4) பேரருளுடையவர் என்பதைத் துதிக்கை உணர்த்தும்; கொடுத்தற்காக எவரிடத்துமில்லாத நீண்ட கரமுடைவராய் இருத்தலால்.

(5) பரந்த நோக்கம் உடையவர் என்பதை, அவரது சிறிய கண்கள் குறிக்கும். பரந்த நோக்கம் எங்கும் நோக்கும். குறுகிய கண் மிகத் தூரமாக நோக்குமென்பதைத் தொலைநோக்கிக் கண்ணாடி ஒப்புமையால் அறியலாம்.

(6) எங்கும் நிறைந்தவர் என்பதை அவருடைய பெருவயிறும், பெருங்காதும் குறிக்கும். பெரு வயிறு எல்லா உலகங்களையும் தன்னகத்தே அடக்கியது. பெருங்காது எந்த உலகத்திலிருந்து குறை யிரந்தாலுங் கேட்கவல்லது.

(7) மாயையைத் தம் விருப்பத்துக்கு ஏற்ப இயக்குபவர் என்பதை, அவரது அரவக்கச்சு உணர்த்தும். அரவம் மாயையைக் குறிக்கும்.

(8) என்றும் உள்ள நித்தியர் என்பதை அவருடைய குறுந்தாள் உணர்த்தும். குறுந்தாள்-சிறு தாள், குட்டைக்கால். அதனால் அவருக்குப் பிள்ளையாரென்ற திருநாமம் உண்டு. பிள்ளையார், என்றும் இளமையராதலின் நித்தியரானார்.

(9) இன்ப அன்பு வடிவர் என்பதை அவரது பிரணவமுகம் குறிக்கும். முகம் பிரணவம்(ஓ)போன் றிருத்தலை ஆழ்ந்து நோக்கியுணரலாம். பிரணவமானது சிவபீஜ-சத்திபீஜா அக்கரங்கள் சேர்ந்த எழுத் தாதலாலும், சிவம் இன்பமும் சத்தி அன்பும் ஆதலாலும், பிரணவ முகம் சிவசத்தி சொரூபத்தைக் குறிக்கும் இன்ப அன்பு வடிவாகும்.

(10) வரம்பிலின்பம் உடையவர் என்பதை அவரது பிறைச் சந்திரன் குறிக்கும். சந்திரன் அமுத கலையோடு கூடியதாதலாலும், விநாயகர் திருமுடியில் விளங்குவது ஞானசந்திர கலையாதலாலும், பிறைச்சந்திரன் இன்பந் தரும் பொருளாதலை அறிக.

(1) ஒளிவடிவினர் என்பதைச் சந்திரன், சூரியன், அக்கினி என்னும் அவரது மூன்று கண்களும், செம்மேனியும் குறிக்கும். சந்திரன், இடக்கண். சூரியன் வலக்கண், அக்கினி நெற்றிக் கண்.

(12) அளவிலாற்றலுடையவர் என்பதை அவரது பாசம், அங்குசம் என்னும் படைகள் குறிக்கும். அவைகள் தமது ஆணைவழி நில்லாதவரைக் கட்டி அடக்கி நிறுத்தும்.

(13) அறியாமை ஆகிய இருளை அடக்குபவர் என்பதை அவரது பெருச்சாளி என்னும் வாகனம் உணர்த்தும். மூஷிகத்தைத் தமது திருவடியின் கீழ் வைத்துக் காத்து, அதன் வலிமையை மட்டுமே அழித்து நிற்றலால், அது துணியப்பெறும். அஞ்ஞானத்தைச் செய்யும் ஆணவமலமானது, முத்தியில் முதல் அழியாது தனது வலிமையிழந்து நிற்குமென்ற சிறந்த சைவசித்தாந்தக் கொள்கையை, இது வலியுறுத்தும்.

—ஆசிரியர்

"மயில் ஏறும் இராவுத்தன்"

முன்னுரை

'இராவுத்தன்' என்பது தமிழிற் கலந்து வழங்கிவரும் ஓர் அராபியச் சொல். இதற்குக் குதிரைவீரன் என்பது பொருள். இது 'ரவா' 'துதா' என்னும் இரு சொற்களினின்று தோன்றியதாக அறிஞர்கள் கூறுவர். ரவா-அரசன்; துதா-செய்தியாளன். அரசனுக்கு அல்லது அரசனிடமிருந்து, செய்தி கொணரும் குதிரை வீரன் என்னும் பொருளில், பண்டைநாளில் இச்சொல் வழங்கி வந்தது. இச்சொல் நாளடைவில், அராபிய நாட்டினின்று தமிழகத்திற்குக் குதிரைகள் கொணர்ந்து விற்கப் போந்த, இசுலாமியர் குலப் பெருமக்களைக் குறிப்பதாயிற்று.

குதிரை வீரன் என்னும் பொருளையுடைய 'இராவுத்தன்' என்னும் இச்சொல்லின் அமைப்பும் தோற்றமும் பொருளும் பற்றிய ஆராய்ச்சி எவ்வாறாயினும், இஃது இந்நாளில் இசுலாமிய குலத்துப் பெருமக்களையே குறிப்பதாக வழங்கி வருவதனை அனைவரும் அறிவர். முசுலீம்களிற் பலர், தம்முடைய பெயரோடு இச்சொல்லைச் சேர்த்துத் தம்மை வழங்கிக் கொள்ளுகின்றனர். முசுலீம்களில் ஒருவகை இனத்தார்க்குரிய சிறப்புப் பெயராகவே, இந்நாளில் இச்சொல் கையாளப் பெற்று வருகின்றது.

அருணகிரிநாதர்

ஆயினும் இவ்வினிய சொல்லை, முருகனுக்கு உரிய பெயர்களுள் ஒன்றாக, முருகன் அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் ஆகிய அருணகிரிநாதர், விதந்தெடுத்து வழங்கி மகிழ்கின்றார்.

''கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை,
மொண்டுண் டயர்கினும், வேல்மறவேன்;
முது கூளித் திரள்
டுண்டுண் டுடுடுடு டுடே
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆட,
வெம்சூர்க் கொன்ற ராவுத்தனே''

''படிக்கும் திருப்புகழ் போற்றுவன்;
கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந்து, அஞ்சல்!
என்பாய்; பெரும்பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா! கொடுஞ்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே''

— கந்தர் அலங்காரம்

எனவரும் பாடல்களில், அருணகிரிநாதர் முருகப்பெருமானை 'இராவுத்தன்' என்று சிறந்தெடுத்துப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

முசுலீம் மக்களைக் குறிக்கும் 'இராவுத்தன்' என்னும் சொல்லால், அருணகிரிநாதர் முருகப்பெருமானைக் குறிப்பிட்டுத் துதித்துப் பாடியிருப்பது, நாம் பெரிதும் சிந்திப்பதற்கு உரியது. இஃது அவர்தம் கலைநிலையினையும், அவரது சமரச மனப்பான்மையினையும் இனிது விளக்குவதாகும்.

சபாசு, சலாம்

திருப்புகழ் என்னும் தெய்வநலஞ்சான்ற சிறந்த இனிய பாடல்களைப் பாடியருளிய அருணகிரிநாதப்பெருமான், பிரபுடதேவ மாராயர் என்னும் விசயநகரச் சிற்றரசரின் காலத்தில் வாழ்ந்தவராகத் தெரிகின்றது. ஆதலின் அவர்தம் காலம் கி. பி. 15 ஆம் நூற்றாண்டாகும். முசுலீம் மக்கள் தென்னகத்திற் பரவிப் பெருகி வாழ்ந்து வரத் தலைப்பட்டு, ஆங்காங்கே ஆட்சி செய்தும் வந்த காலம் அது! எனவே, அக்காலத்தில் இசுலாமியச் சொற்கள் பல, தமிழ்நாட்டு மக்களின் பேச்சு வழக்கிற் பரவிக் கலப்பனவாயிற்று. ''கடிசொல் இல்லை காலத்துப் படினே'' என்னும் தொல்காப்பிய நூற்பாவிளைத் தழுவி, ஒரோவழி சபாசு (Shah Abbas), சலாம் என்பன போன்ற சில சொற்கள், தமிழ்க்கவிதைகளிலும் இடம்பெறலாயின.

''கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுறச்
சித்தர் விஞ்சையர் மாகர் சபாசுஎனக்
கட்ட வெங்காடு சூர்கிளை
வேர்அற விடும்வேலா''

''சுராதி பதிமால் அயனொடு சலாம்இடு
சுவாமி மலை வாழும் பெருமாளே'

என அருணகிரிநாதர், தமது திருப்புகழ்ப் பாடல்களில் சபாசு, சலாம் என்னும் அயல் மொழிச் சொற்களை வழங்கியிருத்தல் காண லாம்.

அருணகிரிநாதரின் அருள்உள்ளம்

அருணகிரிநாதர், பரந்து விரிந்த சிறந்த உள்ளம் உடையவர்; நல்ல சமரச மனப் பான்மை வாய்ந்தவர்; எங்கிருந்தாலும் நல் லோரையும் நல்லனவற்றையும் இகழாது தழுவி ஏற்று மகிழும் இயல்புடையவர்; மொழி சமயம் இனம் முதலியன பற்றிய குறுகிய நோக்கங்கள் இல்லாதவர்; மக்களிடையே அன்பையும் ஒற்றுமையையும் பண்பாட்டை யும் வளர்க்கும் குறிக்கோள் கொண்டவர். அவர்தம் திருப்புகழ்ப் பாடல்களில், செந்தமிழ் நலம் சிதையாமல், ஏற்ற பெற்றி வடமொழி யும் கலந்து, சந்தநலம் செறிந்து சிறந்தினிது நிற்கும்; சைவ வைணவ சமரச நோக்கும் போக்கும், அருணகிரிநாதரால் பெரிதும் போற் றப் பெற்றன; ''காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி' என்பது பழமொழி. இறையருளில் திளைத்து இன்புற்ற அருணகிரிநாதரின் அருள் உள்ளத்தில், இனவேறுபாடு முதலிய குறுகிய நோக்கங்கள் இடம் பெற்றில. அதனால், அவர் தமது வழிபடு கடவுளும் தமிழ்த்தெய்வ மும் ஆகிய முருகனையே 'இராவுத்தன்' எனக் கூறி மகிழ்ந்து புகழ்ந்து போற்றுகின்றார்!

தாராஷுகோ :

இனி, வேறொரு முதன்மையான செய்தி யும், இங்கு நாம் குறிப்பிடுவதற்கு உரியது. இந்து மதத்திற்குரிய பிரமாண நூல்களுள் உப நிடதங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன என்பதை அனைவரும் அறிவர். 'பிரஸ்தானத்திரயம்' என்னும் நூல்களுள், உபநிடதங்களும் ஏற்றுத் தழுவிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்து மதத்திற்குரிய உபநிடதங்களின் உயர்வும் சிறப்பும் அறிந்து போற்றி, அவற்றை உலகிற் பரப்பிய பெருமை, ஒரு முசுலீமுக்கே உரிய தாகும். நம்முடைய நாட்டில் அரசுபுரிந்த மொகலாய அரசர்களுள் ஒருவரான ஷாஜகான் என்பவரின் மூத்த புதல்வனும், அவுரங்கசீப் மன்னனின் அண்ணனுமான தாராஷுகோ என்னும் புகழ்பெற்ற சிறந்த பேரறிஞர், கி.பி. 1657-ஆம் ஆண்டில் பல புலவர்களின் உதவி யைக் கொண்டு, ஐம்பது முதன்மையான உப நிடதங்களைப் பாரசீகத்தில் மொழிபெயர்த் தார். இம்மொழி பெயர்ப்பினைக் கொண்டே, ஐரோப்பிய அறிஞர்கள், கி. பி. 1801-ஆம் ஆண்டில். இலத்தீன் மொழியில் முதன் முத லில் உபநிடதங்களை மொழி பெயர்த்தார்கள். அதற்குப் பிறகுதான், மேலைநாட்டில் இந்திய நாட்டு உபநிடதங்களின் பெருமை பரவலா யிற்று. இந்தியத் தத்துவஞான நூல்களாகிய உபநிடதங்களின் சிறப்பு; இங்ஙனம் ஒரு முசுலீம் மன்னவ குமாரனால் உலகத்திற் பரவி வளரத் தலைப்பட்டதென்பது, ஒருவகையில் வியப்பிற்குரிய, மகிழ்ச்சி விளைவிக்கத்தக்க, செய்தியே யன்றோ!

முடிவுரை

இத்தகைய சமய சமரசஞான நல்லுணர்வு, உலகமெங்கும் தழைத்து வளர்ந் தோங்கிப் பரவி, மக்கட் குலமனைத்தும் ஒரு குலமாய்த் தக்காங்கு உவந்து இனிது ஒன்றிவாழ ''மயி லேறும் இராவுத்தன்'' ஆகிய முருகனின் மலரடி களை வாழ்த்தி வணங்குவோமாக!

—ஆசிரியர்

ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம்

ஒரு சிறந்த திருமால் அடியவர்க்கு இன்றிமையாமல் இருக்க வேண்டிய இயல்புகள் பத்து ஆகும். (1) இறைவனைத் தவிர்ந்த வேறு புறப் பொருள்களில் கொண்டுள்ள பற்றுக்கள் முழு வதையும், அவற்றின் வாசனையும் இல்லாதபடி விடுத்தொழித்தல். (2) இறைவன் ஒருவனையே அடைக்கலமும் புகலிடமுமாகச் சரணாகதி அடைந்து பற்றிக் கொள்ளுதல். (3) இறைவனருளால் கிடைத்தற்கரிய பேறு தப்பாமல் கிடைக்கும் என்று உறுதியாகத் துணிந்திருத்தல். (4) இறைவன் அருளைப் பெறுதலில் மிக்க வேட்கையும் விரைவும் உடையவனாதல். (5) இவ்வுலகில் உடம்போடு கூடி வாழ்ந்துவரும் நாட்களில் இறைவன் விரும்பி எழுந்தருளும் திவ்வியதேசங்களுக்குச் சென்று, இறை வனுடைய கல்யாண குணங்களை அறிந்து அநுபவித்து அவனுக்குத் தொண்டு செய்தலிலேயே வாழ் நாளைக் கழித்தல். (6) இத்தகைய சிறந்த இயல்புகளை உடைய ஸ்ரீ வைஷ்ணவப் பெருமக்களை அறிந்து, அவர்களின் பெருமையினைப் போற்றி வியந்து கொண்டாடி மகிழ்ந்திருத்தல். (7) பிற மந்திரங்களின் அருகே மறந்தும் செல்லாமல், திருமந்திரத்திலும் அதன் பொருளை விளக்குகின்ற த்வயத் திலும் ஈடுபட்டு ஒழுகுதல். (8) தன்னுடைய ஆசாரியனிடத்தில் அளவில்லாத பக்தியும் பிரேமமும் உடையவனாக விளங்குதல். (9) ஆசாரியனிடத்திலும் இறைவனிடத்திலும் அவர்கள் செய்துவரும் பெரும் உதவிகளுக்காக இடையறாது நன்றி உணர்வு கொண்டவனாகத் திகழ்தல். (10) மெய்யுணர்வு பற்றின்மை அமைதியுடைமை என்னும் பண்புகள் உடைய, மிக மேலான நல்லியல்பு வாய்ந்த ஸ்ரீ வைஷ் ணவர்களோடு நட்பும் தொடர்பும் கொண்டு வாழ்ந்து வருதல். இப் பத்துக் குணங்களும் ஒரு சிறந்த ஸ்ரீ வைஷ்ணவனுக்கு மிக மிக இன்றியமையாதனவாகும்.

இன்கருப்பூர் விருப்பன்

திரு. டாக்டர். இரா. கலைக்கோவன், திருச்சி

தேவாரப் பாடல்களில் தலப்பெயர்மட்டும் குறிக்கப் பெற்ற இடங்கள் வைப்புத் தலங்கள் எனப்படும். நூற்றுக்கு மேற்பட்டவையாய்க் குறிக்கப் பெறும் இத்தகு வைப்புத் தலங்களுள் ஒன்றுதான் கருப்பூர். கூறைநாட்டுக் கருப்பூர் என்ற அழகிய பெயர், இப்போது திரிந்து கொரநாட்டுக் கருப்பூர் என்று வழங்குகிறது. கும்பகோணத்திலிருந்து அண்ணக்கரை செல்லும் வழியில், ஏறத்தாழ ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இத்தலம். திருக்குடந்தைப் புராணத்தில் ஐந்து குரோசத் தலங்களுள் இதுவும் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

'இன்கருப்பூர் விருப்பன்' என்று சுந்தரரால் குறிக்கப் பெறும் இத்தலத்து இறைவன் குடியிருக்கும் கோயிலின் வெளிக்கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. அதிகச் சுதை யுருவங்கள் இன்றி, கண்ணை இருட்டும் வண்ணப்பூச்சுகளின்றி, பழமைப் பாங்குடன் எடுப்பாய்க் காட்சியளிக்கும் இக்கோபுரவாயிலின் நிலைக்கதவுகளில் அழகிய மரச்சிற்பங்கள் பல காணப்படுகின்றன. சில சிற்ப உருவங்கள் சிவபுராணக் கதைகளையும், சில இராமாயணக் காட்சிகளையும், இன்னும் சில வாழ்வியல் படப்பிடிப்புகளையும் கொண்டமைந்துள்ளன. ஆடவர் ஒருவர் மஞ்சத்தில் தூங்கும் தன் மனைவியை, மஞ்சத்தோடு இருகரத்தாலும் தாங்கித் தலையில் சுமந்து கொண்டு நிற்பதுபோல் ஒரு மரச்சிற்பம் அமைந்துள்ளது. மஞ்சத்தின் அமைப்பும், அம்மஞ்சத்தினுடைய கூரையின் அலங்கரிப்பும், அதில் அம்மையார் ஒயிலோடு படுத்திருக்கும் ஒய்யாரமும், தூக்கி நிற்பவனின் துடிப்பும் காணக்காண நம்மை மயக்குவனவாகும். இன்னொரு ஆடவர் மஞ்சத்தோடு சுமப்பதில் மகிழ்ச்சியற்றவர் போல், மங்கையை அப்படியே தன் தோளிலேற்றிக் கொண்டு வருவதுபோல் காட்சி தருகிறார். உருவங்களின் அமைப்பும், தலையலங்காரமும், சிற்பங்களின் கருத்தும், இவை நாயக்கர் காலத்து வேலைப்பாடென்பதைத் தெளிவாக்குகின்றன.

வெளித் திருச்சுற்றில் தென்கிழக்கில் வாகன மண்டபம் அமைந்துள்ளது. இதன் ஒரு பகுதி சிதைந்துள்ளது. மையக்கோயிலின்முன்னால், பெட்டகக் கோயில் அமைப்புடன் பிள்ளையாருக்கு ஒரு கோயில் அமைந்துள்ளது. இதையடுத்துள்ள மூன்றுநிலை உட்கோபுர வாயிலைக் கடந்து உள்நுழைந்ததும், தெற்குப் பார்த்த நிலையில் அம்மன் திருமுன்னைக்காணலாம். அபிராமி அம்மன் என்ற திருப்பெயருடன் தேவி எழுந்தருளியிருக்கும் இத்திருமுன்னுக்கு வடபுறத்தில் சண்டிகேசுவரிக்கென ஒரு சிறு உட்கோயில் உள்ளது. அம்மன் கோயிலின் கருவறைப் புறச் சுவரில் வடக்குத் தேவகோட்டத்தில் திருமால் கொற்றவையும், கிழக்குப் புறத் தேவகோட்டங்களில் நான்முகனும், கொற்றவையும் காணப்படுகின்றனர். அம்மன் கோயில் தேவகோட்டத்தில் நான்முகன்காணப்படுவது சற்று வியப்புக்குரிய செய்தியாகும். இது தற்போது ஏற்பட்ட இணைப்பாக இருக்க வேண்டும்.

இருபுறமும் வாயிற்காப்போர் காவல் செய்ய வெளிமண்டபமொன்று அமைந்துள்ளது. இதன் தென்புறத்தில் நால்வர் திருவுருவங்கள் அமைந்துள்ளன. வடபுறத்தில் கூத்தப்பெருமானின் திருமுன் அமைந்துள்ளது. கிழக்கில் காலபைரவர், முதலிய தெய்வ வடிவங்களும், ஒன்பான் கோள்களும் அமைந்துள்ளன. க்ஷேத்திர பாலர் வடிவத்துக்கும் பைரவர் வடிவத்துக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. பிங்கல நிகண்டு, கஞ்சுகன், காரி, முக்தன், நிர்வாணி, சித்தன், கபாலி, வடுகன், பைரவன், க்ஷேத்திரபாலன் முதலிய அனைத்துப் பெயர்களும் ஒரு வடிவத்தையே குறிப்பதாகக் கூறுகிறது. விக்னேசுவரப் பிரதிஷ்டாவிதி என்னும் நூலும், ஒரு தியான சுலோகத்தில் க்ஷேத்திரபாலரின் வாகனம் நாய் என்று குறிப்பிடுகிறது. பைரவரின் வாகனமும் நாய்தான். இருந்தபோதும் சில ஆகமங்கள் பைரவரைத் தனியாகவும் க்ஷேத்திரபாலரைத் தனியாகவும் விவரிக்கின்றன. இந்த க்ஷேத்திரபாலர் வழிபாடு ஆய்வுக்குரியதாகும். இது எப்படி பைரவர் வழிபாட்டிலிருந்து வேறுபடுகிறது அல்லது அதனிலிருந்தும் கிளைத்தது என்பனவெல்லாம் ஆராயப்படல் வேண்டும். சைவ ஆகமங்களைப் பழுதறக் கற்ற பெரியோரும், வரலாற்று ஆய்வாளர்களும், கல்வெட்டு அறிஞர்களும் இணைந்து செய்யவேண்டிய இதுபோன்ற ஆய்வுகளால் திறக்காத பல கதவுகள் திறக்கும்!

தெரியாமலிருக்கும் எத்தனையோ உண்மைகள் விளங்கும்!

மையக்கோயில், மாடக்கோயில்போல் உயரத்தில் அமைந்துள்ளதே தவிர, மாடக்கோயில் இல்லை. வெளிமண்டபத்திலிருந்து ஒன்பது படிகள் ஏறி மேலே வந்ததும் மகாமண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் சுந்தர மாகாளி அம்மன் என்னும் கருப்பூர்க் காளியின் வடிவம் ஒரு பெட்டியில் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. இம்மண்டபத்தின் வலப் புறக்கோடியில் பிள்ளையோடமர்ந்த அம்மை யும் அப்பனும் காட்சி தருகின்றனர்.

முகமண்டபத்தையடைய இன்னும் நான்கு படிகள் மேலேறிச் செல்லவேண்டும். இங்கிருந்து இம்மண்டபத்தையடையஇன்னும் இரண்டு படிகள் ஏறவேண்டும். இம் முன் மண்டபத்தில் கதிரவனின் வடிவம் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் இருபுறமும் வழிகள் உள்ளன. வடக்குப்புறம் உள்ள வழி, இக்கோயிலில் அமைந்திருக்கும் இன்னொரு உட்கோயிலுக்கு அழைத்துச் செல் கிறது. இங்கும் இறைவன் இலிங்க வடிவில் எழுந்தருளியிருக்கின்றார். இதன் அருகில் சண்டேசுவரருக்கான உட்கோயில் அமைந் துள்ளது. இங்கிருந்தும் படிகள் வழியாக உள் திருச்சுற்றை அடையலாம்.

தென்புறமுள்ள வழி, ஒரு சிறு மண்டபத்தை அடைகிறது. அங்கிருந்து உள் திருச்சுற்றை யடையப் படிகள் இறங்குகின்றன. உள்மண்ட பத்தை வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். கருவறையில் இறைவன் அருள்மிகு சுந்தரேசு வரர் என்ற திருப்பெயருடன் எழுந்தருளியுள் ளார். உள்திருச்சுற்றில் மதிலையொட்டித் திருச்சுற்று மாளிகைபோன்ற அமைப்பு காணப்படுகிறது. தெற்குப் புறத்தில் எழுவர் அன்னையர் சிற்பங்கள் அமைந்துள்ளன. மேற்குப் புறத்தில் நாகர், கதிரவன், பிள்ளை யார் வடிவங்கள் உள்ளன. இம்மேற்கு மாளிகை யின் மத்தியில் முருகன்கோயில் அமைந்துள்ளது.

மேற்குத் திருச்சுற்றில் பிள்ளையாருக்குத் தென்மேற்கு மூலையிலும், மகாலட்சுமிக்கு வட மேற்கு மூலையிலும் விமானங்களுடன் கூடிய தனித்தனி உட்கோயில்கள் அமைந்துள்ளன.

கருவறை உள்மண்டபப் புறச்சுவர்களில் ஐந்து தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. தென்புறக் கோட்டங்களில் பிள்ளையாரும் தென்திசைக் கடவுளும் உள்ளனர். மேற்குப் புறத்தில் லிங்கோத்பவரின் வடிவம் காணப்படு கின்றன. இக்கருவறையின் அடித்தளம் மிகவும் உயர்த்தப்பட்டுள்ளது. துணைத்தளத்திற்கு மேல் தாங்குதளம் பலவித வடிப்புக்களுடன் அமைந்துள்ளன. புறச்சுவர்களில் அதிக வேலைப்பாடுகள் இல்லை. கும்பப் பஞ்சரங் களும், அரைத்தூண்களும் காணப்படுகின்றன. கோட்டப் பஞ்சரங்கள் அத்தனை அழகுடை யனவாய் அமையவில்லை.

விமானம் சதுரமாக அமைந்துள்ளது. சாலைகளும், கர்ண கூடுகளும் சுதையுருவங் களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இம்மூன்று தள விமானத்தின் சிகரம் வட்டமானது.மேலே செல்லச் செல்லத் தளங்கள் குறுக்கப்பட்டு, மூன்றாவது தளம் நாற்கர வடிவிலிருந்து வட்டவடிவிற்கு அமைக்கப்பட்டிருக்கும் நுணுக் கம் சிறப்பானது.

இக்கோயிலில் தற்போது கல்வெட்டுக்கள் எதுவும் காணப்படவில்லை. இங்கிருந்து எந்தக் கல்வெட்டும், படியெடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. இந்நிலையில் இக்கோயிலின் வரலாற்றை நிர்ணயிப்பது மிகக் கடினமான பணியாகும். சுந்தரரால் மட்டுமே இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. சுந்தரரின் காலத்தைப் பல அறிஞர்கள் பல்வேறுவிதமாகக் கூறு கிறார்கள். எப்படியிருப்பினும் அவரை எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டினராகத் தான் கொள்ள முடியும். எனவே சுந்தரர் காலமான கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே இக்கோயில் இருந்தமையை உணரலாம். இது யாரால், எப்போது கற்றளியாக்கப்பட்டது என் னும் கேள்விக்கு விடைகாண்பது அத்தனை எளி தல்ல. கோயிலின் அமைப்பு முறையும், கட்ட டக்கலை நுணுக்கங்களும் கொண்டு நோக்கும் போது, இதை முதலாம் இராசராசனுக்குப் பிற்பட்டு எழுந்த அமைப்பாகத்தான் கருத வேண்டியுள்ளது. மாடக்கோயில் போன்ற அமைப்புடன், மையக்கோயில்களை உயர்த்திக் கட்டத் தொடங்கியது, முதலாம் இராசராச னுக்குப் பிறகுதான். இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் தரலாம். தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழீச்சரம், தாராசுரம் கோயில், திரிபுவனம் கோயில், சோழபுரம் கைலாசநாதர் கோயில், இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் மாடக்கோயில்களல்ல. ஆனால் மாடக் கோயில் அமைப்பு முறையைத் தழுவி அமைக் கப்பட்டவை. கொரநாட்டுக் கருப்பூர் சுந்த ரேசுவரர் ஆலயமும் இம்முறையிலேயேகட்டப் பட்டிருக்கிறது.

எனவே, முதலாம் இராசராசனின் கட்டிட முறையைத் தழுவி, அவனுக்குப் பின்வந்த சோழப் பேரரசர்களுள் ஒருவரே இதையும் கட்டியிருக்க வேண்டும். அந்த மன்னனை இன் னான் எனக் குறிப்பது புறச்சான்றுகள் ஏது மில்லா நிலையில் எளிதல்ல.

திருமந்திர யோகம்

'கவியோகி' 'மகரிஷி'
தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள், சிவகங்கை

(முற்றொடர்ச்சி)

22. ஆசனம்:

ஹடயோகத்தில் எத்தனையோ ஆசனங்கள் உண்டு. பதஞ்சலி, 'ஸ்திர சுகம் ஆசனம்'' என்கிறார். கோணாமல் நிமிர்ந்திருக்க வேண்டும், காலை நீண்டநேரம் தியானிக்கும்படி சுகமாக வைத்துக் கொள்ளலாம் என்பதுடன் நிறுத்துகிறார் பதஞ்சலி. மனத்தை அலையாது உள்ளத்தில் நிறுத்தலே ஞானியின் ஆசனமாகும். மூலசித்தர் எளிதான சில ஆசனங்களைக் குறிக்கிறார்.

பத்மாசனம், ஸ்வஸ்திகாசனம், பத்ராசனம், சிங்காசனம், கோமுகாசனம், வீராசனம் சுகாசனம் ஆகிய ஏழையும் மூலர் உத்தம ஆசனம் என்கிறார். இவற்றுடன் குக்குட ஆசனத்தையும் சொல்லுகிறார். அறுபத்திநான்கு ஆசனங்களில் தியானத்திற்கு முன்சொன்ன ஏழே ஏற்றவை. குடலுக்கும் நரம்புகளுக்கும் பயிற்சியளிக்க சர்வாங்க ஆசனம், சிரசாசனம், ஹலாசனம், பச்சமோத்தான ஆசனம், மச்சாசனம், கர்பாசனம், மயூராசனம், புஜங்காசனம் முதலியவை பயனாகும்.

பத்மாசனம், உறுதியாய் பீடத்தில் அமர்ந்து கால்களைத் தொடைகளில் மடித்து வைத்துக் கைகளை அவற்றின்மேல் வைத்திருத்தல். கைகளைப் பின்புறம் பின்னிக் கால்விரல்களைப் பற்றி நிற்றல் பத்மாசனமாம்.

> ஓரணை யப்பதம் ஊருவின் மேலேறிட்டு,
> ஆர வலித்ததன் மேல்வைத்து, அழகுறச்
> சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
> பார்திகழ் பத்மா சனமென லாமே.

பத்ராசனம்; பீசத்திற்குக் கீழுள்ள சீவலி நாடியில் அழுந்தும்படி குதிகளைச் சேர்த்து, வலக்காலை இடக்கால்மேல் வைத்து, முழந்தாளில் அங்கையை நீட்டி, உடலை அழகாக நேரே வைத்திருத்தல்.

> துரிசில்வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து,
> அரிய முழந்தாளில் அங்கையை நீட்டி,
> உருசியொடும் உடல் செவ்வனே இருத்திப்
> பரிசு பெறுவது பத்திரா சனமே

சிங்காசனம்: மண்டி போட்டு அமர்ந்து, முழங்காலில்கைகளை நீட்டி, வாயை அக்காந்து முக்குமுனையைப் பார்த்தல், கம்பீரமாயிருத்தல் சிங்காசனம்.

> பாதம் முழந்தாளில் பாணிகளை நீடடி,
> ஆதரவோடும் வாய் அங்காத்து, அழகுறக்
> கோதில் நயனம் கொடிமுக்கி லேயுறச்
> சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே

குக்குடாசனம்: பத்மாசனத்தின்படி, காலை மடக்கிக் கைகளை இடையே புகுத்தி, உடலை முக்கி முழங்கையில் ஏற்றி அசையாதிருத்தலாம் இது நீண்டநேரம் தியானிக்க ஏற்றதில்லை.

> ஒக்க அடியினை ஊருவில் ஏறிட்டு,
> முக்கி உடலை முழங்கை தனில் ஏற்றித்
> தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்
> குக்குட ஆசனங் கொள்ளலும் ஆமே

சாதாரணமாக சுவஸ்திகாசனம், சுகாசனம், சிங்காசனம் இவை தியானத்திற்கு எளிதாகும். இவை மங்களாசனம் என்பர். ''சொங்கில்லை யாகச் சுவஸ்திகமெனமிகத் தங்க இருப்பத் தலைவனும் ஆமே'' என்று சோர்வில்லாமல் நீண்ட தியானத்தில் அமர, சம்மணம் என்னும் சுவஸ்திகாசனமே தகுந்ததென்று மூலர் வற்புறுத்துகிறார். ஆசனத்தால் ஆதாரசக்கரங்கள் நேரே நிமிர்ந்திருக்கும் நாடிகள் உறுதியாகும். குண்டலிசக்தி தடையில்லாமல் கோணிக் குறுகாமலிருக்கும். மேகுதண்டத்தின் வழியே ஏறும். தியானிகள் முடிந்தமட்டும் நிமிர்ந்து அமர்க. சிரமமாயிருந்தால் முதுகு கோணாமல் திண்டு வைத்திருக்கலாம். இன்றேல் மல்லாந்து படுத்தும்தியானிக்கலாம். அல்லது நின்றும் தியானிக்கலாம்.

வீராசனம்: ஒரு தொடையின்மேல் மற்றொருகாலை ஏற்றி நிமிர்ந்திருத்தல். கோமுகாசனம் இடது குதிக்காலை வலது குண்டியில், வலது குதிங்காலை இடது குண்டியில் வைத்து உறுதியாக நிமிர்ந்திருத்தல்.

23. பிராணாயாமம்:

பட்சியை வலையிற் பிடிப்பதுபோல், மனதைப் பிராணனில் பிடித்து அலையவிடாது நிறுத்துவதே பிராணாயாமம். மூச்சு உதித்து அடங்குமிடத்திலேதான் சுத்தான்மா உள்ளது. மூச்சுக் குதிரைகள் அடங்கினால், ஆத்மாவும் சலனமற்றிருக்கும். அதனால் சித்தத் தெளிவு, நாடிசுத்தி, மனஒருமை எல்லாம் உண்டாகும். ஞானிகளின் பிராணாயாமம் மூக்கை வருத்துவதன்று, மூச்சை யிழுப்பதன்று. நாஹம் (நான் உலகில்லை, உடலில்லை) என்று அறிவதே. ஞானியின் பூரகம், கோஹம் (நானார்) என்பதே கும்பகம், நான் அவன் (ஸோஹம்) என்றுணர்வதே இரேசமகம்.

பதஞ்சலி பிராணாயாம வகை முறைகளைப் பற்றிச் சொல்லவில்லை. திருமூலர் விரிவாகச் சொல்லுகிறார். திருமூலர் சொல்லுவது உள்ளுயிர்ப்பு (அந்தர்பிராணாயாமம்). வாசிக் குதிரைகளை வீசிப்பிடித் தடக்கினால் இன்பமாகும். குருவருளால் வாசியடக்கும் உபாயம் அறிக. கண்டபடி மூச்சைப் பிடிக்கக்கூடாது. குருதுணை அவசியம்.

> கூரிய நாதன் குருவின் அருள்பெற்றான்
> வாரிப் பிடிக்க வசப்படுந் தானே

பிராணன் மனதுடன் நிலைத்தடங்கினால் அதுவே பிராணாயாமம். அதனால் கள்ளினும் மிக்க களிப்பூறும். பிறவிப் பணி தீரும்.

> பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
> பிராணன் இருக்கிற் பிறப்பிறப் பில்லை

பிராணாயாமத்தில் மூச்சைப் பதினாலு மாத்திரை இடது மூக்கால் இழுத்தேற்றுதல் பூரகமாம்; அறுபத்து நான்கு மாத்திரை உள்ளே அடக்குதல் கும்பக மாகும். முப்பத்திரண்டு விடுத்தல் இரேசகமாகும். இவற்றில் ஒன்றில் மாறினால் சரியான பிராணாயாமமில்லை, வஞ்சகப் பிராணாயாமமாகும். தீங்கு விளையும்.

> ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
> ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
> ஊறுதல் முப்பத்தி ரண்டதி ரேசகம்;
> மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே

எப்போதும் எங்கும் சரசாத்திரங்கூடப் பாராமல், இடத்தே பூரித்தால் நலமாகும். 'எங்கேயிருக்கினும் பூரி இடத்திலே'. அப்படிப் பூரித்தால் யாக்கைக்கு அழிவில்லை. இந்தப் பிராணாயாமம் செய்யும் முன் நீண்டகாலம் நாடிதாரணை செய்து காற்றைப்பிடிக்கும் கணக்கறியச் சொல்கிறார் மூலர். ஏறியிறங்கும் காற்றைச் சமப்படுத்தவேண்டும். அதற்கு மூச்சை நல்லகாற்றில் அமர்ந்து பூரித்து இரேசித்துக்காற்றின்ஓட்டத்தையே கவனித்துக் கொண்டிருந்தால், பிராணாயாமத்தின் கணக்குத் தெரியும். மனமும் அடங்கும். காற்றை உள்முகமாக மூலாதாரத்திலிருந்து மேலே ஈர்த்தல் உள் பிராணாயாமமாகும். இது நீண்ட பயிற்சியால் இயலும்.

> ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
> காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
> காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
> கூற்றை யுதைக்கும் குறியது வாமே

பாம்பைக் குடத்தில் அடக்குவது போல, மூச்சைச் சுழுமுனையில் அடக்க வேண்டும். பூரகம் தீர்க்கமாக நெஞ்சுக்கு மேல் கீழ் பக்கம் நடு எல்லாம் காற்று நிரம்பும்படி யிருக்கவேண்டும். பூரகம் இவ்வாறு முழுமையாகச் செய்ததுமே இரேசகம் செய்து, மறுபடி காற்றை யிழுக்காமல் உந்தியில்கும்பிக்கவேண்டும்; பிறகு மூச்சை வாங்கவேண்டும். இவ்வாறு செய்தால் உடலிலிருக்கும் நஞ்செல்லாம் நீங்கும். நீலகண்டன் அருள் உதிக்கும்.

> மேல்கீழ் நடுப்பக்கம் மிக்குறப் பூரித்துப்
> பாலாம் இரேசகத் தால் உட்பதிவித்து
> மாலாகி உந்தியுட் கும்பித்து வாங்கவே,
> ஆலாலம் உண்டான் அருள்பெற லாகுமே

இந்தப் பிராணாயாமம் குடலைச் சுத்தி செய்யும். அழுக்குகளை எளிதில் வெளியேற்றும். இதற்கு நாபி கும்பகம் எனப் பெயர். பூரிப்பது பதினாறு மாத்திரை, இரேசிப்பது முப்பத்திரண்டு, கும்பிப்பது அறுபத்திநான்காய் இருத்தல் வேண்டும். பிராணாபான வாயுக்களைக் கும்பகத்தால் அடக்கலாம் .வெளியே புறப்பட்டும், உள்ளே புகுந்தும் திரிகின்ற வாயுவை இந்த அளவுப்படியே எப்போதும் இழுத்து விட்டு அடக்கி, முடிவில் அது உள்ளேயே அடங்கிநிற்கச் செய்தால், நாடிசுத்தியாகும். உறுப்புக்கள் சிவக்கும், உரோமம் கறுக்கும். உயிர்க்குயிராய் ஒன்பது வாயிற் கோட்டையாலிருக்கும் சடையனான சிவனும் புறப்படாமல் உடலில் நீண்டு தங்கியிருப்பான். ஆயுள் நீடிக்கும்.

> புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
> நெறிப்பட உள்ளே நின்மல மாக்கின்,
> உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்,
> புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

சாதாரணமாக மூச்சு பதினாறு அங்குலம் ஓடும். அது பன்னிரண்டங்குலமாக வேண்டும். பன்னிரண்டு அங்குல மூச்சை, மூலர் பன்னிரண்டு ஆனையாகக் குறிக்கிறார். இதை அறிந்து அடக்க வல்லவன் யோகி. பகல் இரவு இல்லாமல் சஞ்சரிக்கும் பன்னிரண்டு ஆனைகளை வெளியே போகாமலே மூக்கிற்குள்ளேயே சஞ்சரிக்க விடலாம். மூக்கு வழியாகவே மூச்சு வெளியேறாமல் கேவலகும்பகத்தால் சுழுமுனை வெளியே பரநாதப் பண்ணுடன் போய்வரச் செய்யலாம். ஓங்கார சத்தம் கேட்டலே பிராணாயாம சித்திக்கு அடையாளமாகும். கேவல கும்பகம் தியானத்திலேதான் இயல்பாகும். அது வந்தால் பிராணாயாமாதிகள் தேவையில்லை. பிராணாயாமத்தால் மனம் ஆன்மாவைப் பொருந்தும்; இன்பக்கலவி உண்டாகும்.

24. பிரத்தியாகாரம் :

பிரத்தியாகாரம் என்றால் திருப்புதல், புலன்களைப் புறஞ்சென்று அலையாது உள்ளே

திருப்பி மனதில்லயிக்கச் செய்தல் ஆகும். மன துள்ளே உலக வாசனை தோன்றச் செய்யும் வெறுக்கத்தக்க அஞ்ஞான இருளை நீக்கி, உல கினின்றும் வேறுபட்ட கடவுளை நாடுகின்ற தனிச்சிறப்புடைய தெள்ளிய சிந்தையையே சிக்கெனப் பற்றி, உணர்ச்சியுடன் தியானித் திருந்தால், திருக்காட்சியை அறியலாம். அந்த தியானமே அறிவிக்கும் காட்சி. அதுவே நற் குணமுடைய அமரர் காணத் தக்கதாகும். அத் தகைய காட்சியால் அமரர் ஆகலாம்.

குறிப்பின் உள்ளே குவலயம் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கி ,விகிர்தனை நாடும்,
சிறப்புறு சிந்தையைச் சிக்கென்று உணரில்,
அறிப்புறு காட்சி அமரரும் ஆமே

வெளியே புறப்பட்டுத் திரியும் வாயு, புலன்களையும் அலைக்கிறது. அது புகும்போது புறவுலகின் எண்ணங்களைக் கொண்டு உள்ளே சேர்கிறது. அதன் ஓட்டத்தை இழுத்து, புலன் களைப் புறஞ்செல்லாமல் உள்ளே அடக்கி நின் றால் உள்ளத்திலுள்ள தெய்வான்மாவும் அலைவு இன்றி நிலைநிற்கும். காற்று அடங்கக் கருத்து அடங்கும். கருத்து அடங்கக் கரணம் அடங்கும். கரணம் அடங்கக் கடவுள் புலனாம். உபாதிகளிலிருந்து புலன்களையும் மனதையும் பிரித்து, நோக்கை உள்ளே திருப்பி, அகமுகி யாய் இருந்து, தன்னைத் தன்மய உணர்விலே கரைக்கவேண்டும். இதுவே பிரத்தியாகாரத்தின் பெருமையாகும். திருமூலர் பிரத்தியாகாரத் திற்குச் சில இரகசியமான தாந்திரிக சாதனங் களைச் சொல்கிறார். இச்சாதனம் இல்லறத் தாருக்கே தகும். பிறமாதரைத் தீண்டிச் சாத னம் செய்பவர் காமத்தை முற்றிலும் வெறுத்த உண்மைத் துறவிகளாயிருக்கவேண்டும். ஆனால் பிரத்தியாகாரமே காமத்தை அடக்க ஏற்பட் டது. பெண்ணாசையை அடக்கமுடியாத இல் லறத்தாருக்கும், சதிபதிகளாகிக் குண்டலி யோகம் செய்யும் தம்பதிகளுக்கும் இந்த வழி மிக்க நல்லதாகும். எருவாய்க்கு இரண்டு விரற்கடை மேலே ,கருவாய்க்கு இரண்டு விரற் கடை கீழே குண்டலி சுருண்டு உறங்கும். அதி லுள்ளசோதிக் கனலைஉபாசிக்க வல்லவருக்குக் கருவை விடும் சோதிபுருஷன் உணர்விற் கலந் திருப்பான். அதனால் காமஜயம் வாய்க்கும்.

எருவிடும் வாசற் கிருவிரல் மேலே,
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே,
உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடும் சோதி கலந்துநின் றானே

மூலத்துவாரத்தைக் குண்டலிபந்தத்தால்மொக் காரம் இட்டு அடைத்திரு, நேரே நிமிர்ந்திரு, மூச்சைக் கட்டியிரு. மேலே பிரம்ம ரந்திரத்தில் முழு நினைப்பையும் ஊன்றியிரு. சுவாசத்தைக் கபாலத்தில் ஏற்றியிரு. கண்ணை நெற்றிக்கு மேலேயுள்ள பரவெளியில்விழித்திரு. பார்வை யைப் புறஞ்செல்லாமல் பரவெளியில் வை. இவ் வாறு குண்டலிபந்தமும் பரவெளி நோக்கும் கபாலத்தியானமும் சித்தித்தால், காலத்தை யும் வென்றிருக்கலாம்.

மூலத்து வாரத்தை மொக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு;
காலத்தை வெல்லும் கருத்திது தானே

முக்காரமிடுதல் என்பது மூச்சை மூலா தாரத்தில் அழுத்திப் பிடித்தல். அதிலிருந்து பிராணனை மேலேற்றி அங்கே நாட்டத்தை ஊன்றியிருத்தல். வேல் போன்று கூர்விழியைச் சிதாகாசத்திலே நாட்டி உட்பார்வையுடன் உள்விழிப்புடன் இருந்து பயில்க. இதனால் உள் மௌனமும் உபசாரமும் உண்டாகும். குண்டலி சக்தி விறுவிறுப்புடனே சுழலும், ஆற்றலும் ஆயுளும் நீளும். காலத்தை வென்று வாழலாம். இது ஜயாசனத்தாலே எளிதாகும். விந்தினை இறங்கவிடாமல் இச்சாதனம் மின்விசைபோல மேலே ஏற்றும். அதற்கே மேலைத் துவாரமான பிரம்மரந்திரத்திலும் பரவெளியிலும் தியானப் பார்வையை நாட்டுவதாகும். இதையே இன் னும் விளக்குகிறார் தாந்திரசித்தர். நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம் குண்டலி தலத் தில் ''ஓம் ஹ்ரீம் ஹம்'' என்ற மந்திரத்துடன் சாதனத்தை நாடவேண்டும். அந்த சூட்சுமத் தையறிந்தால் காமம் அடங்கும். பெண் பரா சக்தியாகக் காணும். ஈசன் உடலிடங்கொண்டு குடியிருப்பதை அறியலாம்.

நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை யறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை யறிந்தபின்,
கூவிக்கொண் டீசன் குடியிருந்தானே

மூலாதாரத்திற்கு இருவிரல் மேலும், யோனிக்கு இருவிரல் கீழும், கோலியுள்ள குண் டலியை எழுப்பினால், அதனுள் தீச்சுடரான சக்தி எழும். அச்சுடர் நாபிக்கு நான்கு விரல் கீழே சுவாதிட்டானத்தில் கொழுந்தோங்கும்.

மூலத்து இருவிரல் மேலுக்கு முன் நின்ற
பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழும் செஞ்சுடர்,
ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே

இக்குண்டலி பந்தம் மிகவும் இரகசியமானது. தக்க குருவில்லாமல் யாரும் முயலக் கூடாது. இச் சாதனத்திற் காணும் குறியோனிச் சேர்க்கை காமப் புணர்ச்சியன்று; கையோகமும் மன்று, சக்தியோகமாகும். இதை உணராமல் ''நானும் தாந்திரிகசாதனம் செய்கின்றேன்'' என்று பரஸ்திரீகளைக் கற்பழித்துச் சில சாத கர் தாமும் மாயவலையில் வீழ்ந்து பிறரையும் மாயத்திற் சிக்க வைக்கின்றனர். சாதகர் சதி பதிகளாயிருந்தால் ஒழிய, இச்சாதனத்தை நினைக்கக்கூடாது. அவர்களும் நம்பிக்கையான குருமூலமே சாதனம் கொள்ளவேண்டும். இது காமத்தை நுகரும் சாதனம் அன்று. காமத்தை வெல்லும் சாதனம். இதைவிடத் தியானயோகி களுக்கு எளிதான சாதனத்தை மூலர் தரு கிறார் கேளுங்கள்.

நாசிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம் உள்ளம் உள்ளது. அதுவே தகர நிலையம்; அதிலேயே சித்தத்தை வைத்துப் புலன்களும் மனமும் புறத்தே அலையாமல் ஊன்றித் தியா

னித்தால், மகாசித்தி யோகம் வந்து கைகூடும். இச்சாதனம் முதிர முதிரத் தேகத்திற்கும் சிதைவில்லை. காமக்குரோதாதிகளும் பிணிகளும் ஒழிந்து, உடல் நலமுறும்.

நாசிக்கு அதோமுகம் பன்னிரண்டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யும்;
தேகத்திற் சென்றும் சிதைவில்லை தானே

நாபிக்குக் கீழே ஒரு சாண் பார்வை செல்வதற்குப் பதிலாக நாசிக்கும் கீழே பன்னிரண்டு அங்குலம் உள்ள உள்ளத்தில், நினைப்பை ஊன்றுதலே உயர்வான சாதனமாகும். பிரத்தியாகாரம் அதனால்சித்திக்கும்.

25. தாரணை :

தாரணை என்றால் ஓரிடத்தில் மனத்தைப் புறஞ்செல்லாது உறுதியாக நிறுத்துவது. உடம்பில் பல நாடிப் பின்னல்கள், சக்தி நிலையங்களாக உள்ளன. அவற்றுள் ஒன்றில் தாரணை செய்து இச்சாசித்தி அடையலாம். அல்லது இதயத்தில் தாரணை செய்து சொரூபச்சித்தி பெறலாம். மாசற்ற மனம் கோணாது நேராக, ஒரேகுறி பற்றியிருத்தல் வேண்டும். அதைக் கீழ் ஆதாரத்தில் கட்டி வீணாதண்டமான முதுகெலும்புஊடே செல்லும் நடுநரம்பு வழியே மேலேற்றி, நெற்றிக்கு மேலேயுள்ள பரவெளியில் உற்ற பார்வையை சகஸ்ராரத்திலுள்ள சோதிசொரூபத்தில் நாட்டுக. அப்போது தன் சொரூபமன்றி அன்னியங் காணா அருட்கண்களும், தன்னுள் ஓங்காரம் அன்றி வேறு கீழ் விவகாரங்களைக் கேளாச் செவிகளும் பெறலாம். அதனால் புறப்பார்வையின்றியே உட்பார்வையால் எல்லாம் அறியலாம். கேள்வியின்றியே எல்லாவேதசாரத்தையும்உணரலாம். அப்படிப்பட்ட தாரணசித்தருக்கு, வாழ் நாட்களை வீணாகாமல் உள்ளே நிலைநிறுத்தி நீடு வாழ வழியுண்டாகும்.

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி,
வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கில்,
காணாக்கண் கேளாச்செவி யென்றிருப் பார்க்கு
வாணா ளடைக்கும் வழியது வாமே.

மலைபோன்ற சிரத்தில் சிதாகாச வானில் சக்தியருவி, அமுத தாரையாக நெடுநாடியான சுழுமுன்ன வழியே பாய்கிறது. அதனூடே பல நாடிகள் பின்னியிருக்கும். இதயவெளியில் கயிலைப் பரமனின் நித்திய நடன சோதியை நான் தாரணையாற் கண்டேன்.

மலையார் சிரத்திடை வானீர் அருவி,
நிலையாய்ப் பாயும் நெடுநாடி யூடே,
சிலையார் பொதுவில் திருநட மாடும்
தொலையாத ஆனந்தச் சோதி கண்டேனே

மறுபடியும் தாந்திரிக தாரணை வருகிறது. மூல நிலமான மூலாதாரத்தில் எழும் மூர்த்தியான புருஷனை மேலேற்றி மேலான சிதாகாசமண்டலத்தில் மகாகுண்டலியான ஓங்காரப் பெண்ணுடன், வேதப் பெண்ணுடன், சந்திக்கச் செய்தால் என்றும் பதினாறு வயது பாலகுமாரன் போல் இளமையோடு இருக்கலாம்.

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவனுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பராநந்தி யாணையே

கடைவாசலான மூலாதாரத்தைக் குண்டலிபந்தம் செய்து, அங்கிருக்கும் காலான அபானத்தை எழுப்பி, இடைவாசலான யோனியில் தாந்திர முறைப்படியே குறியை இருத்தி, மடைவாய்க்கரையில் கொக்கு மீனுக்காக அமைதியாகக் காத்திருப்பதுபோல் ஆழ்ந்த தாரணையில் லயித்திருந்தால், குண்டலிசக்தி விறுவிறுத்தேறி ஆதாரகமலங்களைத் திறந்து உச்சிக்குச் செல்லும். அந்த ஆனந்தமே பேரின்பம். அதனால் உடலும் மனமும் உடையாமல் நீடு வாழலாம்.

கடைவாசலைக் கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி,
மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்கு
உடையாமல்ஊழி யிருத்தலும் ஆமே

இவ்வாறு தாந்திரிக சக்தி சாதனத்திற் கலந்த இரண்டு உயிர்கள் (ஆண் பெண்), சரியானபடி தாரணையால் இடை பிங்கலை நாடிகளைக் கட்டிக் காற்றையும் வசப்படுத்தினால், உடல் எக்காலமும் நிற்கும்.

கலந்த உயிரது காலது கட்டிற்
கலந்த உயிருடல் காலமும் நிற்குமே

இத்தாரணைக்கு மௌனசாதனம் வேண்டும். வாய்திறவாத மோனிகளுக்குள் ஒரு ஞான ரத்தினம், அறிவுச்செல்வம்(மாடு) உண்டு. வாயைத் திறந்து சளசள என்று பேசுவோர், காற்றால் தமது சக்தியை வெளியே பாய்ச்சுவர். மோனிகள் மதி உந்தி சக்திக்கனலை முட்டுவர். மதியை சக்கரங்களில் தாரணைசெய்து, மௌனமாய் இருந்தால் சக்திக்கனல் எழும். இவ்வாறு மௌனத்தாலேதான், அஞ்ஞானசக்கரம் திறக்கும். அச்சக்கரம் திறவாதார் தாரணைக்குத் தகார். அவர்கள் கோழைப் படுவர். சக்தி எறும்பூறுவதுபோல் விறுவிறுத்து ஏறும். உடம்பைப் பஞ்சபூத நிலையில் வைத்துக் காக்க வேண்டும். ஐம்பூதத்தைத் தன்மாத்திரைகளில் வைத்துப் பொருத்தி, மனதைச் சத்தத்திற்கு ஆதிநிலையமான அனாஹதசக்கரத்தில் ஊன்றவைத்துத் தாரணை செய்தால், தற்பரம் பொருளுடன் கலந்திருக்கலாம். தாரணைசெய்யும் பலவகை நாடிகளைப் பிறகு விரிவாகச் சொல்வோம்.

26. தியானம் :

உள்ளத்தானை உள்ளபடியிருந்து இடைவிடாது சிந்தித்திருத்தலே தியானமாகும். சாதனங்களுக்கெல்லாம் அரசு தியானம். மற்றெல்லாச் சாதனங்களையும் விட்டுத் தியானம் ஒன்றையே பற்றி நின்றாலும் போதும். ''குருவார்

சிவத்தியானம் யோகத்தின் கூறே'' என்கிறார் மூலர். தியானத்திற் சிறந்தது சகஸ்ராரத்தில் உள்ள சிவமயப் பொருளைத் தியானித்தலே. எண்ணாயிரத்தாண்டுகள் யோகம் செய்தாலும் பயனில்லை. அமுதனாகிய சிவனைக் காணமுடியாது. மனமும் புலனும் வெளியே திரியாமல், உள்ளே நாடி, உள்ளத்தில் ஒளி படும்படி உட்பார்வையுடன் இருந்தாலே, கண்ணாடிபோல அந்தக்கரணம் தெளியும், ஆன்மா நிமலமாகும். அப்போது அதனுடனே என்றும் கலந்தொளிரும் சிவம் விளங்கும். உள்ளத்தைக் கண்ணாடி போலப் பரிசுத்தமாக்குதலே தியானத்தின் முதற்படி. அடுத்தது வெளிவிவகாரங்களையெல்லாம் விட்டு உட்பார்வையோடு இருத்தலாம்.

எண்ணாயிரத் தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டறி வாரில்லை
உள்நாடி, உள்ளே ஒளிபெற நோக்கினாற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே

முதலில் சுத்தமனம் பெறவேண்டும். மனதில் மாசின்றி அதை ஒளிபெறச் செய்யவேண்டும். அதையே மனவிளக்கு ஏற்றுதல் என்கிறார் மூலர். சின விளக்கான ஆத்திரம் கோபம் விம்மல் பொருமல் பொறாமைப்படுதல் ஆகியவற்றை மனத்தினின்று அடியோடொழிய நெருக்கி விரட்டவேண்டும். புலன்களை வெளிச் செல்லாமல் இழுத்துப் பிடித்து நெருக்கிஉள்ளே அடைப்பதே இதற்கு உபாயமாகும். பிறகு தியானத்தால் ஏழு ஆதாரங்களான விளக்குகளையும் சுழுமுனைகளாகிய திரியால் ஒருங்கே ஏற்றவேண்டும். அப்போது அருட்சோதி ஒளிரும். அந்த மாயாத நித்திய தீபமே மனத்தில் நினைப்பாக ஒளிரும் விளக்கும் ஆகும்.

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி,
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட,
மனத்து விளக்கது மாயா விளக்கே

ஞானேந்திரியங்களில் அதுஅதன் உணர்வாயிருக்கும் பொருள் சுத்தான்மா. அதுவே சிதாகாசத்தில் 'ஓம்' என்னும் பரநாதப் பண்ணை உண்டாக்கி என்றும் இருக்கும் பழம்பொருளாகும். பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்டு, அண்ணாக்கில் மேலுள்ள ஆஞ்ஞா சக்கரத்திற்கும் மேல் அகண்ட சிதாகாச ஒளியை அதுகாட்டும். அந்த ஆன்மப் பொருளே தனுகரணங்களுடன் கூடி, நம்மை உலக போக அனுபவங்களாற் புண்ணாக்கி, பட்டுப்பட்டு உண்மை அறியச் செய்கிறது. புண்ணாக்கும் அதுவே புண்ணையும் தீர்த்துப் பிணி விடுவித்துப் பிழைக்கும்படி செய்கிறது. கண்ணில் கலந்த ஒளி அப்பொருளே. அதையே உட்குவித்துப்பார்த்திருந்தால்தியானம் நிலைக்கும். சிதாகாச ஒளியைக் காணலாம்.

தியானம் எப்படிச் செய்வது? எங்கே நாட்டுவது? நடுமூக்கில் நாட்டத்தை ஊன்றுக. அங்கே ஏகாக்கிரப்பட்டால், தியானம் நிலைக்கும். உடல் அலுங்காமல் அழியாமல் உறுதியாயிருக்கும். மனம் ஓடாது நிலைக்கும். புறஉலகுஉணர்வும் உடல்உணர்வும், தேட்டமும் பிறகு இல்லை. தியான முதிர்ச்சியால் சிவமாகிய இன்பமே ஆவான் சாதகன்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கு அழிவில்லை
ஓட்டமும் இல்லை, உணர்வுஇல்லை
தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ னாமே

இருவிழிப் பார்வையையும் மூக்கின்மேல் வைத்துக் கும்பகம் செய்து, மூச்சைச் சமனாக்கித் தியான நித்திரை செய்தால் ஆயுள் நீடிக்கும். இச்சாதனங்களால் நாடி சுத்தியாகி, மணி, கடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டு, தும்பி, வளை, பேரிகை, யாழ் ஆகிய பத்தும் போல, பத்தொலிகள் கேட்கும். மனம் உள்ளத்தில் பணிந்தடங்கினாலே ஒளியின்பம் புலனாகும்.

மணி கடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க ஒண்ணாதே

மனம் சுழுமுனையில் படிந்து நிற்றலே பணிதலாகும். யோகிக்கே உள்ஓங்கார நாதம் உணர்வாகும். அது கடல்முழக்கம், முகில்முழக்கம், யானை பிளிறல், யாழிசை, குழலோசை, சங்கு போன்று ஒலிப்பதை யோகி கேட்கிறான். அந்த ஓங்காரம் தியான ஒருமையைத் தரும்.

கடலொடு மேகம் களிறொடும் ஓசை
அடலெழும் வீணை அண்ட ரண்டத்துச்
சுடர்மனு வேணுச் சுரிசங்கின் ஓசை,
திடமறி யோகிக்கு அல்லால் தெரியாதே

இப் பரநாதத்தின் உச்சத்திலேதான் நல்லாளான சிவசக்தி - மகாகுண்டலி இருக்கிறாள். அவள் சுழன்று விளையாடினாலே யோகமும் நிலைத்திருப்பதாகும். அந்த யோகம் ஊன்றினாலே நாட்டம் உள்ளே ஊன்றும்; அப்படி நாட்டம்ஊன்றினால் நீலகண்டனான சிவனைத் தரிசிக்கலாம்.

நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது,
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே

தான் கொண்ட சாதன விரதம் குறையாது காத்து வீணாதண்டத்தின் ஊடே குண்டலி ஓடி தலையிற்கூடி, முச்சுடர் மண்டலத்தை அடைந்தால் மனிதர் தேவராவார். ''தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு, பிண்டமும் ஊழி பிரியாதிருக்குமே''.''அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவர்ஆம். நாபிக்கு நான்குவிரல் மேலே, நெஞ்சத்திலும் மடித்து அண்ணாக்கில் ஏற்றி (மடலித்து) நாக்கிற்கும் இரண்டுவிரல் மேலே புருவநடுவிலும், நிலைப்பாயிருந்து தியானித்தால், சடலத் தலைவனான இறைவனை அறியலாம். நெஞ்சு சிரம் இரண்டும் தியான நிலையங்களாம். இரண்டிற்கும் அமுதநாடி தொடர்ந்துஓடும். தியானம் நிலைத்தால் இன்பம் உதிக்கும்.

27. சமாதி :

தியானம் முதிர முதிர உபாதிகள் அடங்கி, மனம் படிந்து ஒடுங்கிச் சமாதி சித்திக்கும். சமாதி இருவகைப்படும். சம்ப்ரக்ஞாதம்-உணர் நிலை. அசம்ப்ரக்ஞாதம்-உணர்வு கடந்தநிலை. சம்ப்ரக்ஞாத சமாதியில் விதர்க்கம், விசாரம், ஆனந்தம், அஸ்மிதம் என நால்வகையுண்டு. இவற்றில் தான்எனும் உணர்வு உண்டு. பிர கிருதிநிலையருக்கு இது சரி. பரமுத்தி அசம்ப்ரக் ஞாத சமாதியிலேதான் கிடைக்கும். மனோ விருத்திகள் அதில் இல்லை. யோகச்சிகரம் சமாதியே; சமாதியால் எட்டுச்சித்தியும் எய் தும், தாரணை தியானம் சமாதி ஆகிய மூன்றும் சம்யமம் (ஒடுங்கல்) எனப்படும். இதனால் பல அற்புதங்கள் செய்யலாம். எந்தக் கலையிலும் சம்யமத்தை நாட்டிப் புலமை பெறலாம். உயி ருக்கு ஆதியான பரம்பொருளுடன் உள்ளத்தில் சமநிலையில் கலந்திருத்தலே சமாதியாகும். திருமூலர் சமாதியைப் பற்றி மிகவும் விரி வாகச் சொல்லுகிறார்.

கலையுரைத்த நாம ரூபக் கற்பனைகளை விட்டொழிக்கவேண்டும். குண்டலிக் கனல் வழியே ஆதார கமலங்களின் மேலே செல்ல வேண்டும். உலகச் சிற்பியாய் அனைத்தையும் சிருட்டித்த பேரொளிப் பிழம்பாகிய அழகனான பரமனையே நாடி மேலே செல்லவேண்டும். மதிமண்டலத்தை எட்டவேண்டும். அங்கே அவ னுடன் புணர்ந்து தற்பரமாகத் தானே தானாக அந்நியமில்லா ஒருமைக் கலப்புடன் ஒன்ற வேண்டும். தண்ணிய சமாதியில் அந்த நிலை பெறத்தகும்.

கற்பனை அற்றுக் கனம்வழியே சென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புனர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே

நாதம் விந்து ஆகிய இரண்டும் மேருவாகிய சகஸ்ராரத்தில் ஓங்கிப் புணரவேண்டும். அப் புணர்ச்சிக்கு ஆதாரசக்தியை நடத்துவதால் முதுகெலும்புக் கூட்டிற்கு மேருதண்டம் எனப் பெயர் வந்தது. நாதவிந்து சக்தியால் சமாதி கூடும். அதில் எல்லையற்ற ஞானப் பொருள் அழகொளியுடனே தன்னால் தோன்றிடும்.

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியில் ஆன சமாதியிற் கூடிடும்;
அந்தமி லாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியுந் துலங்கிடுந் தானே

இச்சமாதிகூட, மன்மனம்-நிலைபெற்ற உறுதி யான சுத்தமனம், வேண்டும். உறுதியான மன மிருக்கும் இடத்திலேதான் வாயுவும் உதிக்கும். மனமற்ற இடத்தில் வாயுவும் இல்லை. மனம் எங்கே ஒடுங்குகிறதோ அந்த உள்ளத்தினுள்ளே இன்புற்றிருப்பாருக்கு அதனுள்ளேயே மனோ லயமாகிச் சமாதி கூடும். இதையே ஸ்ரீரமண மகரிஷிகளும், பகவான் சங்கரரும் உதித்தவிடத் தில் ஒடுங்கியிருத்தல் என்பர்.

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே

இதனால் மனோலயமானால் பிராணாயா மாதிகள் இல்லாமலே யோகம் சித்தியாகும். சூக்குமம் சூக்கும சரீரத்தில் உள்ளது. மனம் அடங்கினால் வாயுவும் அடங்கும். மனமே காற் றுப் பாம்பின் பெட்டி. இடை பிங்கலை ஆகிய இரண்டு குதிரைகளையும் மனோலயத் தில் லயப்படுத்தினால், ஏகாக்கிரமும் சமாதி யும் எளிதாகும். சமாதியில் மேலைவாசல் வெளியான சிதாகாசத்தைக் காணலாம். அதி லேயே லயமானால் காலனைக்கூட வெல்ல லாம். ஏனெனில் சிதாகாச யோகி, கேவலகும்ப கத்தில் பிராண சக்தி முழுவதையும் தனதாக்கிக் கொள்கிறான். சக்தி வெளியேறாமல் அவனுள் ளேயே கனலாகமாறிச் சுழன்று கொண்டே எத் தகைய பிணிதுயர்களையும் தடுத்து நிறுத்தும்.

மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வரத்துக் கனவிலும் இல்லையே

சாதாரணமாகப் பத்து வாயுக்களும்உடலின் பூட்டுகளுடன் ஒத்துப்பொறிபுலன்களில் தோய்ந் துலாவுகின்றன. அதனால் வாயுவுடன் புலனும் மனமும் வெளியேறி அலைகின்றன. அதைத் தேட்டமற்ற நிராசையான நிச்சங்கற்பமான நிர்விகற்ப நிலையில் அடக்கி வைக்கவேண்டும். நாட்டத்தை வெளியே செல்லாமல் கண்ணுக் குள்ளேயே மீட்டு, காண்பான் எவனோ அவ னிடம் உய்த்திருக்கவேண்டும். பார்வை உள் முகமாக வேண்டும். அப்படி இருப்பவருக்குத் தோட்டமாகிய இதயவனத்தில் (தத்வனத்தில்) உள்ள மாம்பழமான சுத்தானந்தம், சமாதியில் உண்டுறங்கலாகும்.

பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற வந்நிலம் சேரும்படி வைத்து,
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழம் தூங்கலு மாமே

சித்தர்கள் அன்பையே நிவேதனமாக்கி, அருத்தி மனம் ஒடுங்கிச் சென்று சுழுமுனை யாகிய கொம்பில் ஏறி, முச்சுடர் நிலையம் சென்று உள்ளே செம்பொன்னைப் போலத் திகழ்கின்ற அருட்சோதி இறைவனைக் கும் பிட்டுக் கூடிக்கொண்டு இன்புற்றார்கள். அந்த ஆதி இறைவன், நம்பன் நான்மறைகளும் ஓதும் உயர்பொருள்ஆவான்.

நம்பனை ஆதியை நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி அருத்தி ஒடுக்கிப் போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே.

(—தொடரும்)

அப்பர் என்னும் சொற்பொருள்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர் பெருமக்களுள், திருநாவுக்கரசர் ஒருவர். அலகில் கலைத்துறை தழைப்பவும், அருந்தவத்தோர் நெறி வாழவும், உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளக்கும் கதிர்போல வந்து, திருநாவுக்கரசர் திருவவதாரம் செய்தார். திருநாவுக்கரசர் ஒரு சிறந்த சமயாசிரியர் மட்டுமே யல்லர்; மிகவும் புகழ்பெற்ற ஒருபெரும் வரலாற்றுத் தலைவரும் ஆவார்!

திருப்பெயர்கள்;

இவருக்குத் தாய் தந்தையர் இட்ட இயற்பெயர், மருள்நீக்கியார் (அறியாமையைப் போக்குபவர்); இவர்க்கு இறைவன் வழங்கிய பெயர் நாவுக்கரசர் என்பது.

> ''பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப்
> பதிகத்தொடை பாடிய பான்மையினால்,
> நாவுக்கரசு என்று உலகு ஏழினும்நின்
> நாமம் நயப்புற மன்னுக''

என்று, திருவதிகை வீரட்டானேசுவரர் அருளிச் செய்ததாகப் பெரியபுராணம் பாடுகின்றது. 'நாவுக்கரசர்' என்னும் சொற்றொடர் 'நாச்சுவை' யறிதலில் வல்லவர்' (Glutton, Gormandizer) எனவும் பொருள்படக் கூடுமாதலின், அதனை விலக்கி 'இன்னது அல்லது இதுஎன மொழிதல்' என்னும் தந்திரவுத்திக்கு ஏற்ப, ''நாவின் மொழிக்கு இறை ஆகிய அன்பர்'' எனச் சேக்கிழார் பெருமான், அச்சொற்றொடர்க்கு உரிய பொருளை, அடுத்த பாடலில் (75) விளக்கம் செய்தருள்வார். வாகீசர், சொல்லரசர், மொழிவேந்தர், வாக்கின் மன்னவர் என்பன போன்றுவரும் தொடர்கள் பலவும், இப்பொருளையே வற்புறுத்துவனவாகும். சைவசமய ஆசிரியர்களுள் இவர் ஒருவர் மட்டுமே 'தாண்டகம்' என்னும் பாடல்வகையினை மிகுதியாகப் பாடியவராதலின், திருநாவுக்கரசர் பெருமானுக்குத் 'தாண்டகவேந்தர்' எனவும் ஒரு சிறப்புப் பெயர் வழங்கும்.

அப்பர் என்னும் அரிய பெயர்:

திருநாவுக்கரசர்க்கு வழங்கிவரும் பெயர்கள் பலவற்றுள், 'அப்பர்' என்னும் ஒரு திருப்பெயரும் மிக்க சிறப்புடையதாய், மக்களிடையே அன்பும் மதிப்பும் ஆர்வமும் அமையப் பெரிதும் வழங்கிப் போற்றுப்பெற்று வருகின்றது. 'அப்பர்' என்னும் திருப்பெயர், திருநாவுக்கரசருக்குத் திருஞான சம்பந்தரால் வழங்கப்பெற்றதனைப் பெரியபுராணம் (திருநாவுக்கரசர்-182, 234, 267, 308), பல இடங்களிற் குறிப்பிட்டுக் கூறுகின்றது.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை 'அப்பர்' என அழைத்தமை, தாம் மிகவும் இளம்பிள்ளைமைப் பருவத்தினராக இருந்தமையினால், தம்மிற் பெரிய அவரை அன்புடன் தந்தை என்னும் நிலையில் உறவுரிமை பாராட்டி மகிழ்ந்த காரணம்பற்றியிருக்கலாம் என்று, பொதுவாக நாம் கருதுதல்கூடும்.

ஆனால் 'அப்பர்' என்னும் சொல்லுக்கு, மற்றும் பல்வேறு பொருட்குறிப்புக்களும் இருப்பதாகக் கருத இடம் உள்ளது. ''ஒவ்வொரு மொழியிலும் ஒருசில சொற்கள் மிகவும் பொருள் நிறைந்து சிறந்து விளங்குவது உண்டு. அச்சொற்களுள் ஒவ்வொன்றைப் பற்றியும், ஒவ்வொரு தனிப் புத்தகமேகூட எழுதலாம். அத்தகைய விரிவான பொருள் நிறைவை அச்சொற்கள் பெற்றிருக்கின்றன''* என அறிஞர்கள் குறிப்பிடுவர்

---

* ''Some words carry so much, that a whole book might be written on their meaning; and indeed many thinkers have toiled long on definition of small words such as good, beautiful, sublime, romantic. It was well said by Cardinal Newman that the word God is itself a theology, and there are hundreds of other words which are in themselves embryonic systems of thought''.

—Bernard Groom,
History of English Words, p. 126.

அப்பர் என்னும் சொற்பொருள்கள்;

அம்முறையில் 'அப்பர்' என்னும் சொல்லின் பொருட்டிறங்கள் பற்றி அறிந்து கொள்ளுவதற்குத் திருமுறைகளிலோ, அன்றி அவற்றின் சார்புடைய பிற நூல்களிலோ, தெளிவான குறிப்புக்கள் ஏதும் காணப்படவில்லை. ஆயினும், வைணவ சமயத்தில் 'மொழிக்கு மொழி தித்திப்பாகச்'சுவைபெருக வரையப்பெற்றுள்ள நாலாயிரத் திவ்வியப்பிரபந்தப் பேருரைகள், அப்பர் என்னும் சொற்பொருளின் விளக்கம் இனையது என நாம் உணர்ந்து கொள்ள, நமக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

(1) அப்பர் என்னும் சொல்லுக்குத் 'தந்தை' என்பது மட்டுமே பொருளன்று. அதற்குப் 'பெரியவர்' எனவும் ஒரு பொருளுண்டு. திருநாவுக்கரசர் 81 ஆண்டுகள் வாழ்ந்த முதியவர் (விருத்தர்) ஆதலின், அவரைப் பெரியவர் என்பது பொருத்தமே யாகும். அவர் வயதினால் மட்டுமே பெரியவரல்லர். 'வயோ விருத்தம்' 'குணவிருத்தம்' 'ஞானவிருத்தம்' என்னும் மூவகை விருத்தமும் உடைய பெயரிவர் என்று அவரைக் கொள்ளுதல்தகும். வயதாலும் குணத்தினாலும் ஞானத்தினாலும் இனைய பிற சான்றாண்மை நலங்களினாலெல்லாமும், பெரியவராகத் திகழ்ந்தமை பற்றியே, திருஞானசம்பந்தர் அவரை 'அப்பர்' என்றார் ஆதல் வேண்டும்.

(2) இனி அப்பர் என்னும் சொல்லுக்கு வேறொரு சிறப்புப்பொருளும் உண்டு. அதனை வழிபடத்தக்கவர் (பூஜ்யர்) என்னும் பொருளில் திவ்வியப்பிரபந்த உரையாசிரியர்கள் வழங்கியுள்ளனர். திருநாவுக்கரசரின் அருமை பெருமைகளை உணர்ந்த திருஞானசம்பந்தப் பெருமான், நம்மனோரால் பெரிதும் வழிபடத் தக்க சிறந்த மாட்சிமை உடையவராதல் கருதியும், அவரை அப்பர் என அன்புடன் போற்றிப் பாராட்டிச் சிறப்பித்து வழங்கினராதல்கூடும்.

(3) இனி இவைகளேயன்றி, அப்பர் என்னும் சொல்லுக்கு பேருபகாரகர் என்று ஒரு பொருளும் உண்டு எனத் தெரிகின்றது. பிறரெவரும் செய்தற்கரிய பேருதவிகளை, நம் தமிழகத்திற்குப் பல்லாற்றாலும் செய்தருளியவர் திருநாவுக்கரசராதலால், இப்பொருள் கொள்ளுதலும் மிக்க பொருத்தமேயாகும்.

(4) இனி இவற்றினெல்லாம் வேறாக, அப்பர், என்னும் சொல்லுக்கு மற்றொரு சிறப்புப் பொருளும் இருப்பதாக அறிகின்றோம். எல்லாவற்றிற்கும் மூலகாரணர் ஆக விளங்குபவர் (சர்வகாரண பூதர்) எனவும், இச்சொல்லுக்கு உரையாசிரியர்கள் பொருள் வகுத்துள்ளனர். தமிழகத்தின் மொழி-சமயம்-நாகரிகம்-பண்பாடு முதலிய பலதுறைகளின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும், மூலகாரணராக விளங்கிப் பெருந்தொண்டாற்றியவர் திருநாவுக்கரசராதலின், இங்ஙனம் பொருள் கொள்ளுதலும் ஏற்புடைத்தே ஆகும்.

(5) திருநாவுக்கரசர் பல்லவர் காலத்தில், கி.பி.7-ஆம் நூற்றாண்டில், வாழ்ந்திருந்தவர். திருஞானசம்பந்தரும் அக்காலத்தில் உடன் வதிந்தவரேயாவர். பல்லவர்களின் காலத்தில், தமிழகத்தில் பிராகிருதம் பாலி முதலிய மொழிகள் செல்வாக்குப் பெற்றுப் பரவியிருந்தன. பிராகிருதம் முதலிய மொழிகளில் 'பப்ப' என்னும் சொல், சான்றோர்களைக் குறிக்கும் மதிப்பியற் பெருஞ்சொல்லாக விளங்கியது. பப்ப என்னும் சொல், பல்லவர்காலத்துக் கல்வெட்டுக்களில் மிகப் பெரும் சான்றோர்களைக் குறிக்கும் ஒரு சிறந்த மதிப்பியற் சொல்லாக வழங்கி வந்தமை அறியப்படுகின்றது.

'மகாராஜா பப்ப சுவாமி' 1
'பப்ப பட்டாரக மகாராஜா' 2
'தைவதம் ஆகாநின்ற பப்ப பட்டாரகர்' 3
'பப்ப பட்டாரக பாத பக்தன்' 4

என்பன போன்ற சொற்றொடர்கள், பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன. 'பப்ப' என்னும் பிராகிருதச் சொல்லும், 'அப்பர்' என்னும் தமிழ்ச் சொல்லும் ஒன்றோடொன்று பெரிதும் தொடர்புடையனவாய், ஒரேபொருள் குறிப்பனவாகத்தோன்றுகின்றன. 'பப்ப' என்பதற்கு 'அப்பன்' என்பதேபொருள். 'Papa' என்னும் ஆங்கிலச் சொல்லும் 'Father' என்னும் பொருளே உடையதாதல் காண்க. தந்தை என்னும் பொருளுடைய 'Papa' என்னும் சொல்லினின்றே, ஞானத்தந்தை என்னும் பொருளில் 'Pope' என்னும் சொல் தோன்றியது. Abba, Abbot, Abbey, Abbacy என்னும் சொற்களும்கூட, 'அப்பன்' என்னும் தமிழ்ச் சொல்லினது பொருளின் அடிப்படையையே போன்றனவாக அமைந்து இருத்தல், எண்ணியுணர்ந்து இன்புறுதற்கு உரியது.

திருமங்கையாழ்வார் அருளிய பெரியதிருமொழிப் பாசுரம் ஒன்றில் (974), 'பப்ப அப்பர் மூத்தவாறு' என வந்திருத்தல், இக்கருத்தினை வலியுறுத்தும்; இஃது 'அடவி காடே' எனத் தேவாரத்திலும்; 'அதுதான் ஞான திரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றலான்' எனச் சிவஞானபோதத்திலும், 'ஸ்லேட் பலகை' 'கேட்வாசல்' எனப் பேச்சு வழக்கிலும் (Tautology, Redundancy) வருவனவற்றைப் போல்வதாகும்.

(6) பண்டைக்காலத்தில் 'பப்ப' என்னும் சொல், அரசராக இருந்து துறவுநெறி மேற்கொண்டவர்களையும், அரசர்களுக்கு ஞான குருவாக (Spiritual Preceptors) விளங்கிய பெருமக்களையும் குறிக்கும் சிறப்புரிமை உடையதாக வழங்கிவந்தமை புலனாகின்றது.

திருநாவுக்கரசர், மகேந்திரவர்மன்-நரசிம்மவர்மன் முதலிய பல்லவப் பேரரசர்களின் ஞானப் பெருங்குரவராகத் திகழ்ந்திருந்தமை தெளிவு. அச் சிறப்புடைமை கருதியும், திருநாவுக்கரசரைச் சம்பந்தர் 'அப்பர்' எனப் போற்றியருளினார். போலும்!

(7) இஞ்ஞான்று நாம் அனைவரும் காந்தியடிகளை, நாட்டின் தந்தை - தேசபிதா - பாபுஜி-(The Father of the Nation) என்றெல்லாம் பாராட்டி வருகின்றோம். இத்தகைய அரும்பெரும் பொருட் குறிப்பிலேயே, சம்பந்தர், நாவுக்கரசரைப் பல இடங்களில் 'அப்பர்' எனச் சிறப்பித்துக் குறிப்பிட்டு அருளினார் என்றும் கொள்ளலாம். தமிழ்நாட்டுக்குப் பல்லாற்றானும் தந்தை எனப் போற்றப்படத் தக்கவர் அப்பர் எனலாம்.

அப்பர் பாடலில் அப்பர்:

இனி, இறுதியாக இங்கு நாம் வேறொன்றும் அறிந்து மகிழ்தற்கு உரியதாக உள்ளது. இத்தகைய பல அரிய பெரிய பொருள்களெல்லாம் அமைந்து திகழ்கின்ற அப்பர் என்னும் இந்த அழகிய சொல்லை, அப்பர் பெருமானே தமது பாடல் ஒன்றில், அழகுறக் குறிப்பிட்டுள்ளார்.

ஐம்புலன்கள் நமக்குச் செய்கின்ற துன்பங்களை நாவுக்கரசர் இகழ்ச்சிக் குறிப்பில் நயமூற உணர்த்துகின்றார். ஐம்புலன்கள் நம்மைத் தத்தம் வழிகளில் ஈர்த்து அலைக்கழிக்கின்றன. நல்லனவற்றை விலக்கித் தீயனவற்றிலேயே நம்மைஈடுபடுத்தி,ஐம்புலன்கள் நமக்குச் செய்யும் துன்பங்களுக்கு அளவில்லை. நமது மனம் நல்லனவற்றை ஒரோவழி நாடினாலும், அதனை விடுமாறு செய்து, தீயனவற்றையே நாம் கைக் கொள்ளும்படி ஐம்புலன்கள் நம்மைப் பல்லாற்றானும் நலிவுறுத்துகின்றன. அதனால் நாம் செய்வதறியாது திகைத்து அலமந்து, சிதைந்து சீரழிந்து நிற்கின்றோம். இந்த ஐம்புலன்களின் இவ்வியல்பு, ஒருவகையில் செம்புலச் செல்வர்களாகிய ஞானாசிரியர்களின் செயலை ஒத்துள்ளது.

ஞானாசிரியர்:

ஒரு மனிதன் செய்யத்தக்கன இவை, செய்யத்தகாதன இவை என்று கூறி, விதிவிலக்குகளை உணர்த்தி அறிவுறுத்தி, நன்மை விளையச் செய்பவர்கள் ஞானாசிரியர்கள் ஆவர். 'அதனைச் செய், இதனைச் செய்யாதே' என்று அறிவுரைகூறி, நமக்கு அணியராயும் இனியராயும் இருந்து உதவி செய்வது, ஞானாசிரியர்களின் இயல்பு. 'நல்லனவற்றைக் கைக்கொள்ளுக, தீயனவற்றைக் கைவிடுக' என்பர் ஞானாசிரியர்! நல்லனவற்றை விலக்கி, அல்லனவற்றிற் செலுத்துவன ஐம்புலன்கள்! நம்மை உய்விக்கும் ஞானாசிரியர்களுக்கும், நம்மைக் கெடுத்து நலிவிக்கும் ஐம்புலன்களுக்கும் 'அது தருக' 'இது விடுக' என்னும் திறனில், ஒருவகையில் ஒப்புமைத் தன்மையுண்டு போலும்! என எள்ளற்குறிப்பு (Irony) அமைய, இகழ்ந்து பாடுகின்றார் நாவுக்கரசர்.

''முப்பதும் முப்பத் தாறும்
முப்பதும் இடு குரம்பை
அப்பர்போல் ஐவர் வந்து
அதுதருக இதுவிடுக என்று
ஒப்பவே நலிய லுற்றால்
உய்யுமாறு அறிய மாட்டேன்
செப்பமே திகழும் மேனித்
திருப்புக லூர னீரே''

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரத்தில் பயின்றுள்ள அப்பர் என்னும் சொல், அல்லனவற்றை விலக்கி நல்லனவற்றை நாம் கைக் கொள்ளும்படி செய்தருள்கின்ற ஞானப்பெருங் குரவர்களையே குறிப்பதாக அமைந்திருத்தல், அறிந்து மகிழ்தற்கு உரியது.

பாடற்பொருள் விளக்கம்:

ஒருசிலர் இத்திருப்பாடலுக்குப் பொருள் கொள்ளுங்கால் 'குரம்பை அப்பர்' என இயைப்பர். அங்ஙனம் கொள்ளாமல் 'குரம்பையில்' என ஏழாம் வேற்றுமையாகப் பொருள் கொள்ளுதல் நலம். ''ஒரு முழம் உள்ள குட்டம் ஒன்பது துறையுடைத்தாய், அரைமுழம் அதன் அகலம்; அதனில் வாழ் முதலை ஐந்து'' எனப் பிறிதோர் இடத்தில் நாவுக்கரசரே பாடியிருத்தல் காணலாம். 'குரம்பையில் ஐவர் வந்து நலிவர்'; 'அப்பர்போல் ஐவர் வந்து அது தருக இதுவிடுக என்று ஒப்பவே நலிவர்' எனக் கொள்ளுதல் சிறக்கும். 'அப்பர்போல்' என்றதனால், போலாமை புலப்படுத்தப் பெற்றது.

முடிவுரை:

இதுகாறும் கூறியவாற்றால், நாவுக்கரசர்க்கு 'அப்பர்' என வழங்கும் அரிய பெயரின் சொற்பொருள் நுட்பங்கள் ஓரளவேனும் உணரப் பெறும். அத்தகைய பெருஞ் சிறப்புக்குரிய அப்பர் பெருமான் அருளிய தேவாரத் திருமுறைகளை, நாம் அன்புடன் ஓதி, நலம்பலவும் எய்தி வாழ முயலுவோமாக!

சூலைநோய் தலைக்கீ டாகத்
தொல்சிவ நெறிக்கு மீண்டு
மூலையும் முடுக்கர் தோறும்
முத்தமிழ் முழங்கும் வண்ணம்
சாலநற் புரட்சி செய்த
தமிழ்நாட்டுத் தந்தை யாகும்
சீலமார் அப்பர் பெம்மான்
சிறப்பெலாம் போட்ற்றி உய்வாம்!

— ந.ரா.மு.

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய

திருமாலை

மூலமும், உரையும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

மறஞ்சுவர் மதிள் எடுத்து
மறுமைக்கே வெறுமை பூண்டு
புறஞ்சுவர் ஓட்டை மாடம்
புரளும்போது அறியமாட்டீர்,
அறஞ்சுவர் ஆகி நின்ற
அரங்கனார்க்கு ஆட்செய் யாதே,
புறஞ்சுவர் கோலம் செய்து,
புள்கவ்வக் கிடக்கின் றீரே (6)

(பொழிப்புரை): மனிதர்களே நீங்கள், கொடுமை என்னும் சுவரை மதிலாக எழுப்பியும், மறு பிறவியில் பெறுவதற்கு ஒன்று மின்மையை மேற்கொண்டும், வெளிச் சுவராய்ப் பழுதுபட்ட மாடம் போன்ற உடலானது அழிந்துவிடும் காலத்தை அறியாமல் இருக்கின்றீர்கள். அறமே தன் இயல்பாக விளங்குகின்ற திருவரங்கநாதப் பெருமானுக்கு அடிமை செய்யாமல், நீங்கள் வெளிச்சுவரான உடம்பை அழகுபடுத்தி, பறவைகள் கவ்விக் கொள்ளும்படி பயனின்றி வாழ்கின்றீர்கள். அந்தோ, இஃது என்ன அவல நிலை!

(குறிப்புரை): மனிதர்கள் தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் அறநெறியைப் புறக்கணித்து, தமக்கும் பிறர்க்கும் தீமையே பயக்கும் கொடிய செயல்களையே செய்து உழன்று வருதலின் ''மறஞ்சுவர் மதில் எடுக்கின்றனர்''. இவ்வாற்றால் இம்மை வாழ்விற் பெறுதற்குரிய நலங்களை இழப்பதுடன், மறுமையில் அடைதற்குரிய நன்மைகளையும் தேடிக் கொள்ளாமல், வாணாளை வீணாளாக்குதலின் ''மறுமைக்கும் வெறுமை பூண்கின்றனர்''. இத்தகைய மனிதர்கள் தமக்குரிய உயிர்நலனைக் கருதாது தம் உடலை ஓம்புதலையே முதன்மையாகக் கருதி, அதற்கென்றே அல்லும் பகலும் பாடுபட்டு அலைகின்றனர்; ஆனால் அந்த உடலோ, புறத்தே சுவர்களை மட்டுமே உடையதாய்ப் பழுதுபட்ட ஓட்டை மாடம் போன்றது. அது தானும் மறுகணத்தில் வாழ்ந்திடுமோ வீழ்ந்திடுமோ என்னும் நிலையில் இருப்பது. ஓட்டை மாடமாகிய இவ்வுடல் எப்போது வீழும் என்பதனைக்கூட, இவர்கள் அறிய மாட்டார்கள்.

இங்ஙனம் நிலையற்ற இப்பாழ் உடலை, இவர்கள் பல்லாற்றான் முயன்று அழகு செய்து கொள்வது, வீடு பாழ்பட்டு அதன் உள்ளே கிடக்க, அதன் வெளிச் சுவர்களுக்கு மட்டும் சுண்ணம் அடித்து அழகு செய்ய முயல்வது போன்ற பயனில் செயலாக உள்ளது. இங்ஙனம் இவர்கள் இழிந்த தம் உடலை ''புறம் சுவர் கோலம்'' செய்தாற்போல, எவ்வளவுதான் அழகுபடுத்திக் கொள்ள முயலினும், அஃது உயிர் நீங்கியபின் கழுகும் காகமும் கவ்வும்படி பிணமாய் அழிதல் திண்ணம். அந்நிலை நேருவதற்கு முன்பே, இம்மனிதர்கள் திருவரங்கப் பெருமானுக்கு அடிமை செய்து உய்யலாமே; அறமே தமக்கு இயல்பாகவும் வடிவமாகவும் உடைய திருவரங்கநாதன், இவர்களைக் காத்து ஆட்கொண்டு கருணை புரிந்து அருள்வானே; அரங்கனின் கருணையை அறியாமல், அந்தோ இம்மனிதர்கள் வீணே அழிந்துபடுகின்றனரே என்று, ஆழ்வார் பெரிதும் மனமிரங்கி இப்பாடலில் வருந்துகின்றார்.

இத்தகைய புல்லிய கொடிய மனிதர்களின் ஊனைக் கழுகும் காகமும் போன்ற பறவைகளும்கூட உண்ணுவதற்கு விரும்பாமல், அருவருத்து ஒதுக்கும் என்பதனையுணர்த்த, 'புள்ளுண்ணக் கிடக்கின்றீர்' என்னாமல், 'புள் கவ்வக் கிடக்கின்றீர்' என்று குறித்த நுட்பம் சுவைத்து மகிழற்பாலது.(6)

புலையறம் ஆகி நின்ற
புத்தொடு சமணம் எல்லாம்,
கலையறக் கற்ற மாந்தர்
காண்பரோ கேட்ப ரோதாம்?
தலையறுப் புண்டும் சாகேன்;
சத்தியம் காண்மின் ஐயா;
சிலையினால் இலங்கை செற்ற
தேவனே தேவன் ஆவான்! (7)

(பொழிப்புரை): இழிதகவு மிக்க செயல்களுடன் கூடியிருக்கின்ற பௌத்தம் சமணம் முதலிய புறநெறிகளை எல்லாம், கலைகள் பலவற்றையும் கசடறக் கற்றுத் தேர்ந்த பெருந்தகையாளர்கள், தமது உள்ளத்தில் ஒரு பொருளாகக் கொண்டு ஆராய்வரோ? அவற்றின் புல்லிய செய்திகளைக் காது கொடுத்துக் கேட்பார்களோ? என் தலையானது அறுக்கப்பட்டாலும், நான் சாகமாட்டேன். இஃது உண்மை. அன்பு

டையீர்! இதனைக் கண்கூடாக நீங்கள் காணுங்கள். தம்முடைய கோதண்டம் என்னும் வில்லினால் இலங்கையை அழியும்படி செய்த இராம பிரானே, அனைத்து உலகும் போற்றித் துதிக்கத்தக்க தெய்வமாவான்.

(குறிப்புரை): பௌத்தம் சமணம் முதலிய மதங்கள் உயரிய அறங்களை வற்புறுத்தி உணர்த்தியபோதிலும், அம்மதங்களைத் தழுவிய மக்கள் காலப்போக்கில் அவ்வறங்களைக் கைவிட்டு, அவற்றிற்கு நேர்மாறான செயலும் பண்பும் உடையராய் ஒழுகத் தலைப்பட்டனர்; அதனால் மக்கட் சமுதாயவாழ்வைச்சிதைத்துச் சீர்குலைத்து, இழிதகவுமிக்க வாழ்வை எய்தி நின்றனர். அதனால், ''புலை அறம் ஆகி நின்ற புத்தொடு சமணம்'' என்று ஆழ்வார் குறிப்பிடுவாராயினர். தீயவற்றைக் காண்டலும் கேட்டலும் கூடத் தீங்கு பயக்கும் ஆதலின், ''காண்பரோ கேட்பரோ? தாம்'' என்றார்.

சுருதி மிருதி இதிகாசங்களில் வேத தாற்பரியம் உணர்ந்து கைவந்தவர்கள், ''கலையறக் கற்ற மாந்தர்'' என்று சிறப்பிக்கப் பெற்றனர். அவர்கள் ''கூரத்தாழ்வான்போல்வார்'' எனச் சிறப்புற எடுத்துக் குறிப்பிடுவர் பெரிய வாச்சான்பிள்ளை. திருமாலே பரதெய்வம் என்னும் தம்முடைய தெளிவினைச் ''சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான், சத்தியம் காண்மின் ஐயா'' என்பதனால் குறிப்பிட்டருளினார். இங்ஙனம் தாம் உண்மை என்று தெளிந்ததனைக் கூறும் உறுதிப்பாட்டால், ''தலையறுப்புண்டும் சாகேன்'' என்று வலியுறுத்தி மொழிந்தார். உண்மையைச் சொல்லுவதனால் தலை அறுபட மாட்டாது. அறுப்புண்டாலும் உயிர் போகாமல் இருக்கும் என்பது கருத்து (7).

வெறுப்பொடு சமணர் முண்டர்
விதியில் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோய தாகிக்
குறிப்பெனக்கு அடையு மாகில்,
கூடுமேல், தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய்!
அரங்கமா நகரு ளானே! (8)

(பொழிப்புரை): அரங்கமாநகரில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாளனே; இறையருட் செய்திகளைக் கேட்கவும் பொறாத, வெறுப்போடு கூடிய சமணர்களும், சைவர்களும், நற்பேறு இல்லாத பௌத்தர்களும், நின்னுடைய திறத்தில் பொறுப்பதற்கு இயலாத இழி சொற்களைக் கூறி நிந்தித்துப் பேசுவார்களாயின், அவ் இழி சொற்களைக் கேட்ட அதுதானே, எனக்கு நோயாக அமைந்து, என் உயிர் போய்விடுவது எனக்கு மிகவும் நலம். இறை நெறிப் பகைவர்களின் சொல்லும் செயலும் சிறிதும் பொறுக்க மாட்டாத எனக்கு, நிந்தித்தவன் ஓடிப்போய்விடாமல் என் எதிரே நிற்பானாயின், அதற்கு மேல் எனக்கு ஆற்றலும் கூடுமாயின், நிந்தித்த அவ்விடத்திலேயே, அவன் தலையை அறுத்துத் தள்ளுதலே கடமையாகும்.

(குறிப்புரை): இப்பாடலை ஒரு சிலர் சமயக் காழ்ப்புடைமைக்கும், சமயப் பொறையின்மைக்கும் சான்றாக மேற்கோள் காட்டுவர்*. தாம் போற்றி வழிபடும் திருமாலை, வெறுப்போடு பொறுப்பரியன பேசி நிந்திப்பவர்கள் பால், தமக்குள்ள வெறுப்பினையே, ஆழ்வார் இங்ஙனம் புலப்படுத்தியருளினர் எனக் கொள்வதல்லது, அருட்பெருஞ் சான்றோரான ஆழ்வாரின் அருள்மொழியைப் பிறவாறு மிகைப்படுத்தி உள்ளபடியே கொள்ளுதல் பொருந்துவதன்று. ''குறிப்பெனக்கு அடையுமாகில்'' என்றும்; ''கூடுமேல்'' என்றும் சொல்லியருளியதனாலேயே, அவற்றின் இயலாமையை ஆழ்வார் காட்டியருளியமை தெளியலாம். தெய்வ நிந்தை பொறாத அவர்தம் திருவுள்ளத்தின் இயல்பு, நிந்தனையைக் கேட்டமையே தமக்கு நோய்வரக் காரணமாக அமைந்து, அதனால் தம் உயிர்போவது நன்று என்னும் கருத்தமைய ''அதே நோயதாகிப் போவது'' என்றதனாற் புலனாகும்.

தெய்வநிந்தை கேட்ட அளவில், அதனைத் தாங்கலாற்றாது தம் உயிர் போதல் நன்று என்று கருதும் ஆழ்வார், அங்ஙனம் தம் உயிர் இயல்பாகப் போகாது நிற்குமாயின், அதனைப் போக்கிக் கொள்ளத் தம் தலையைத் தாம் அறுத்துக் கொள்ளுதல் கடமை எனக் கருதினார் போலும்! அக்கருத்திலேயே ''அவர் தலையை'' என்னாது பொதுவாகத் ''தலையை'' என்று மட்டும் அருளினார் எனக் கொள்ளுதலும் தகும். பிரகலாதாழ்வான் மகாபலியை நோக்கிக் ''கெடுவாய்! என் முன்னே பகவத் நிந்தை செய்தாய், என் தலையை அறுத்தாயாகில் எனக்கு உபகரித்தாய் ஆயிற்று'' என்று கூறியதாக வரும் உரைப்பகுதி இங்கு சிந்திக்கத்தக்கது.

முண்டம்-நெற்றி. நெற்றியில் திருநீறு அணிபவர் 'முண்டர்' எனப்பட்டனர். ''செஞ்சவே ஆண்டுகொண்டான் திருமுண்டம் தீட்ட மாட்டாது அஞ்சுவார் அவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே'' என்பது திருவாசகம். திரிபுண்டரம் என்பது திருமுண்டம் எனச் சிதைந்து, பின்னர் முண்டர் என வந்தது எனினுமாம். ''சமணர், முண்டர்'' என்று அல்லாமல் ''சமணமுண்டர்'' எனவும், ''சமண மிண்டர்'' எனவும், பாடபேதம் கொள்ள இடமுண்டு.

மற்றுமோர் தெய்வம் உண்டே,
மதியிலா மானி டங்காள்;
உற்றபோ தன்றி நீங்கள்
ஒருவன்என் றுணர மாட்டீர்;
அற்றமேல் ஒன்று அறியீர்;
அவன் அல்லால் தெய்வம் இல்லை;
கற்றினம் மேய்த்த எந்தை
கழலிணை பணிமின் நீரே!

---

* "It is difficult, at this distance of time, to understand why so implacable a hatred was implanted against the Jains and the Buddhists in the heart of our otherwise amiable author. With the hopelessly impenetrable darkness that envelopes the history of the period, it is idle to open such questions. We should rejoice, if we could, with any tolerable certainty, determine what that period itself was".

—'Manonmaniyam' Prof. P. Sundaram Pillai.

(பொழிப்புரை): தத்துவ ஞானம் இல்லாத மனிதர்களே, யான் கூறுகின்றவனைத் தவிரவும், புகலிடமாக அடையக்கூடிய வேறொரு தெய்வம் உள்ளதோ? இல்லை. நீங்கள் வழிபடுகின்ற சில தேவதைகளுக்கு ஓர் இடர்ப்பாடு நேர்ந்த காலத்தில் அல்லாமல், மற்றைக்காலத்தில் யான் கூறுகின்ற இவன் ஒருவனே கடவுள் என்பதை அறியமாட்டீர்கள். அங்ஙனம் நீங்கள் அறியாமைக்குக் காரணம், வேதத்தில் சொற்பொருளுக்கு மேற்பட்டு நிற்கும் நுண்பொருளை நீங்கள் சிறிதும் அறியாமையே. இனி வேதங்களின் முடிவான பொருளை நீங்கள் உணருமாறு யான் கூறுவேன். யான் கூறும் அந்தப் பொருளைத் தவிர, நாம் வழிபட்டு உய்வதற்குரிய தெய்வம் வேறொன்றுமில்லை. ஆதலால் பசுக் கன்றுகளின் கூட்டங்களை மிகப் பரிவோடு மேய்த்து வந்த, எமது தெய்வமாகிய கண்ணபிரானின் இரண்டு திருவடிகளையும் நீங்கள் சரணமாகப் பற்றி வழிபட்டு உய்யுங்கள்.

(குறிப்புரை): 'மதி' என்பது ஈண்டுத் தத்துவ ஞானம்; அஃதாவது 'ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு'. வேறு பிற துறைகளில் எவ்வளவுதான் அறிவாற்றல் பெற்றிருப்பினும், இறையுணர்வில்லாத அறிவு பயனில்லாதது என்பது கருத்து. அஃது இல்லாதவர்களை மாண்டர்கள் என உயர்திணையால் கூற விரும்பாமல், 'மானிடங்காள்' என அஃறிணையால் கூறினார். இரண்டு எதிர்மறைகள் ஓர் உடன்பாட்டுப் பொருளை இனிது வற்புறுத்தி உணர்த்தும் என்னும் இலக்கண முறைமை பற்றி, ''உற்றபோது அன்றி உணரமாட்டீர்'' எனவும், ''அவனல்லால் தெய்வமில்லை'' எனவும் குறிப்பிட்டருளினார். இதனாற் பிறதெய்வங்கள் இல்லை என ஆழ்வார் மறுக்கின்றார் அல்லர்! எம்பெருமானாற் படைக்கப்பட்டு, அவன்வழி நிற்கும் தேவதைகள் பல உள என்பதில் தடையில்லை. அடைக்கலமாகப் பற்றிப் போற்றி வழிபடத்தக்க சிறப்புடைய தெய்வம் வேறு இல்லை என்பதே கருத்து. அற்றம்-மறைபொருள், நுண்ணிய உட்கருத்து. ''கற்றினம் மேய்த்த எந்தை கழல்'' என்று சிறப்பித்ததினால், தாம் குறிப்பிடும் தெய்வமாகிய கண்ணபிரானின் எளிமையையும், பெருமையையும் இனிது விளக்கி யருளினார். (9)

நாட்டினான் தெய்வம் எங்கும்
    நல்லதோர் அருள்தன் னாலே;
காட்டினான் திருவ ரங்கம்
    உய்பவர்க்கு உய்யும் வண்ணம்;
கேட்டிரே நம்பி மீர்காள்,
    கெருட வாகனனும் நிற்கச்
சேட்டைதன் மடி யகத்துச்
    செல்வம்பார்த் திருக்கின் றீரே!

(பொழிப்புரை): இருளன் மாடன் முதலிய தேவதைகளை, இராசசரும் தாமசரும் பற்றும்படி எல்லா இடங்களிலும் இறைவன் நிலை நிறுத்திவைத்தான்; உய்தி பெற விரும்புபவர் ஆகிய சாத்துவிகர்களுக்கு அவர்கள் உய்வதன் பொருட்டு, தனது சிறந்த ஒப்பற்ற அருளின் மிகுதியால் திருவரங்கமாகிய கோயிலைக் காண்பித்து அருளினான். நமக்கு ஒருகாலும் குறையில்லை என்று நினைத்துக்கொண்டு நம்பியிருப்பவர்களே, நான் சொல்வதைக் கேட்பீர்களா? கருடனை வாகனமாக உடைய திருமால் தலைசிறந்த தெய்வமாகத் திகழ, அவனை விட்டுப் பிற தெய்வங்களைச் சென்று பற்றுகின்ற நீங்கள், மூதேவியின் மடியினுள்ளே இருந்து செல்வம் பெறுவதற்குக் கருதியிருக்கின்றீர்கள் போலும்.

(குறிப்புரை); மனிதர்கள் தாமசம், இராசசம், சத்துவம் என்னும் மூன்று குணங்களை உடையவர்கள் ஆவர். ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு குணம் மேலிட்டு நிற்கும். ஆதலின் அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப அவர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுப் பல பல சிறு தேவதைகளை இறைவனே படைத்தருளினான். அரசனது பல்வேறு அலுவலர்கள், நாட்டின் பல பகுதிகளிலும் பொதுமக்களிடத்தில் வரிப் பணத்தைத் தண்டல் செய்து, அவற்றைத் தமக்கெல்லாம் தலைவனாகிய அரசர் பிரானிடத்தில் சேர்ப்பது போன்றது, இச் சிறு தேவதைகளின் தொழில். இதனை ''இறுக்கும் இறை இறுத்து உண்ண, எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி நிறுத்தினான் தெய்வங்களாக, அத்தெய்வ நாயகன்தானே'' என்றும்; ''அவரவர் விதிவழி அடைய நின்றனரே!'' என்றும் நம்மாழ்வார் அருளிச் செய்தல் காணலாம். அதலின் இவரும் ''நாட்டினான் தெய்வம் எங்கும்'' என்று அருளிச் செய்தார்.

தாமசர்க்கும் இராசசர்க்கும் அவரவர் தகுதிக்கேற்ப வழிபட்டு உய்யும்படி சிறு தெய்வங்களைப் படைத்தருளினான் ஆயினும், சத்துவகுணமுடைய உத்தமர்கள் உய்யும்பொருட்டுத் தன் பேரருளால் அவர்களுக்குத் திருவரங்கம் கோயிலைக் காண்பித்தருளினான் என்பது, 'உய்பவர்க்கு உய்யும் வண்ணம் திருவரங்கம் காட்டினான்' என்பதனால் குறிப்பிட்டார். இங்ஙனம் பக்குவமிலார்க்குத் தெய்வம் எங்கும் நாட்டியதும், பக்குவம் மிக்கார்க்குத் திருவரங்கம் காட்டியதும் ஆகிய இரண்டுமே, திருமாலின் பேரருட்டிறனே யாதலின், இருவர்க்குமே பொருந்தும்படி, ''நல்லதோர் அருள் தன்னாலே'' என்னும் தொடரை இடைநிலைத் தீவகமாக அமைத்து அருளினார். ''தாப்பிசைப் பொருள்கோள்'' என்னும் அமையும். 'ஜ்யேஷ்டா' என்னும் வடசொல் 'சேட்டை' எனத் தமிழில் வந்தது. சேட்டை-மூதேவி. வழிபடத் தக்க பெருமையும் சிறப்பும் உடையவன் திருமாலே என்பதை உணர்த்தக் 'கருட வாகனன்' என்று கிளந்து குறிப்பிட்டார். திருமாலை வழிபட்டுப் பெறத் தகுந்த சிறந்த நலங்களையெல்லாம், பிற சிறு தெய்வங்களின் வாயிலாகப் பெறுதல் இயலாது என்பதனை வலியுறுத்த, ''சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே'' எனப் பரிவு தோன்ற வினவினார். வறுமை அடைவிப்பதையே தனக்கு இயல்பும் தொழிலுமாக உடைய மூதேவியின் வாயிலாகச் செல்வம் பெறக் கருதுதல் பொருந்தாமை போல, திருமாலால் பெறத் தகுந்த சிறந்த பேறுகளைப்

பிற சிறு தெய்வங்களால் பெறுதல் கூடும் என்று நீவிர் கருதுவது, பொருந்தாது என்பது கருத்து (10).

ஒருவில்லால் ஓங்கும் முந்நீர்
அழைத்து, உலகங்கள் உய்யச்
செருவிலே அரக்கர் கோனைச்
செற்றநம் சேவகனார்,
மருவிய பெரிய கோயில்
மதிள்திரு வரங்கம் என்னாக்
கருவிலே திருவி லாதீர்
காலத்தைக் கழிக்கின் றீரே! (11)

(பொழிப்புரை): சார்ங்கம் என்கிற ஒரு வில்லினால் கொந்தளிப்புள்ள கடலை அணை கட்டி, உலகங்கள் எல்லாம் வாழும்பொருட்டு, போர்க்களத்திலே இராவணனை முடித்தருளிய நம்முடைய தலைவரும், பெருவீரருமாகிய திருமால், பொருந்தி வாழ்கின்ற பெருமைமிக்க கோயிலாவது, ஏழுமதில்களை உடைய திருவரங்கம் என்று சொல்லமாட்டாமல், கருவிலே திருவில்லாதவர்களாகிய நீங்கள் காலத்தை வீணாகக் கழிக்கின்றீர்களே, அந்தோ! இது ஏன்?

(குறிப்புரை): இராமபிரான் கடலரசனாகிய வருணனை அடைக்கலம் புகுந்து வழி விடுக என்று வேண்டிக்கொண்டபோதும், அவன் வந்து முகங்காட்டாது ஒழிய, இராமபிரான் மிகவும் சினங்கொண்டு இலக்குவனை நோக்கி, ''வில்லைக் கொண்டுவா'' என்று பணித்தருள, அதன் பின்னரே கடலரசன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து பணிந்து தன்மீது அணைகட்டி இலங்கைக்குப் போகும்படி அமைந்தனன். ஆதலால், ''ஒரு வில்லால் ஓங்கும் முந்நீர், அடைத்து'' என்றார். முந்நீர்-கடல்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று நீர்களையுடையது. 'ஓங்கு' என்பது இங்குக் கடலின் இயல்பான கொந்தளிப்பைக் கூறுவது அன்று. கடலரசன் ஆகிய வருணன், இராமபிரானின் சீற்றத்தாலே அஞ்சி நடுநடுங்கி வந்து பணிந்த திறன் கூறிய வாறு.

உலகங்களையெல்லாம் உய்விக்கக் கருதிய பெருமாள், தனித்தனியாக ஒவ்வொருவருடைய இருப்பிடமும் சென்று அவர்களை வாழ்விப்பது அரிய செயல் என்று எண்ணி, இராவணன் ஒருவனைக் கொன்றுவிட்டால், உலகங்களையெல்லாம் உய்வித்ததாகும் என்று கருதி, இராவணனைக் கொன்றருளினார் என்னும் கருத்துத்தோன்ற, ''உலகங்கள் உய்யச் செருவிலே அரக்கர் கோனைச் செற்ற'' என்றார். அரக்கர்கோன்-இராவணன். இராவண வதம் புரிந்ததனால் வினையற்று நின்றும், இராமாவதார அனுபவத்தை இழந்த பிற்பாடர்க்கும் நலம் புரிதற்கே, பெருமாள் திருவரங்கத்தில் எழுந்தருளிவந்து கண்வளர்ந்தருளுகின்றார். ஆதலின், நம் ''சேவகனார் மருவிய பெரிய கோயில்'' என்றார்.

இராமாவதாரத்தைப் போன்று, இங்கும் சில இடர்ப்பாடுகள் விளையுமோ என்று அஞ்சித் திருமங்கையாழ்வார் போன்ற சான்றோர்கள், காவலாக இட்டு வைத்த மதிலையுடையது என்னும் கருத்தில் 'மதிள் திருவரங்கம்' என்றார். திருவரங்கத்தையும், அங்கு எழுந்தருளி விளங்கும் திருவரங்கநாதனையும் நினைந்து போற்றாதவர்களின் புன்மைநிலை குறித்து, ''கருவிலே திருவிலாதீர்'' என்றார். ஞானிகள் இறைவனை இடைவிடாது போற்றிக் கொண்டிருந்தும், 'பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்றாற் போலக் கதறி அழுதலைக் கேட்டுவைத்தும், நீங்கள் காலத்தைப் பாழே போக்குகின்றீர்களே என்று, ஆழ்வார் நம்பொருட்டுப் பெரிதும் பரிவிரக்கம் கொண்டு வருந்திக் 'காலத்தைக் கழிக்கின்றீரே' எனக் கதறுகின்றார். (11).

நமனும் முற்கலனும் பேச
நரகில் நின்றார்கள் கேட்க,
நரகமே சுவர்க்கம் ஆகும்
நாமங்கள் உடைய நம்பி,
அவனதுஊர் அரங்கம் என்னாது
அயர்த்துவீழ்ந்து அளிய மாந்தர்,
கவலையுள் படுகின்றார் என்று
அதனுக்கே கவல்கின் றேனே (12)

(பொழிப்புரை): இயம தருமனும், முற்கலன் என்பவனும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்குங்கால், அதனை நரகத்திலிருந்தவர்கள் கேட்டதின் பயனாக, அந்த நரகம் தானே சுவர்க்கலோகம் ஆகும்படி செய்த, சிறப்பு வாய்ந்த திருப்பெயர்களையுடைய நம்பியாகிய பெருமாளின் திவ்வியதேசம், திருவரங்கம் ஆகும் என்று சொல்லாமல், இரங்கத்தக்க மனிதர்கள், தம் இயல்பை மறந்து உலகியற் படுகுழிகளில் விழுந்து, துன்பத்தில் அகப்பட்டுக் கொள்கின்றார்களே என்று, அதற்காகவே யான் மிகவும் கவலைப்படுகின்றேன்.

(குறிப்புரை): சான்றோர்கள் தம் நலனுக்காக அல்லாமல், உலக நலங்கருதியே கவலை கொள்வார்கள் என்னும் உண்மையினை, இப்பாடல் உணர்த்துகின்றது. ''நன்றறிவாரிற் வாரிற் கயவர் திருவுடையர் நெஞ்சத்து அவலமிலர்'' என்னும் திருக்குறளும், இங்குச் சிந்திக்தற்குரியது. முற்கலன் என்பவன் மிகக் கொடிய ஒரு பெரும் பாவி. அவன் ஒருநாள் கோதானம் செய்யும்போது 'கிருஷ்ணாய' என்று சொல்லிச் செய்தான். அதனால் அவன் மாண்ட போது, இயமன் அவனை எதிர்கொண்டு சிறப்புச் செய்தான். அதுகண்ட முற்கலன் தனக்குச் சிறப்புச் செய்வதற்குக் காரணம் வினவ, அதற்கு இயமன் 'கிருஷ்ணன்' என்னும் பெயரை நீ ஒருமுறை சொல்லியுள்ளாய் என்று, அவனைப் புகழ்ந்து கூறினான்.

இங்ஙனம் இவ்விருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, கிருஷ்ணன் என்னும் சொல், அங்கு நரகத்தில் இருந்தவர்களின் காதில் விழுந்தது. அதன் பயனாக அவர்களும், தம் துன்பங்கள் நீங்கி இன்பம் எய்தினார்கள். இத்தகைய ஆற்றலும் சிறப்பும் அமைந்த திருப்பெயர்கள் பலவற்றை உடையவர் பெருமாள் என்பதனை, ஆழ்வார் இப் பாடலின் முதவிரண்டு அடிகளால் குறிப்பிட்டு அருளினார்.

நரகத்தையே சுவர்க்கம் ஆக்க வல்லது, இறைவனின் திருப்பெயர் என்பது கருத்து. தீவினைக்குரிய இடம், இங்ஙனம் நல்வினைக்குரிய இடமாதல் கூடுமோ எனின், இராவணன் இருக்குங்கால் 'தாசமசபுரி' எனப் பெயர் பெற்றிருந்த இலங்கைமாநகரம், அவன் இறந்த பிறகு விபீடணனின் ஆட்சியில் சாத்வீகபுரி எனும்படி மாறிச் சிறந்து விளங்கியது. ஆதலின் கூடும் என்பது பெரியோர் கருத்து (12).

எறியும்நீர் வெறிகொள் வேலை
　　மாநிலத்து உயிர்கள் எல்லாம்
வெறிகொள்பைந் துளப மாலை
　　விண்ணவர் கோனை ஏத்த,
அறிவிலா மனிசர் எல்லாம்
　　அரங்கம் என்று அழைப்பர் ஆகில்,
பொறியில்வாழ் நரகம் எல்லாம்
　　புல்எழுந்து ஒழியும் அன்றே! (13)

(பொழிப்புரை): அலைகள் வீசுகின்ற தண்ணீரையும், புலாலின் நாற்றத்தையும் கொண்டிருக்கின்ற கடலால் சூழப்பெற்ற இப்பெரிய உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும், நறுமணம் கமழ்கின்ற திருத்துழாய் மாலையை அணிந்துள்ள தேவர்களின் தலைவனாகிய திருமாலைத் துதிப்பதற்கென்றே அமைந்துள்ளன. அங்ஙனம் துதிப்பதற்கும் அறிவில்லாத மனிதர் யாவரும், அரங்கம் என்ற பெயரைமட்டுமே கூறுவார்களாயினும், அவ்வளவிலேயே ஐம்பொறிகளின் வயப்பட்டு வாழ்கின்ற ,நரகம் போன்று கொடிய இவ்வுலக வாழ்வின் தீங்குகள் முழுவதும், புல் முளைத்து அழிந்தொழிந்து போய்விடும்.

(குறிப்புரை): திருவரங்கம் என்ற பெயரைச் சொன்ன அளவிலேயே ,தீவினைகள் நீங்கி நலம்பெறலாம் என்பது, கருத்து. 'மாநிலத்து உயிர்களெல்லாம் இருப்பது விண்ணவர்கோனை ஏத்தவே' என்பது, ஆழ்வாரின் முடிந்த முடிவான துணிவு. 'அழைப்பராகில்' என்றதனால், அங்ஙனம் அழைத்தல் பாவிகளுக்கு இயலாது என்பது கருத்து. ஞானிகளுக்கு இவ்வுலகம நரகம்போலத் தோன்றும் ஆதலின், அவர்களின் கருத்தால் இவ்வுலகத்தை ஆழ்வார் நரகம் என்று குறிப்பிட்டார். வேலை-கடல், வெறி-நறுமணம். புல் எழுந்து ஒழியும்-பாழாகிப் போகும்; நீங்கியொழியும்.(13)

வண்டினம் முரலும் சோலை,
　　மயிலினம் ஆலும் சோலை
கொண்டல்மீது அணவும் சோலை,
　　குயிலினம் கூவும் சோலை,
அண்டர்கோன் அமரும் சோலை,
　　அணிதிரு வரங்கம் என்னா
மிண்டர்பாய்ந்து உண்ணும் சோற்றை
　　விலக்கி, நாய்க்கு இடுமின் நீரே (14)

(பொழிப்புரை): வண்டுகளின் கூட்டங்கள் இனிமையாக ரீங்காரம் செய்கின்ற சோலைகளும், மயில்களின் கூட்டங்கள் தோகையை விரித்து நடனம் செய்கின்ற சோலைகளும், மேகங்கள் மேலே வந்து தன்மேற் படிய நிற்கின்ற சோலைகளும், குயிலின் கூட்டங்கள் இனிமையாகக் கூவுகின்ற சோலைகளும், தேவருக்குத் தலைவனாகிய திருவரங்கநாதன் விரும்பி உறையும் சோலைகளும், அழகாகச் சூழ்ந்துள்ள திருவரங்கம், என்று சொல்லமாட்டாத மூர்க்கர்கள் மேல்விழுந்து உண்ணுகின்ற உணவை, அவர்கள் உண்ணாதபடி தடுத்து, நீங்கள் நாய்களுக்கு இடுங்கள்.

(குறிப்புரை): பெருமாள் உயிர்களின் ஈடேற்றத்தின் பொருட்டுத் திருவரங்கத்திற்கு வந்து எழுந்தருளியிருக்கின்றார். அவரது அருள் இயல்பினை உணர்ந்து, நன்றியுடன் போற்றி உய்யாதவர்களைத் 'திருவரங்கம் என்னாமிண்டர்' என்றார். எவருள்ளமும் கவர்ந்து கொள்ளை கொள்ளத்தக்க சிறப்பினை உடையது திருவரங்கம் என்பார், அதன் இயற்கை நலங்களை வியந்து புகழ்ந்தார். மயிலும் குயிலும் வண்டுகளும் கொண்டல்களும் போன்ற அஃறிணைப் பொருள்களும், விரும்பும் இயல்புடைய திருவரங்கத்தினை, இவர்கள் விரும்புகின்றிலரே என்று, ஆழ்வார் பெரிதும் இரங்குகின்றார். நன்றியில்லாத மனிதர்கள் உண்ணுவதற்கு உணவு அளித்தலைவிட, நன்றியுணர்வுடைய நாய்கள் உண்ணுவதற்கு உணவு அளித்தல் நலம்பயக்கும் என்பது கருத்து.(11).

மெய்யர்க்கே மெய்யன் ஆகும்,
　　விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்
　　புட்கொடி யுடைய கோமான்,
உய்யப்போம் உணர்வி னார்கட்கு
　　ஒருவன்என்று உணர்ந்த பின்னை,
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்
　　அழகன்ஊர் அரங்கம் அன்றே (15)

(பொழிப்புரை): கருடனாகிய பறவையைக் கொடியாக உடைய தலைவராகிய திருமால், நல்வினையில்லாத என்னைப்போல, அருளைப் பெறுதலில் வெறுப்பின்மை உடையவர்க்குத் தன் இயல்பினை உள்ளபடி காட்டி உணர்விப்பான். அவன் திறத்தில் வெறுப்புற்றுப் பகைமை கொண்டுள்ள பொய்யர்களுக்குத் தனது இயல்பைக் காட்டாமல், அவர்களுக்குத் தானும் பொய்யனாய் இருப்பான். தாம் உய்வதன்பொருட்டு நன்னெறியிற் செல்லும் உணர்வினையுடைய மெய்யர்க்கு, இறைவன் ஒருவன் உண்டு என்று நல்லறிவு தோன்றிய பின்னர், அவர்களுக்கு மேலும் நேரக்கூடிய ஐயங்களைப் போக்கி, அவர்களின் முன்னர்த்தோன்றிக் காட்சியளிக்கின்ற அழகையுடையவனாகிய பெருமானின் இருப்பிடம் திருவரங்கம் ஆகும்.

(குறிப்புரை): 'மெய்யர்' என்பது இப்பாடலில் மெய்யுணர்வுடையவர் என்று பொதுவாக இல்லாமல், வெறுப்பின்மை (அத்வேஷம்) உடையவர் என்னும் பொருளில் வந்தது. எனவே பொய்யர் என்பது, அதற்கு மறுதலையாக வெறுப்புடையவர் என்னும் பொருளைச் சுட்டிக் காட்டி நின்றது. 'விதிஇலா என்னைப் போல' என்னும் தொடர், இடைநிலைத் தீவகமாக இறைவன் மெய்யர்க்கு மெய்யவனாவதற்கும், பொய்யர்க்குப் பொய்யனாவதற்கும் உவமையாக வந்தது. யான் இறைவன்பால் வெறுப்புற்று அவனது இருப்பை மறுத்துப் பொய்ய

னாகத் திரிந்தபோது, இறைவனும் என்னை வெறுத்து என்னைப் புறக்கணித்துப் பொய்யனாக இருந்தான்; யான் அவன்பால் வெறுப்பின்றி மெய்யனாய் உள்ள இப்போது, என்பால் இறைவனும் வெறுப்பின்றி, என்பக்கல் தானும் மெய்யனாய்த் தன் இயல்பெல்லாம் எனக்கு விளங்குமாறு சிறப்புணர்வைத்தோற்றுவித்தான் என்பது கருத்து.

மெய்யுணர்வு பிறந்தபின்னர், இவ்வாழ்வார் தம்மைக் குறித்து 'விதியிலா என்னை' என்று வெறுத்து இழித்துக் கூறிக் கொள்வது பொருந்துமோ எனின், முன்னரே தாம் இறைவனை அணுகி ஈடேறி உய்யவேண்டியிருக்க, அங்ஙனம் இல்லாமல் நெடுநாள் அவனை இழந்துகிடந்த தமது தீவினையினை நினைத்து வருந்திக் கூறினர் ஆதலின், பொருந்தும் என்பது. தத்துவஞானம் நிரம்பாமல் தன்பக்கம் வெறுப்பின்மை மட்டுமேயுடைய உயிர்களையும், இறைவன் காத்தருளுவதற்குக் காரணம், உயிர்கள் எல்லாம் தனக்கு உடைமையாக இருக்க, தான் அவற்றிற்கு உடையவனாய் விளங்கும் உறவு உரிமையேயாம் என்பது தோன்றக் 'கோமான்' என்றார். ''மிகப்பெருஞ் செல்வராய் இருப்பவர்களேயாயினும், ஒரு காசு விழுந்த இடத்தே சென்று தேடா நிற்பார்கள். தத்தம் பொருளை விடமாட்டாமையாலே'' எனவரும் விரிவுரை இங்கு உணரற்பாலது. விதி-நல்லூழ், நல்வினை.(15).

சூதனாய்க் கள்வ னாகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும்
வலையுட்பட் டழுந்து வேனைப்
போதரே என்று சொல்லிப்
புந்தியிற் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகனூர் அரங்கம் அன்றே

(பொழிப்புரை) சூதாடுகின்றவனாகவும், களவு செய்பவனாகவும் ஆகிக் காமுகர்களோடு சேர்ந்திருந்த காலத்தில், அழகிய பெண்களுடைய கயல் போன்ற கண்களாகிய வலையினுள்ளே அகப்பட்டுக் கொண்டு அழுந்திக் கிடந்த என்னை, இங்கே வா என்று அன்புடன் கூறி, என் உள்ளத்திலே வந்து புகுந்து, தன்னிடத்தில் எனக்கு அன்பை வளரச் செய்த, அழகிய மணவாளனது இருப்பிடம், திருவரங்கம் என்னும் தலமாகும்.

(குறிப்புரை): இப்பாடலின் முதலிரண்டு அடிகளால், தாம் முன்பு இருந்த இழிநிலையையும், பின் இரண்டு அடிகளால் இப்போது பெற்ற நன்மையையும் கூறுகின்றார். ஐம்புல நுகர்ச்சிகளில் ஈடுபட்டு, அதற்குரிய பொருள் தேடுவதற்காகச் சூதாடுதல், களவுபுரிதல், தூர்த்தரோடு இசைதல் ஆகிய செயல்களில் தாம் ஈடுபட்டிருந்ததாக, உலகவரின் குற்றங்களை, ஆழ்வார் தம்மீது ஏற்றி உரைத்துக் கொண்டருளுகின்றார். சிற்றின்பமாகிய உலகியலில் ஈடுபட்டு நிற்பதனை ''மாதரார் கயற்கண் என்னும் வலையுட்பட்டு அழுந்துவேன்'' என்று, ஆழ்வார் குறிப்பிட்டுக் கொண்டருளினார். இங்ஙனம் நெறியல்லா நெறிச்சென்று கொண்டிருந்த தம்மை, இறைவன் தானே வலிந்துவந்து ஆண்டுகொண்டான் என்னும் செய்தியைப் ''போதரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்தான்'' என்பதனால் புலப்படுத்தினார். இறைவன், தமது கடியகொடிய உள்ளத்தையும் ஈர்த்து ஆட்கொண்டருளித் தன் பக்கல் ஈடுபடச் செய்துகொண்டதனால், இறைவனை ''ஆதரம் பெருகவைத்த அழகன்'' என்று புகழ்ந்து போற்றினார்.(16)

விரும்பிநின் றேத்த மாட்டேன்
விதியிலேன் மதியொன் றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம்
இறையிறை யுருகும் வண்ணம்
கரும்பமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டென்
கண்ணிணை களிக்கு மாறே (17)

(பொழிப்புரை): விருப்பம் கொண்டு, ஒரு நிலையில்நின்று, யான் புகழ்ந்து துதிக்கமாட்டேன். கை கூப்புதல் முதலிய செயல்களைச் செய்யும் பேறும் யான் பெறவில்லை; இறைவன் ஒருவன் உண்டு என்று உணர்கின்ற அறிவு நலம், எனக்குச் சிறிதும் இல்லை. இத்தகைய என்னுடைய இரும்பைப் போன்ற கடினமான நெஞ்சானது, சிறிது சிறிதாக உருகும்படி, வண்டுகள் பொருந்திய சோலைகளால் சூழப்பெற்ற, சிறப்புமிக்க திருவரங்கத்தைக் கோயிலாகக் கொண்டருளிய இனிய கரும்பு போல்பவன் ஆகிய இறைவனை, என்னுடைய இரண்டு கண்களும் காணும் பேறுபெற்றுக் களிப்புறுகின்ற தன்மை எத்தகையது!

(குறிப்புரை): தரித்திரனுக்கு நித்திய பாயசம் கிடைத்தாற்போல, ஒருவகைத் தகுதியும் இல்லாத கல்நெஞ்சுடைய தமக்கு அழகிய மணவாளன் காட்சி அளித்த கருணையை, ஆழ்வார் வியந்து புகழ்ந்தவாறு. இறைவனை விரும்புதலும், துதித்தலும், இறையருளைப் பெறுவதற்கு உரிய எளிய இனிய வழி. தாம் அதனைச் செய்திலர் என்பார், ''விரும்பி நின்று ஏத்த மாட்டேன்'' என்றார். உள்ளம் ஈடுபடா விட்டாலும், வெறும் உடலளவிலாவது கைகூப்புதல் முதலிய செயல்களைச் செய்யலாம். அதற்குரிய நற்பேறும் தமக்கு வாய்த்திலது என்பார், 'விதியிலேன்' என்றார். வணங்குதலும் துதித்தலும் செய்யாவிட்டாலும், அறிவினால் இறைவன் ஒருவன் உளன் என்பதைச் சிந்தித்து உணர்தலேனும் செய்யலாம்; அதற்கும் தமக்கு வாய்ப்பில்லை என்பார், 'மதியொன்றும் இல்லை' என்றார். உருக்கம் சிறிதுமில்லாத தமது உள்ளத்தினை ''இரும்புபோல் வலியநெஞ்சம்'' என்று இகழ்ந்து பழித்தார். 'இரும்புபோல் நெஞ்சம்' என்றதே அமையுமாயினும், 'வலிய' என்று அடைமொழி கொடுத்தது, இரும்பை நெருப்பிற் காய்ச்சியேனும் உருக்கிக் கொள்ளுதல் இயலும், என் நெஞ்சத்தினை உருகச் செய்தற்கோ எதனாலும் இயலாது என்பது உணர்த்துதற்கு. எண்ணுந்தொறும் இன்பம் பயக்கும் இறைவனை, உண்ணும்தொறும் சுவை பயக்கும் கரும்பாக உருவகம் செய்தார். இறை இறை-

சிறிது சிறிது. ''உருகும் வண்ணம் கோயில் கொண்ட கரும்பு'' என இயையும்.(17)

இனிதிரைத் திவலை மோத
எறியும்தண் பரவை மீதே,
தனிகிடந் தரசு செய்யும்
தாமரைக் கண்ணன் எம்மான்,
கனியிருந் தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்,
பனியரும் புதிரு மாலோ:
என்செய்தேன் பாவி யேனே! (18)

(பொழிப்புரை): அலைகளில் உண்டான நீர்த் திவலைகள் இனிதாக வீசக், கொந்தளிக்கின்ற குளிர்ந்த கடல்போன்ற காவிரியாற்றின் நடுவே, தனியே வந்து கண்வளர்ந்தருளி, அருளாட்சி புரிகின்ற தாமரைபோன்ற கண்களை உடையவனும்,எமக்குத் தலைவனும்,கோவைக் கனி போன்ற சிவந்த இதழை உடையவனுமான கண்ணபிரானைக் காணப்பெற்ற கண்களி விருந்து குளிர்ந்த மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகா நின்றது. கண்ணாரக் கண்டு களிப்பதற்கு நற்பேறு இல்லாத நான் யாது செய்வேன்?

(குறிப்புரை): திருவரங்கத்தின் அழகிய மணவாளனைக் காணப்பெறினும், அவனது அழகினை மேலும் மேலும் கண்டு களிப்பதற்கு, இம்மகிழ்ச்சிக் கண்ணீர் ஒருவகையில் தடையாக நிற்கின்றது என்று, ஆழ்வார் நொந்து கொள்ளுகின்றார். இஃது இறையருள் அனுபவத்தில், ஒரு சிறந்த இன்ப நிலையாகும். பரவை-கடல்; அஃது ஆங்கே காவிரியாற்றினைக் குறித்து வந்தது. நித்தியரும் முத்தரும் பெருந்திரளாகச் சூழ்ந்து வணங்கி நிற்கும் வைகுண்டத்தை விட்டு, இறைவன் தனக்கு உலக மக்களுள் ஒருவரேனும் கிடைக்கக் கூடுமா? என்ற அருட்பெருக்கால், திருவரங்கத்தில் வந்து எழுந்தருளியிருத்தலின், ''தனிக்கிடந்து'' என்றார். அரசு செய்தலாவது, பகைவரை அழித்தல், அஃதாவது யான் எனது என்றிருக்கும் உலக மக்களின் இழிநிலைமையைப் போக்கி, அவர்களைப் ''போற்றி'' என்னும்படி செய்து ஆட்கொண்டு அருளுதல். பெரிய பெருமானைச் சேவித்தால், அவதாரத்திற் பிற்பட்டவர்களுக்கும்உதவுவதற்காகக் கண்ணபிரான்தான், இங்கு வந்து கண்வளர்ந்தருளுகின்றான் என்று நினைக்கும்படி இருக்குமாதலால், 'கண்ணனை' என்று குறிப்பிட்டார்.

''யசோதைப் பிராட்டி பிள்ளைமனம் கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசு மொசுப்பெல்லாம், பெரிய பெருமாள் பக்கலில் தோற்றி இருக்கும்; வசிட்டர் முதலிய முனிவர்களாலே நன்கு பயிற்சி அளிக்கப்பெற்று வார்ந்து வடிந்த பணிவெல்லாம் தோன்றும்படியான சக்கரவர்த்தித் திருமகனை நினைக்கும்படியிருக்கும், நம்பெருமாளைக் கண்டால்'' என்று இவ்விடத்திற்குப் பட்டர் விளக்கவுரை அருளிச் செய்வர் என்பது ஐதிகம். இனிது-திரை -'இனிதிரை' என வந்தது. 'இருந்தால் அனைய' என்பது 'இருந்தனைய' என மருவிற்று.(18)

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்,
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு,
உடல்எனக்கு உருகு மாலோ
என்செய்கேன் உலகத் தீரே ! (19)

(பொழிப்புரை): உலகத்திலுள்ளவர்களே! கடல்போன்ற கரிய நிறத்தை உடைய கடவுளான, அழகிய மணவாளனாகிய எம்பெருமான் மேற்குத் திக்கில் திருமுடியை வைத்தருளியும், கிழக்குத் திக்கில் திருவடிகளை நீட்டியும், வடக்குத் திக்கில் திருமுதுகைக் காட்டியும், தெற்குத் திக்கில் விபீடணன் வாழும் இலங்கையை அன்புடன் பார்த்துக் கொண்டும், ஆதிசேடனாகிய படுக்கையில் அறிதுயில் கொள்ளும் தன்மையைக் காண்பதனால், என்னுடைய உடலானது உருகாநிற்கும். ஐயோ! நான் என்ன செய்வேன்!

(குறிப்புரை): பெருமாள் பள்ளிகொண்டருளும் அழகினைக் காண்பதனால், கண் முதலிய உறுப்புக்கள் மட்டுமேயன்றி, உறுப்பியாகிய தமது உடலும் உருகி நிற்பதை உணர்ந்து, ஆழ்வார் வியப்புறுகின்றார். பெருமாள் ,தாம் நித்திய விபூதி, லீலா விபூதி இரண்டற்கும் தலைமைவகித்தலை உணர்த்தக் 'குடதிசையில் முடியை' வைத்தார். எல்லா உலகமும் சரண் அடைந்து உய்வதற்காகத் 'குணதிசையில் பாதம்' நீட்டினார். ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச்சொல் நடையாடாமல், முரட்டு சம்ஸ்கிருதம் நடையாடுகின்ற திசையாதலின், அதனை உய்யக் கொள்ளுவதன் பொருட்டு 'வடதிசை பின்பு' காட்டினார். உண்மை அடியவனான விபீடணாழ்வான், நீடு வாழ்பவன் (சிரஞ்சீவி) ஆக என்றும் இருந்து வருதலின், 'தென்திசை இலங்கை' நோக்கினார். இங்ஙனம் நாற்றிசையினரையும் உய்விக்கப்பள்ளிகொண்டருளிய பெருமாளின் கருணைச் செயல், தமக்குப் பெருநலன் விளைவித்ததனை, ஆழ்வார் இப்பாசுரத்திற் குறிப்பிட்டு மகிழ்கின்றார்(19).

பாயும்நீர் அரங்கம் தன்னுள்
பாம்பணைப் பள் கொண்ட
மாயனார் திருநன் மார்பும்,
மரகத உருவும் தோளும்,
தூய தாமரைக் கண்களும்
துவரிதழ்ப் பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும்
அடியரோர்க்கு அகல லாமே? (20)

(பொழிப்புரை): வெள்ளம் பெருகுகின்ற காவிரியாறு சூழ்ந்த ,திருவரங்கம் பெரிய கோயிலில், ஆதிசேடனாகிய படுக்கையில் கண்வளர்ந்தருளிய, வியத்தகு பண்பும் செயலும் வாய்ந்த எம்பெருமானின், பிராட்டி வாழ்கின்ற அழகிய திருமார்பும், மரகதமணி போன்ற பசுமை நிறமுடைய திருமேனியும், திருத்தோள்களும், தாமரை மலர் போன்ற அழகிய கண்களும், சிவந்த உதடுகளும், பவளம் போன்ற வாயும், வேலைப்பாடுள்ள அழகிய திருமுடியும், இவற்றின் ஒளியும் அடியவர்களுக்கு ஒருசிறிதேனும் இழக்கத்தக்கனவாகுமோ?

(குறிப்புரை): பெருமாளின் அழகைக் கண்டு, அனுபவித்தலைத் தாம் இனி ஒரு போதும் அகன்று இழத்தல் இயலாது என்று, தமது ஆற்றாமையையும் ஆராமையையும் ஆழ் வார் இப்பாடலில் அருளிச் செய்கின்றார். மாயனார்-வியக்கத்தக்க பண்பும் செயலும் உடையவர்(20).

பணிவினால் மனமது ஒன்றிப்
பவளவாய் அரங்க னார்க்குத்
துணிவினால் வாழ மாட்டாத்
தொல்லை நெஞ்சேநீ சொல்லாய்!
அணியனார் செம்பொன் ஆன
அருவரை அனைய கோயில்
மணியனார் கிடந்த வாற்றை
மனத்தினால் நினைக்கல் ஆமே?

(பொழிப்புரை): பவளம் போன்ற உதடு களையுடைய அழகிய மணவாளனுக்குப் பணி புரியும் ஆர்வத்தால், மனத்தினை ஒருமைப் பாடு உறச் செய்து, அதனால் அச்சமின்றித் துணிவுடன் வாழத் தெரியாமல், துன்பம் விளை விக்கின்ற நெஞ்சமே! அழகினால்நிறைந்த, செவ்விய பொன்னால் அமைந்த, பெரிய மேரு மலையைப் போன்ற திருவரங்கம் பெரிய கோயி லில், நீலமணி போன்ற நிறமுடையவராகிய திருவரங்கநாதர் கண்வளர்ந்தருளும் அழகினை நாம் நம் நெஞ்சினால் அளவிட்டு அறிதல் கூடுமோ? நீயே சொல்லிக் காண்பாயாக!

(குறிப்புரை) திருவரங்கநாதன் கண்வளர்ந் தருளுகின்ற அழகினை, நாம் நம் நெஞ்சினால் அளவிட்டறிதல் இயலாது என்பது கருத்து. எனினும், மனத்தை ஒன்றுவித்து எம்பெரு மான்பால் சிந்தனையைச் செலுத்தி அவனைப் பணிதல் வேண்டும் என்றும், நாம் உய்வதற் குரிய எளிய இனிய வழி இதுவே என்றும் வலி யுறுத்தியவாறு. பணியினால்-பணிசெய்யும் ஆர் வத்தால். துணிவு-தெளிவு, உறுதியான பக்தி. உள்ளமானது பலவகைகளில் அலையாமல், இறைவன் ஒருவனையே நினைந்து பற்றுதல் வேண்டுமாதலின் 'மனமது ஒன்றி' என்றார். ஒன்றி-ஒருமைப்பட்டு. இறைவனைப் பணிந்து உய்ய முயலாமல் நெடுங்காலமாக உலகியல் நுகர்ச்சிகளில் உழன்று கெட்டொழிந்தமையின் ''வாழமாட்டா'' என்றும், இன்பம் தருதற்குத் துணை புரிதற்குரியது துன்பம் விளைதற்குக் காரணமாயினமையின் ''தொல்லை நெஞ்சு'' என்றும் குறிப்பிட்டார். திருவரங்கம் பெரிய கோயில், பொன்மயமாக அழகிற் சிறந்து, அகன்று விரிந்து உயர்ந்து ஒரு பெரும் மலை போல் காணப்படுதலின், ''அணியனார் செம் பொன்னாய அருவரை அனைய கோயில்'' என் றார். கோயிலாழ்வார்க்குள்ளே பெரியபெரு மாள் கண்வளர்ந்தருள்கிற தன்மை, மாமேரு மலையைப் புடைபடத் துளைத்து, அது விம் மும்படி அதன்கண் ஒரு நீலமணியை அழுத்தி வைத்தாற்போலக் கவினுற்றுத் திகழ்கின்றது என்பது கருத்து.(21).

பேசிற்றே பேசல் அல்லால்,
பெருமை ஒன்று உணரலாகாது;
ஆசற்றார் தங்கட்கு அல்லால்,
அறியல் ஆவானும் அல்லன்;
மாசற்றார் மனத்து ளானை
வணங்கிநாம் இருப்ப தல்லால்,
பேசத்தான் ஆவதுண்டோ?
பேதை நெஞ்சேநீ சொல்லாய்.

(பொழிப்புரை): அறிவில்லாத நெஞ்சமே! வேதங்களும் முனிவர்களும் பிறரும் புகழ்ந்து துதித்தனவற்றையே, நாமும் கூறிப்புகழ்ந்து துதித்தலல்லாமல், இறைவனது மேன்மை களுள் ஒன்றனையும் நாம் சிறிதேனும் உணர் தல் இயலாது. குற்றமற்ற சிறந்த அடியவர் களுக்கு அல்லாமல், ஏனையோரால் அவன் அறியப்படக் கூடியவன் அல்லன். குற்றமற்ற அடியவர்களின் நெஞ்சில் என்றும் நிலைபெற் றிருக்கின்ற இறைவனை, நாம் வணங்கிக் கொண்டு இருப்பதனைத் தவிர, அவனது பெரு மையை ஆராய்ந்தறிந்து அதனை அளவிட்டுப் பேச நம்மால் இயலுமோ?

(குறிப்புரை): இறைவன் குற்றமற்ற அடி யவர்களின் சிந்தையில் என்றும் நிலைபெற்று நிறைந்திருப்பவன். அவனை வேதங்களும் ஆகமங்களும் போற்றிப் புகழ்ந்து துதிக் கின்றன. அப்புகழுரைகளையே நாமும்திரும்பக் பக் கூறி அமைவதல்லாமல், நம்மால் அவனு டைய பெருமைகளுள் ஒரு சிறு கூற்றினையும் உணர்தல் இயலாது; அவனது எல்லையற்ற பெருமைக்கு ஏற்றபடி, நாம் அவனைப் புகழ்ந் துரைத்தல் என்பது, நம்மால் இயலாத செய லேயாகும், என்பது இப்பாடலின் கருத்து. ''நின் ஆர்வலர் தொழுதேத்தி நின்புகழ் விரித் தனர் கிளக்குங்கால், அவை நினக்கு இறும்பூது அன்மை நற்கறிந்தோம் ஆயினும், நகுதலும் தகுதி ஈங்கு ஊங்கு நிற்கிளப்ப'' எனவரும் பரி பாடல் வரிகளும், அவற்றிற்கு ''நின் புகழ் களெல்லாம் நினக்கு இயல்பாவன அல்லது வியக்கப்படுவன அல்லாமையை அறிந்து வைத் தும், அத்தன்மையம் அல்லாத நாங்கள் அவற் றுட் சிலவற்றை ஈங்கும் ஊங்குமாகப் பிறழக் கூறுவதற்கு, நீ நகுதலும் எமக்கு உள்ள தகுதி யாம்; அதனால் யாம் நின் புகழ் கிளத்தலும் ஒழிதற்பாற்றன்று'' எனப் பரிமேலழகர் எழுதிய உரையும் இங்கு உணரற்பாலன.(22)

கங்கையிற் புனிதம் ஆய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்,
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்,
எங்ஙனம் மறந்து வாழ்கேன்?
ஏழையேன் ஏழையேனே! (23)

(பொழிப்புரை): கங்கையாற்றைக் காட்டி லும், தூய்மையும் தெய்விகத் தன்மையும் உடையதாகிய காவிரியாற்றின் நடு இடத்தில், பொங்கி வருகின்ற நீர்ப் பெருக்கானது எங்கும் பரந்து பாய்வதும், அழகிய சோலைகளை உடைய துமாகிய திருவரங்கத்தில், எங்கள்பால் பேரன்பு உடையவனும், எல்லோருக்கும் எல்லா வற்றிற்கும் தலைவனும், அனைத்தையும் இயக்கி ஆள்பவனுமாகிய திருவரங்கநாதன் பள்ளி கொண்டிருக்கின்ற ஒப்பற்ற அழகிய திருக்கோலத்தை, இனிது கண்டு வணங்கப் பெற்ற பிறகும், அவ்வழகிய காட்சியினை யான் எங்ஙனம் மறத்தல் இயலும்? மறந்தால் உண்மையிலேயே யான் ஏழையாகிவிடமாட் டேனா? அரங்கனின் அழகிய காட்சியை மறந்து விட்டு, ஏழையேன் ஆகிய நான் எங்ஙனம் வாழ்வேன்!

(குறிப்புரை): கங்கை நதியானது, திருமாலின் திருவடியினின்று தோன்றியது ஆதலால் தூய்மையானது. ஆயினும், உருத்திரசம்பந்தமுடையதாய், அதனால் சடைச்சாறு எனப்படும் ஒரு குறையுடையது. காவிரிக்கு அத்தகையதொரு குறையின்மையுடன், கங்கையைத் தன் திருவடியினின்று தோற்றுவித்த திருமாலே, மிகவும் விரும்பிப்போந்து, அதன்கண் பள்ளிகொண்டுள்ள மாட்சிமையை உடையதாதலின், 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று, காவிரியை ஆழ்வார் சிறப்பித்தார். காவிரி வெள்ளமானது, திருவரங்கம் கோயிலை அணுகுகின்றோம் என்னும் பெருமகிழ்ச்சியினால் உந்தப்பெற்றுக் கிளர்ந்து மேலிட்டுப் பெருகி விரைந்தோடி வருகின்றது என்பார் ''பொங்கு நீர் பரந்து பாயும் அரங்கம்'' என்றார்.

பெரிய பெருமாளின் எழிலிளங்குமரப் பருவத்துக்கு ஏற்ப, இனிய நீர்வளத்தையும், இனிய குளிர்ந்த சோலைகளையும் உடைய தென்பார் ''நீர்பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்'' என்றார். மால்-பேரன்பினையுடையவன். இறைவன்-எல்லா உலகங்களுக்கும் தலைவன். ஈசன்-எல்லா உலகங்களையும் ஆள வல்ல திறமையுடையவன். அழகியமணவாளன் பள்ளிகொண்டுள்ள திருக்கோலத்தைக் கண்டவர்கள், அதன் அழகினை ஒருபோதும் மறத்தல் இயலாது. மறந்துவிட்டால் பின்னர் உயிர் தரித்தல் இயலாது. ஆதலின் 'மறந்து எங்ஙனம் வாழ்வேன்' என்றார் (23)

வெள்ளநீர் பரந்து பாயும்
விரிபொழில் அரங்கம் தன்னுள்,
கள்வனார் கிடந்த வாறும்,
கமலநன் முகமும் கண்டும்,
உள்ளமே வலியை போலும்;
ஒருவன்என் றுணர மாட்டாய்;
கள்ளமே காதல் செய்துன்
கள்ளத்தே கழிக்கின்றாயே (24)

(பொழிப்புரை): வெள்ளப் பெருக்கையுடைய காவிரி ஆறானது, எங்கும் பரந்து பாய்வதும், விரிந்து பரந்த சோலைகளையுடையதுமாகிய திருவரங்கத்தின்கண் ,பெருமாளை அணுகினால் அநுபவிக்கமாட்டாமலும், பிரிந்தால் தரிக்கமாட்டாமலும், பேதைமைக் குணம் கொண்டு நிற்கின்ற யான், அடியார்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுபவனான அழகிய மணவாளன் பள்ளிகொள்ளும் படியையும், அவனது தாமரை மலர் போன்ற அழகிய திருமுகத்தையும் கண்டு வணங்கப்பெற்ற பிறகும், உருகாமல் இருத்தலால், நெஞ்சமே நீ ஒரு கருங் கல்லைப்போன்ற வலியதன்மையுடையை போலும். அழகிய மணவாளன் ஒப்புயர்வற்றவன் என்று உணர்ந்து கொள்ளமாட்டாமல், கள்ளத்தன்மை மிகுந்த பக்தியையே செய்து கொண்டு, உன்னுடைய கள்ளச் செயல்களிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றாயே! இஃது ஏன்?

(குறிப்புரை): திருவரங்கத்தின் இயற்கை அழகின் சிறப்பினை வியந்து வியந்து, ''வெள்ள நீர் பரந்து பாயும் அரங்கம்'' என்றும், ''விரி பொழில் அரங்கம்'' என்றும் புகழ்ந்துரைத்தார். பெருமாள் பரமபதத்தில் நித்திய சூரிகளுடன் கலந்து மகிழ்தலைக் கைவிட்டுத் திருவரங்கத்தில் வந்து கண்வளர்ந்தருளுவது, உண்டியே உடையே உகந்தோடும் உலக மக்களைத் தன் பக்கல் வயப்படுத்திக் கொள்ள வலை வீசுதற்கேயாதலால், 'கள்வனார்' என்று குறிப்பிட்டார். தாய்க்கொலை செய்யும் இயல் பினனும் கண்டு மயங்கி நிற்கத் தகுந்த பேரழகு வாய்ந்த பெருமாளின் கமல நன்முகம் கண்டும் உருகாத, நெஞ்சத்தினைக் கடிந்து ''உள்ளமே! வலியை போலும்'' என்று இகழ்ந்தார். உள்ளம் உருகாதிருத்தலைக் குறிக்க 'ஒருவனென்று உணரமாட்டாய்' என்றார். ஒருவன்-ஒப்புயர்வற்றவன். ஏழைமை-அறிவின்மை; திருவருட்பேறின்மை. உண்மை அன்பும் உருக்கமும் இன்றிப் போலியாக நடித்தலின் 'கள்ளமே காதல் செய்து, உன் கள்ளத்தே கழிக்கின்றாயே' என்று, ஆழ்வார் தம் உள்ளத்தை இகழ்ந்து கூறிப் பழிக்கின்றார்.(24)

குளித்துமூன் றனலை ஓம்பும்
குறிகொள்அந் தண்மை தன்னை
ஒளித்திட்டேன்; என்கண் இல்லை;
நின்கணும் பத்தன் அல்லேன்;
களிப்பதென் கொண்டு? நம்பீ!
கடல்வண்ணா! கதறு கின்றேன்;
அளித்தெனக்கு அருள்செய் கண்டாய்
அரங்கமா நகரு ளானே! (25)

(பொழிப்புரை: அரங்கமா நகருளானே! வைகறையில் நீராடி, ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று நெருப்பையும் வளர்ப்பதற்குரிய தகுதியைத் தருவதும், குறிக்கொளத்தக்கதும் ஆகிய அந்தணத் தன்மையை இழந்துவிட்டேன். மெய்யுணர்வும் என்பால் இல்லை. நின்னிடத்தில் யான் பக்தியுடையவனுமல்லன். கடல் வண்ணனே! புருடோத்தமனே! நான் எதனைக் கொண்டு களிப்பு அடைவேன். துன்பத்திற்குப் போக்கு வீடாக வாய்விட்டுக் கதறிப் புலம்புகின்றேன். என்பால் இரக்கம் கொண்டு அருள்புரிவாயாக!

(குறிப்புரை): அந்தண்மை என்னும் சிறப்பைப் பெற்றிருந்தும், அதனைத் தாம் தம் இழிசெயல்களால் இழந்து விட்டதாக ஆழ்வார் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார். இறைவனின் அருளைப் பெறுவதற்குக் கருமயோகம் ஞானயோகம் பக்தியோகம் என்னும் மூன்று வகை நெறிகள் நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றையும் தாம்கடைப்பிடித்தொழுகும் தகுதி பெறவில்லை என்று, ஆழ்வார் தம்மைத் தாமே பழித்து இகழ்ந்து கொள்ளுகின்றார். 'ஒளித்திட்டேன்' என்பதனால் கருமயோகமும்; 'என்கண் இல்லை' என்பதனால் ஞானயோகமும்: 'நின்கணும் பக்தன் அல்லேன்' என்பதனால் பக்தி யோகமும் தம்பால் இல்லாமையைக் குறிப்பிட்டு வருந்தியபடி.(25)

(தொடரும்)

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம்

மூலமும், உரையும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

தனிநெஞ்சம் முன்அவர் புள்ளே
கவர்ந்தது; தண்ணந் துழாய்க்கு
இனிநெஞ்சம் இங்குக் கவர்வது
யாம்இலம்; நீநடுவே
முனிவஞ்சப் பேய்ச்சி முலைசுவைத்தான்
முடிசூடு துழாய்ப்
பனிநஞ்ச மாருதமே! எம்மது
ஆவி பனிப்பு இயல்வே

(பொழிப்புரை): என்னோடு உறவற்று நீங்கிய என் மனம் முழுவதையும் முன்னர், அப்பெருமானுடைய கருடப் பறவையே பிறர்க்கு மிச்சம் இல்லாதபடி கவர்ந்து கொண்டு போயிற்று. ஆதலால் அப்பெருமானுடைய குளிர்ந்த அழகிய திருத்துழாய் கவர்ந்து கொண்டு போவதற்கு உரியதான, வேறொரு நெஞ்சை இனி இவ்விடத்தில் யாம் உடையோமல்லோம். அவ்வாறிருக்க, சினக்கும் தன்மையுள்ள வஞ்சனை மிகுந்த பூதனை என்னும் பேய்மகளின் நஞ்சு தடவிய தனத்தைப் பசையறச் சுவைத்து அருந்திய கண்ணபிரானின் திருமுடியில் சூடப்பட்ட திருத்துழாயினது குளிர்ச்சியை உடைய, நஞ்சு போன்ற காற்றே! நீ இடையிலே புகுந்து, ஏற்கெனவே துன்புற்றிருக்கின்ற எம்முடைய உயிரை, மேலும் நடுங்கச் செய்வது நினக்குத் தகுந்த இயல்பு ஆகுமோ?

(விளக்கவுரை): நாயகனைப் பிரிந்து ஆற்றாத நாயகி, வாடைக் காற்றுக்கு வருந்திக் கூறும் பாசுரம் இது. 'தனி நெஞ்சம் முன் அவர் புள்ளே கவர்ந்தது' என்பதனால், எம்பெருமானை அறிவதற்குச் சிறந்த பிரமாணமாகிய வேதத்தின் வழியிலேயே என் மனம் ஊன்றிவிட்டது என்று ஆழ்வார் குறிப்பிடுகின்றார். மனத்தைக் கவரவல்ல மாயை என்னும் பிரகிருதி, இங்குத் 'தண்ணந்துழாய்' எனக் குறிக்கப்பெற்றது. புணர்ச்சிக் காலத்தில் இன்பம் தரும் பொருள்கள் யாவும் பிரிவுக்காலத்தில் துன்பம் தரும் ஆதலால், திருத்துழாய்க்கும் அதன் மேற்பட்டு வரும் காற்றிற்கும் அஞ்சியவாறு. வஞ்சகம் செய்யவந்தவர்களின் உயிரை மாய்ப்பதே திருத்துழாய் மார்பனுடையசெயல். நீ அங்ஙனம் இல்லாமல் அன்பு பூண்டவர்களின் உயிரையும் மாய்க்கின்றாயே? இது தகுமோ? என்றவாறு. எம்பெருமான் பிரிந்து போனதனைக் கருதிக் கோபம் தோற்றுமாறு, முதலில் அவர் என்று உயர்த்திக் கூறினாள்; அப்பெருமான் பூதனையைக் கொன்று முன்பு செய்த பேருதவியைக் கருதிக் கோபம் தணிந்து பின்னர்ச் 'சுவைத்தான்' என இயல்பாக ஒருமையிற் கூறினாள்.(4)

பனிப்பியல் வாக உடையதண்
வாடை, இக் காலம் இவ்வூர்ப்
பனிப்பியல்பு எல்லாம் தவிர்ந்துஎரி
வீசும் அந் தண்ணந்துழாய்ப்
பனிப்புயல் சோரும் தடங்கண்ணி
மாமைத் திறத்துக் கொல்லாம்?
பனிப்புயல் வண்ணன் செங்கோல்
ஒருநான்று நடாவியதே!

(பொழிப்புரை): குளிரச் செய்தலையே இயற்கைத் தொழிலாக உடைய குளிர்ந்த காற்றானது இப்போது, இவ்விடத்தில், குளிரச் செய்வதாகிய தனது இயல்பு முழுவதையும் விட்டு வெப்பத்தை வீசுகின்றது. இவ்வாறாகக், குளிர்ந்த காளமேகம் போன்ற தன்மையையுடைய எம்பெருமானது என்றும் மாறாத செங்கோலானது இவ்வொரு காலத்தில், இவ்வோரிடத்தில் மட்டும் கோட்டமுற்று வளைந்து போயிற்று. இஃது, அழகிய குளிர்ந்த அவனது திருத்துழாயின்பால் விருப்பமுற்று, மழை துளித்தலை உடைய மேகம்போன்று நீர் சொரிகின்ற பெரிய கண்களை உடைய, இவளது மேனியின் நிறத்தை அழிப்பதற்கே போலும்.

(விளக்கவுரை): வாடைக்கு வருந்தி மாமை இழந்த நாயகியின் நிலைமையைக் கண்டு, தோழி இரங்கிக் கூறும் பாசுரம் இது. தாய்ப் பாசுரமாகக் கொள்ளினும் அமையும். எம்பெருமானைச் சேர்வதற்குக் காலவிளம்பம் பெறாமல் விரைகின்ற ஆழ்வார், இவ்வுலகப் பொருள்கள் யாவும் தமக்கு வெறுப்பு விளைவித்தலை, இப்பாசுரத்தினால் வெளியிட்டுக் கொள்கின்றார். இவ்வுலகத்தவர்க்கு இன்பம் தரும் பொருள்கள் ஆழ்வார்க்குத் துன்பம் தருவனவாகத் தோன்றுதலை, முதலிரண்டு அடிகள் குறிப்பிடுகின்றன. 'புயல்வண்ணன்' என்றது, மேகம்போற் கரிய வடிவத்தினையும், அது போலத் தாபம் தீர்த்துக் கைம்மாறு கருதாமல்

உதவுகின்ற தன்மைக் குணத்தையும் உடைய வன் என்னும் குறிப்புடையது. காற்றின் இயல் பினை மாத்திரம் மாற்றினான் அல்லன், தனது இயல்பையும்கூட மாற்றிக் கொண்டனன் போலும் என்பது கருத்து. இறைவனுடைய செங்கோன்மை ஒருநாளும் நிலைகுலைவதன்று. அப்படிப்பட்டது இவள் நிறத்தை அழிப்பதற் காக இவ்விடத்து இவ்வொருபொழுது நிலை குலைந்தது போலும் என்றாள். தடாவியது - கோணிற்று, வளைந்தது.(5)

தடாவிய அம்பும் முரிந்த
சிலைகளும் போகவிட்டுக்
கடாயின கொண்டொல்கும் வல்லி
இதேனும் அசுரர் மங்கக்
கடாவிய வேதப் பறவையின்
பாகன் மதன செங்கோல்
நடாவிய் கூற்றங் கண்டீர்! உயிர்
காமின்கள் ஞாலத்துள்ளே!

(பொழிப்புரை): இவ்வடிவம் ஆனது, வளைந்த பாணங்களையும், ஒடிந்த விற்களை யும் கொள்ளாமல் நீங்குமாறு விடுத்து, செலுத் தத் தகுந்த அம்புகளையும் விற்களையும்ஏந்தித் துவண்டு நடக்கின்ற ஒரு பூங்கொடி போன்ற பெண் வடிவமாக இருந்ததாயினும், அசுரர்கள் அழியும்படி ஏறி நடத்தப்படுகிற விரைவை உடைய கருடப் பறவைக்கு, இனிய பாகனா கிய இறைவனின் உறவு பெற்ற, மன்மதனு டைய ஆளுகையை நடத்துகின்ற கூற்றுவனாக இருக்கும்; இந்நிலவுலகத்திலே இவ்வழகிய வடிவத்தைப் பார்த்தவர்களே! உங்களது உயி ரைக் காத்துக் கொள்ளுங்கள்.

(விளக்கவுரை): இஃது ஆழ்வாரின் பெரு மையை வியந்து கூறும் பாகவதர் பாசுரமாக உள்ளுறை அமைந்த பாடலாகும். ஒரு நாயகி யின் அழகிய வடிவத்தைக் கண்டு அதனிடத்து மிகவும் ஈடுபட்ட நாயகன், உலகத்தாரை நோக்கி இவ்வடிவம் மேலெழப் பார்ப்பதற்கு ஒரு மெல்லியலின் வடிவமாகத் தோன்றினா லும், உண்மையில் மன்மதனுடைய ஆணையை உலகம் முழுவதும் தவறாமல் செலுத்துகின்ற ஒரு பெருங் கூற்றமேயாகும். கூற்றுவனுக்குத் தப்பி உய்ந்தாலும்; இதற்குத் தப்பி உய்தல் அரிது. இது கண்டவர்களின் உயிரைத் தன்வச மாக்கிக் கொள்ளும் தன்மையுடையது.ஆதலால் இதன் பக்கம் உங்கள் உயிரை இழக்காமல் நீங்கள் நும்மைக் குறிக்கொண்டு காத்துக்கொள் ளுங்கள் என்று கூறுவதாக இப்பாசுரம் அமைந் துள்ளது.

இதன் உள்ளுறை பொருள், 'இவ்வாழ் வார் தம்மையணுகுகின்ற உலக மக்களை இவ் விருள் தருமா ஞாலப் பிறப்பினின்று நீக்கி முத் தராகச் செய்யவல்லவர். நீங்கள் உலகியல்வாழ் விலேயே நிலைத்திருக்க விரும்புவீர்கள் ஆயின், ஊரும் நாடும் உலகமும் தம்மைப்போலவே ஆக்கவல்ல இவர்க்கு வசப்படாமல் தப்பிப் பிழையுங்கள், என்பது. இவ்வுள்ளுறை பொரு ளில் தலைமகள் ஆழ்வார், தலைமகன் பாகவத சிரேஷ்டர். வல்லி என்றது கொடி, பெண்மகள்; இங்குப் பராங்குச நாயகியைக் குறிப்பது. கொழுகொம்பைத் துணையாகப் பற்றியல்லது தானே நிலைத்திருக்க மாட்டாத கொடியைப் போல, ஆழ்வார் எம்பெருமானைப் பற்றியல் லது தரியாமல் பரவசப்பட்டிருப்பார். பய னற்ற அம்புகளையும் சிலைகளையும் நீக்கி, நல்ல விழிஅம்புகளையும், புருவச் சிலைகளை யும் தலைமகள் கொண்டவாறு போல, உலக மக்களின் பயனில்லாத அறிவையும் உபாயங் களையும் விலக்கி, ஆழ்வார் கடைப்பிடித்த ஞானசாதனங்களின் மேன்மையினை, இது புலப்படுத்துகின்றது. இங்கு அசுரர் என்றது இழிகுணமும் செயலும் உடைய பிற மதத்தவர் களை. கண்டார் உயிரைத் தன் வசமாக்கிக் கொள்ளவல்ல கூற்றம் ஆக விளங்குபவள் தலைமகள்; அதுபோலவே உலகமக்களின் ஊழ் வினைத்தொடர்ச்சியை ஒழிப்பதற்கு ஒரு கூற்ற மாக உள்ளவர் ஆழ்வார் என்பது குறிப்பு

ஞானம் என்று கொள்ளப்படுகின்ற பெண் ணின் கண்ணிற்கு, குறி தவறாது எய்யும் அம்பை உவமை கூறியதனால், ஆழ்வாரது ஞானம் பரம்பொருளைத் தவறாது பற்றும் தன்மையது என்பது உணர்த்தப்பட்டது. அம்பு என்றது இங்கு ஞானசாதனங்களைக் குறிக்கும். ஞானமாகிய அம்புக்கு வளைவாவது, புறப் பொருள்களின் மேற்செல்லுதல். ஞானசாத னங்களாகிய விற்களுக்கு ஒடிவானது, ஒருபால் தவறிப்போதல். ஆழ்வாரை வழிபடவே உல கியற்பந்தங்கள் அடியற்றுப் போகும் என்பது இதனால் வலியுறுத்தப்பெற்றது.

கண்ணபிரானுக்கு உருக்குமிணிப் பிராட்டி யிடம் மன்மதன், பிரத்தியும்நன் என்னும் புதல்வனாகத் தோன்றினான் ஆதலின், அவன் 'பறவையின் பாகன் மதனன்' எனப் பட்டான். உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றையும் எம் பெருமானோடு ஏதேனும் ஒரு வகையான சம் பந்தம் உடையன என்றல்லது சொல்ல அறி யாத அன்பு மிகுதியால், வேட்கை விளைவித்து வருத்துபவனான மன்மதனையும்கூட, இறை வனின் சம்பந்தம் தோன்றக்கூறியபடி, மக ளிரை மன்மதனுக்குச் சேனையாகக் கூறுதல் கவி மரபு. ஆதலால் 'மதன செங்கோல் நடாவிய கூற்றம்' என்று தலைமகளைக் குறித்தார்.(6)

ஞாலம் பனிப்பச் செறித்து
நன்னீர் இட்டுக் கால்சிதைந்து
நீலவல் ஏறு பொராநின்ற
வானம் இது, திருமால்
கோலம் சுமந்து, பிரிந்தார்
கொடுமை குழறுதண்
காலம் கொலோ அறியேன்
வினையாட்டியேன் காண்கின்றவே!

(பொழிப்புரை): உலகம் நடுங்கும்படி தம்மில்தாம் நெருங்கித் தம் உடம்பின் நீரை முழுதாக வெளிப்படுத்திக் கால்களால் தரையைக் கீறிக் கொண்டு ,கரிய வலிய எருதுகள் போர் புரிகின்ற வானம் இது; திருமாலினுடைய வடிவத்தைத் தாங்கிப் பிரிந்துசென்ற நாயகனது கொடுமைத் தன்மையைக் கூறுகின்ற குளிர்ந்த அழகிய கார் காலந்தானோ? தீவினையையுடை நான் இங்குக் காண்கின்றவற்றைஇன்னதென்று அறிகின்றேன் இல்லை.

(விளக்கவுரை): கார்காலத்தில் திரும்பிவருவதாகக் கூறிச் சென்ற நாயகன், அங்ஙனம் வராமையினால் வருந்துகின்ற தலைவியை ஒருவாறு ஆறுதல் கூறித் தேற்றுவதற்காக, இது கார் காலம் அன்று; எனக் காலத்தை மயக்கித் தோழி கூறுவதாக அமைந்த பாசுரம் இது. இத்துறையினைக் 'காலமயக்கு' எனவும் ''காலம் மறைத்துரைத்தல்' எனவும் கூறுவர்.

கார் காலத்து மேகமானது ,விளங்குகின்ற மின்னலாலும் கருமை நிறத்தாலும், திருமகளை மார்பில் கொண்ட கரிய நிறமுடைய மகாவிஷ்ணுவைப் போன்று விளங்கும். ஆதலின் 'திருமால்கோலம் சுமந்து' என்றார். மேகம் முழங்குதல், பிரிந்து சென்று வராத தலைவரின் கொடுமையை நினைவூட்டுதலால், 'பிரிந்தார் கொடுமை குழறும்' என்றார். 'தண் பூங்காலம்' என்று அடைமொழிகள் கொடுத்துக் கூறியது, அக்காலம் கலவிக்குரியதாய் இனியது எனற்கு. தோழியானவள், தான் தலைவியின் வருத்தத்தைக் கண்டு கொண்டிருக்க நேர்ந்த தனது துன்பத்தை நினைந்து, தன்னை 'வினையாட்டியேன்' என்று கூறி நொந்துகொள்கின்றாள். ''தலைவன் வராமைக்குக் காரணம் அவனது கொடுமையும் அன்று, உனது ஆற்றாமையும் அன்று, இக்காலமும் அன்று, நின் துன்பத்தைக் காணுகின்ற என்னுடைய தீவினையே காண்'' எனத் தோழி நொந்து கொள்கின்றாள்.

இஃது ஒருவகையில் ''இராமபிரான் காட்டிற்கு எழுந்தருளியதற்குக் காரணம், மந்தரையின் சூழ்ச்சியும் அன்று; கைகேயியின் சூழ்வினையும் அன்று, தசரத மன்னனது அனுமதியும் அன்று; இராமபிரானின் பணிவுமன்று; கைகேயியின் வயிற்றில் பிள்ளையாய்ப் பிறந்த எனது பாவமே காரணம்'' என்று பரதாழ்வான் கூறியதைப் போன்றதாகும்.

கார் காலம் என்றது, நமது உலகியல் வாழ்வை. கார் காலமானது மேகங்களால்மூடப்பட்டு, இருள் நிறைந்து, திசைகள் தோன்றப் பெறாமல் இருக்கும்; உலகியல் வாழ்க்கையும் அஞ்ஞானம் ஆகிய மேகத்திரளாலே இருள்மூடி, நல்வழி தீயவழி தெரியப்பெறாமல் இருக்கும். கார்காலம் இடைவிடாத நீர்ப்பெருக்கை உடையதாக இருக்கும். உலகியல் வாழ்வும் இடையறாத துக்கங்களாகிய நீர்த்தாரைகளைப் பொழிந்து கொண்டு நிற்கும்(7).

காண்கின் றனகளும், கேட்கின்றன
    களும், காணில் இந்நாள்
பாண்குன்ற நாடர் பயில்கின்றன;
    இதெல்லாம் அறிந்தோம்;
மாண்குன்றம் ஏந்தி தண்மாமலை
    வேங்கடத்து உம்பர்நம்பும்
சேண்குன்றம் சென்று பொருள்
    படைப்பான் கற்ற திண்ணனவே!

(பொழிப்புரை): மலைகளையுடைய நாட்டுக்குத் தலைவராகிய நம் காதலர் இந்நாளில் பயில்கின்றனவும், காண்கின்றனவும், கேட்கின்றனவும் ஆகியவற்றை ஆராய்ந்து நோக்கினால்) அவை வெறும் வெளிற்றுரைகளேயாம். இவைகளெல்லாம் மாட்சிமை மிக்க கோவர்த்தன மலையை எளிதாக எடுத்து ஏந்திய கண்ணபிரானது, குளிர்ந்த சிறந்த திருவேங்கட மலையின் தேவர்கள் விரும்புகின்ற உயர்ந்த சிகரத்தைச் சென்றடைந்து, அங்குப் பொருளீட்டும் பொருட்டு, நம் காதலர் புதிதாகப் பயின்ற மனத்திட்பத்தின் செயல் என்று தெரிந்து கொண்டோம்.

(விளக்கவுரை): தலைவன் பொருள் வயிற் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி, தோழிக்குக் கூறுவதாக அமைந்த பாடல் இது. நாயகன் நாயகியைப் பிரிந்து பொருள் தேடுவதற்குச் செல்ல நினைக்கும்பொழுது, அந்த நினைவை வாய்விட்டுச் சொல்லாமல், மறுபடியும் தான் திரும்பிவரும் அளவும், அவள் நினைத்து ஆறியிருக்கும் பொருட்டு அவளிடத்திற் சில பணிவான செய்கைகளைச் செய்வதும், சில நயமான சொற்களைச் சொல்லுவதும் வழக்கம். அவற்றைக் கண்ட தலைமகள் இவர் இத்தகையசெய்கைகளைச் செய்வதும், சொற்களைக் கூறுவதும், ஏதோ ஒரு கருத்துப் பற்றியேயாதல் வேண்டும். பொருள் தேடுதற் பொருட்டுப் பிரிவதற்குக் கருதியே, இவர் இங்ஙனமெல்லாம் செய்கின்றார் போலும் என்று தலைவி உணர்கின்றாள். தன்னைப் பிரிவதற்குத் துணிந்து நின்ற தலைவனின் மனத்திண்மையைப் 'பொருள் படைப்பான் கற்றதிண்ணனவே' என்னும் தொடரால் தலைவி புலப்படுத்தினாள், கல்நெஞ்சர் என்னும் குறிப்பு 'குன்ற நாடர், என்னும் தொடரில் அமைந்துள்ளது.

ஆழ்வார் எம்பெருமானுடைய பிரிவை ஆற்றாது வருந்தியிருந்த நிலையில், தம்மை ஆற்றுவித்த அன்புடைய பாகவதர்கள், பின்பு பரம்பொருளைத் தேடிப்பெறும் பொருட்டுத் திவ்விய தேசயாத்திரையில் விருப்பம் உடையவராய்த்திருவேங்கடத்திற்குச்செல்லத்தொடங்கியதை அறிந்த ஆழ்வார், அவர்களின் பிரிவை ஆற்றாமையால் அருளிச் செய்த பாசுரம் இது என, இப்பாடலுக்கு உள்ளுறை பொருள் கொள்ளலாம். பாகவதரோடு கூடியிருக்கும் இருப்பொழிய, வேறு எம்பெருமான் உகந்தருளிய திவ்விய தேசத்திற்குப் போக நினைப்பதும் தவறு என்று, பாகவதர்களுடைய உடனுறைவின் சிறப்பு, இப் பாட்டால் வெளியிடப்பெற்றது(8).

திண்பூஞ் சுடர்நுதி நேமியஞ்
செல்வர் விண்ணாடு அனைய
வண்பூம் மணிவல்லி, யாரே
பிரிபவர்தாம்? இவையோ
கண்பூங் கமலம் கருஞ்சுடர்
ஆடி, வெண்முத்து அரும்பி
வண்பூங் குவளை மடமான்
விழிக்கின்ற மாயிதழே

(பொழிப்புரை): வலிய அழகிய ஒளியுள்ள, கூர்மை மிகுந்த திருஆழியையுடைய செல்வ ராகிய திருமாலின், பரமபதத்தை ஒத்த அழ கிய சிறந்த பூங்கொடி போன்றவளை, எவர் தான் பிரியவல்லார்? ஒருவரும் பிரியவல்லர் அல்லர்.இவளது கண்கள், கண்களாக மாத்திரம் இருக்கின்றனவா? தாமரை மலர்களாய் அழகிய செங்கழுநீர் மலர்களுமாய், பெரிய இதழ்களை உடையவையுமாய், கரிய அஞ்சனத்தின் ஒளியை அணிந்து, நம்மைப் பிரிதல் ஆற்றாமையால் பெருகுகின்ற கண்ணீராகிய வெண்மையான முத்துக்கள் தோன்றப் பெற்று, மடப்பத்தை உடைய மான்போல் நோக்குகின்றன.

(விளக்கவுரை): நாயகன், நாயகியை விட்டுப் பிரிய இயலாத தன்மையைக் கூறும் பாசுரம் இது. இப்பாடலில் 'வண்பூம் மணிவல்லி' என்றது ஆழ்வாரை. ஆழியஞ் செல்வரான எம்பெருமானுடைய பரமபதம் போல அந்தமில் பேரின்பம் தருகின்றவராய், ஒரு கொழுகொம்பையே அவாவி நிற்கும் கொடிபோலப் பாரதந்திரியமே வடிவாய் இருப்பவரான இவ் வாழ்வாரை, ஞானிகள் விட்டுப் பிரிய நினைவார்களோ? என்பது, முன்னிரண்டு அடிகளின் பொருள். இவருடைய ஞானம் ஏனைய உலகத்தாருடைடய ஞானம் போல்வதன்றி, மிக மேலான சிறப்பு வாய்ந்தது என்பதனை, 'இவையோ கண்?' என்னும் வினா புலப்படுத்தியது .இவருடைய ஞானம் செந்தாமரை நிறத் தவளான பெரிய பிராட்டியையும், அஞ்சன வண்ணனான் எம்பெருமானையும் இலட்சியமாகக் கொண்டு தன்மயமாய் உள்ளது என்பது 'பூங்கமலம் கருஞ்சுடராடி' என்பதனால் விளங்கிற்று. மற்றும் இவருடைய ஞானம் சுத்த சத்துவ குணமயமானது என்பதும், எம்பெருமானை அனுபவிப்பதால் ஆனந்தக் கண்ணீர் பெருகப் பெற்றது என்பதும் 'வெண்முத்து அரும்பி' என்னும் தொடரால் சுட்டப்பெற்றன.(9)

மாயோன் வடதிரு வேங்கட
நாட, வல்லிக் கொடிகாள்!
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர்!
உரையீர்! நுமது
வாயோ அதுவன்றி வல்வினையேனும்
கிளியும் எள்கும்
ஆயோ? அடும் தொண்டையோ?
அறையோ இது அறிவரிதே

(பொழிப்புரை); வியக்கத்தகுந்த குண நலன்களையுடைய எம்பெருமானது, வடதிரு வேங்கடமலையை இடமாக உடைய பூங் கொடி போன்ற இளம் பெண்களே! என்னுடைய காதல் நோயை, நீங்கள் தாமாக அறியாததும் அன்றி, யான் சொன்னாலும் கேட்கின்றீர்கள் இல்லை. உங்களுடைய வாயின் அழகோ? அதுவல்லாமல் கொடிய தீவினையை உடைய யானும் கிளியும் தளரும்படியான உங்களது ஆயோ என்கின்ற சொல்லோ? கோவைக் கனிபோன்ற சிவந்த உங்களது அதரமோ? என்னை உயிர்க் கொலை செய்யா நிற்கும்? இவற்றில் இன்னது என்னை வருத்தும் என்பது அறிய இயலாமல் இருக்கின்றது. நீங்களே சொல்லி அருளுங்கள்.

(விளக்கவுரை): இப்பாசுரம், மதியுடம் படுத்தல் உற்ற தலைவன் குறையுற உரைத்தல் .அஃதாவது நாயகியும், தோழியும் ஒன்றுகூடிப் புன்ங் காத்திருக்கின்ற சமயத்தில், நாயகன் அவர்களின் அருகிற் சென்று நின்று புதியவன் போலச் சில சொற்களைக் கூறித் தன் குறையை அறிவித்துத் தோழியின் கருத்தைத் தனது கருத்தோடு ஒருவழிப்படுமாறு செய்தல்.

'வல்லிக் கொடிகாள்!' என்று பன்மையாக விளித்ததனால் தோழியும், தலைவியும் சேர்ந்து கூடி இருக்கும் நிலையில், தலைவன் சொல்லும் பாசுரம் இது என்பது விளங்கும். கிளி முதலிய பறவைகள் வந்து தினைக்கதிர்களைக் கவராத படி அவற்றை வெருட்டுவதாக ஆயல் இடுகின்ற சொல், 'ஆயோ' என்பது. அதனால் இப்பாசுரம் தினைப்புனங் காக்கும் இருப்பில் சென்று சொல்லியதாதல் உணரலாம்.

'நேட்கின்றிலீர்' என்றதனால் வேறு பயன் கருதாது, கேட்பது ஒன்றை மட்டுமே, தான் பயனாகக் கருதியமை தோன்றும். கேளாதவர்களையே 'சொல்லீர்' என்றுவேண்டுவது, ஆசையின் மிகுதி இருந்தபடியை உணர்த்துகின்றது.

ஆழ்வாரைப் பிரியமாட்டாத அன்பரான பாகவதர், அவரது அவயவ விளக்கத்திலும், அருளிச் செயல் வாய்மொழிகளிலும் ஈடுபட்டுச் சொல்லுகின்ற வார்த்தை, இப்பாசுரம் என்பது உள்ளுறை பொருள். அற்புதனான எம்பெருமான் உலகமக்களின் நலம் கருதிப் பரமபதத்தை விட்டுத் திருமலையில் வந்து நிற்கின்ற நேர்மையை நாடுகின்றவரும், கொடி போலப் பாரதந்திரிய சொரூபத்தை உடையவருமான ஆழ்வாரே, உம்மிடத்து அன்பு மிகுதியால் நாங்கள் படும்பாட்டை விண்ணப்பம் செய்தாலும், உமது பரவசத்தால் கேட்கின்றீர் இல்லை. உம்முடைய திருமுக மண்டலத்தின் மலர்ச்சியோ? எம்பெருமானும் ஈடுபடும்படியான உமதுசொற்போக்கோ? அச்சொற்களைக் கூறும் வாயிதழ்களோ? எஃது எம்மை நெகிழச் செய்யும்?இன்னதென்று பகுத்தறிதல் எமக்கியலவில்லை. நீர் தாமே அதனை நிச்சயித்துச் சொல்வீராக! என்று பாகவதர்கள் விண்ணப்பித்துக் கொள்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. (10)

அரியன யாம் இன்று காண்கின்றிறன;
கண்ணன் விண்ணனையாய்!
பெரியன காதம் பொருட்கோ பிரிவு!
என, ஞாலம் எய்தற்கு
உரியன ஒண்முத்தும் பைம்பொன்னும்
ஏந்தி ஒரோ குடங்கைப்
பெரியன கெண்டைக்குலம் ,இவையோ
வந்து பேர்கின்றவே.

(பொழிப்புரை): நாம் இப்பொழுது காண்கின்றவை, உலகத்தில் வேறு எங்கும் காண்பதற்கு அருமையானவை. ''எம்பெருமானுடைய பரமபதம்போல அளவற்ற இன்பம் தருபவளே! மிகத் தொலைவான பல காதங்களில் அவரவர்கள் பிரிந்து செல்வது பொருள் தேடுவதற்காகவோ?'' என்று யான் பொதுவான உலக நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்க, அவ்வளவிலேயே எல்லா உலகங்களையும் தம் வயப்படுத்திக் கொள்ளக்கூடியவையாயும், தனித்தனி ஓர் ஓர் உள்ளங்கை அளவு பெரியனவாயும் உள்ள, கெண்டை மீன்களின் இனமான இக்கண்கள், பிரிவாற்றாமையால் பெருக்கிய கண்ணீர்த் துளிகள் ஆகிய அழகிய முத்துக்களையும், பசலை நிறமாகிய பசும்பொன்னையும் கொண்டு, என் முன்னே வந்து உலாவுகின்றன. இஃது என்ன வியப்பு!

(விளக்கவுரை): தலைவன் பொருள் தேடுதலைப் பற்றிப் பொதுவாகக் குறிப்பிட்ட அவ்வளவிலேயே ,அவன் தன்னைப் பிரிந்து செல்ல இருக்கின்றான் என்று உணர்ந்துகொண்ட தலைவி, அப்பிரிவுக்கு ஆற்றாமல் வேறுபாடு அடைய அதனைக் கண்ட தலைவன்மிகவும் வியந்து தன் நெஞ்சை நோக்கிக் கூறியது, இப்பாடல். இதுவரையில் யான் எத்தனையோ வியத்தகு நிகழ்ச்சிகளை உலகத்தில் கண்டிருக்கின்றேன். ஆனால் யான் இன்று இவள்பால் கண்டநிகழ்ச்சி என்றும் எங்கும் காண இயலாதது என்னும் கருத்தில், 'அரியன யாம் இன்று காண்கின்றன' என்று தலைவன் குறிப்பிட்டான். தன் பிரிவை உணர்ந்து வருந்திய தலைவியைத் தேற்றுதற்காக ,'கண்ணன் விண்அனையாய்' எனத் தலைவியைத் தலைவன் புகழ்ந்தான். திருமாலின் பரமபதத்தை அடைந்தவர்கள் அதனை விட்டுப் பிரிய இயலாதவாறு போல, யானும் உன்னைவிட்டு ஒருபோதும் பிரிந்து செல்லஇயலாது என்பது இதன் கருத்து. தலைவியின் கண்ணீரை முத்தாகவும், பசலை நிறத்தைப் பொன்னாகவும் குறித்து 'ஒண்முத்தும் பைம்பொன்னும் ஏந்தி' என்றான். பொருள் ஈட்டுதற்காகப் பிரிந்து செல்லுதலைக் கூறத் தொடங்கிய என்முன்னே, பரந்த கண்கள் உலகை விலைபெறத் தக்கவையாகச் சிறந்த முத்தையும், பொன்னையும் ஏந்திவந்து எதிர் நின்று, 'நீ பொருளுக்காகப் பிரிந்து செல்லுதல் வேண்டா; முத்தும் பொன்னுமாகிய இப்பொருள்கள் உனக்கு உரியவையே காண்' என்று கூறுகின்றன போன்றன. பொன்னும் முத்தும் இங்கேயே உள்ளனவாகலின், நீ வேறு பிற இடங்களுக்குச் செல்லுதல் வேண்டா எனக் குறிப்பால் தடுத்தபடி.

இப்பாடலின் ஒவ்வொரு சொல்லும்சொற்றொடரும், ஆழ்வாருக்கும், பொருந்தும் வகையில் அமைந்துள்ளன. ஆழ்வாரைப் பிரிந்து திவ்விய தேச யாத்திரை போகக் கருதிய பாகவதர்கள், தமது பிரிவைப் பொறுக்கமாட்டாத அவருடைய ஞானச் சிறப்பின் நலத்தைக் கண்டு கூறுவதாகவும், இப்பாடல் அமைந்துள்ளது. ஆழ்வாரின் ஞானச் சிறப்பின் நலம் வேறு எவ்விடத்திலும், என்றும் காண முடியாதது. ஆதலின், 'அரியன யாம் இன்று காண்கின்றன' என்று பாகவதர்கள் வியந்தனர். திருமாலின் பரமபதம் போல அளவற்ற பெருமையும், எல்லையற்ற பேரின்ப இயல்பும்,உலகியல் தொடர்பில்லாமையும், என்றும் வேறுபடுதல் இல்லாத குணநலங்களும் உடையவர் ஆதலின் ,ஆழ்வாரைப் பாகவதர்கள் 'கண்ணன் விண் அனையாய்' எனப் புகழ்ந்து போற்றினர். நெடுந்தூரம் திவ்விய தேச யாத்திரை செல்லுதலைப் 'பெரியன காதம் பொருட்கோ' என வியந்து வினவினர். திருமாலின் மச்ச அவதாரத்தில் இறங்கி ஈடுபட்டு அதன்மயம் ஆயினமையினால் ஆழ்வாரின் ஞானத்தின் வகைகளைக் 'கெண்டைக் குலம்' என்று சிறப்பித்தனர். அவரது ஞானத்தின் வகைகள்தாம், எல்லா உலகங்களையும் வேண்டிய வேண்டியவாறு பெறுதற்கு உரியவையும், உலகத்தாரையெல்லாம் வசப்படுத்த வல்லவையும் ஆதலின், அவற்றை 'ஞாலம் எய்தற்கு உரியன' என்று புகழ்ந்தனர். திருமால் அடியார்களை விட்டுப் பிரிய இயலாத ஆழ்வாரின் அன்புள்ளம், இப்பாடலில் உணர்த்தப்பெற்றது.(11)

பேர்கின்றது மணிமாமை;
பிறங்கி அள்ளற் பயலை
ஊர்கின்றது: கங்குல் ஊழிகளே;
இது எல்லாம் இனவே;
ஈர்கின்ற சக்கரத்து எம்பெருமான்
கண்ணன் தண்அம் துழாய்
சார்கின்ற நன்னெஞ்சினார்
தந்து போன தனிவளமே

(பொழிப்புரை): எனது அழகிய நிறமானது வேறுபடுகின்றது. பெருகி அடர்கின்ற தன்மையை உடைய பசலை நிறமானது மேன்மேலும் பரவுகின்றது. இராப்போது எத்தனையோ ஊழிகளாக நீடித்து நிற்கின்றது. இத்தன்மையுள்ள இவைகள் எல்லாம், கொடியவர்களை அழிக்கின்ற திருவாழியை உடைய எனது தலைவனான கண்ணபிரானது குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையில் ஆசைப்பட்டுச் செல்கின்ற எனது நல்லமனம், தான் செல்கின்ற போது எனக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற ஒப்பற்ற செல்வங்கள் ஆகும்.

(விளக்கவுரை): இப்பாடல் நாயகன் பிரியப்பெற்ற நாயகி, தன் ஆற்றாமைகூறி நெஞ்சொடு புலத்தல், தலைவி தோழியை நோக்கிக் கூறியதாகவும் கொள்ளலாம். தலைவனைப் பிரிந்ததனால் தன் மேனியின் நிறம் மாறிப் போயிற்று என்றும்; தலைவனோடு கூடி இருக்

குங்கால் ஒரு நொடிப்பொழுதாகக் கழிகின்ற இரவு, அவனைப் பிரிந்த நிலையில் எத்தனையோ ஊழிகாலமாக நீண்டு செல்கின்றது என்றும் தலைவி குறிப்பிடுகின்றாள். ''இது எல்லாம் இனவே'' என்றதனால், அன்றில் தென்றல் திங்கள் கடல் குயில் முதலியனவும் தலைவியை வருத்துதல் பெறப்படும். ''ஈர்கின்ற சக்கரத்து எம்பெருமான்'' என்னும் சொற்றொடர், அடியவர்களைப் பகைப்பவர்களான அசுரர் இராக்கதர் ஆகியோரை அழிக்கின்ற திருவாழியை உடைய எனது தலைவன் என்றும்; கையும் திருவாழியும் சேர்ந்த சேர்த்தியினால் ஆகிய அழகைக் காட்டி மயக்கி என் உள்ளத்தைத்திருத்துகின்ற பெருமையை உடையவன் என்றும் பொருள்படும். ''பிரதிகூலரை ஆண்மையாலே கொல்லும்; அனுகூலரை அழகாலே கொல்லும்'' என்னும் பெரியவாச்சான் பிள்ளை அவர்களின் விளக்க விரிவுரை இங்கு நாம் அறிந்து சுவைத்து மகிழத்தக்கது. உடையவளாகிய் தன்னை வருந்தவிட்டுத் தலைவனிடம் சென்ற நெஞ்சினை 'நன்நெஞ்சு' என்று புகழ்வதுபோலப் பழித்தாள். அதன்பால் தனக்குள்ள சீற்றம் தோன்ற 'நெஞ்சினார்' என்று, அதனை உயர்திணையாகவும், பன்மைப்பாலாகவும் கூறினாள். தனது மேனியின் நிறத்தை 'மணிமாமை' என்று குறிப்பிட்டுத் தலைவி தற்புகழ்ச்சி செய்து கொண்டாள் அல்லள்; கழிந்ததற்கு இரங்குதலின். தலைவன் அதனை முன்பெல்லாம் புகழ்ந்து புகழ்ச்சி செய்து மொழிந்த முறைமையையே, தலைவி இங்ஙனம் தனது ஆற்றாமை தோன்றக் கழிவிரக்கத்தினால் கூறினாள். தன்மேனியின் நிறம் மாறப் பெற்றமை, பசலை நிறம் படரப் பெற்றமை, இரவு நேரம் நீடிக்கப் பெற்றமை, முதலியவற்றால் தனக்கு நேர்ந்த அளவற்ற துன்பத்தினை 'நெஞ்சினார் தந்துபோன தனிவளம்' எனத் தலைவி குறிப்பினால் இகழ்ந்துரைத்தாள். 'தனிவளம்' என்றது எதிர்மறை இலக்கணை எனப்படும். அஃதாவது, ஒன்றும் அறியாதவாவரை 'நீயிர் பெரிதும் அறிதிர்' என்றாற் போல்வது. திருமால் கையும் திருவாழியுமாய்,தோளும் தோள்மாலையுமாய்க் காட்சி தருகின்ற நிலைமையில் அவரைக்கண்டு களித்தல் வேண்டும் என்று விரும்பி நின்ற ஆழ்வார், அப்பேறு கிடைக்காமையால் நெஞ்சோடு புலந்து கூறுவதாக, இப்பாடலின் உள்ளுறை பொருள் அமைந்துள்ளது (12)

தனிவளர் செங்கோல் நடாவு
தழல்வாய் அரசு அவியப்
பனிவளர் செங்கோல் இருள்
வீற்றிருந்தது; பார்முழுதும்
துனிவளர் காதல் துழாயைத் துழாவு
தண் வாடை தடிந்து,
இனி வளை காப்பவர் ஆர்?
எனை ஊழிகள் ஈர்வனவே

(பொழிப்புரை): ஒப்பில்லாமல் வளரும் தன்மையுள்ள ,தனது ஒளியாகிய அரசாட்சியை எங்கும் தடையின்றிச் செலுத்துகின்ற, வெப்பம் வாய்ந்த சூரியனாகிய அரசன் மறைந்துவிட, உலக மக்களுக்கு நடுக்கத்தைச் செய்கின்ற ஆட்சியை உடைய இருளாகிய சிற்றரசு, உலகம் முழுவதும் அரசு செலுத்தி வீறுற்று இருந்தது; இனிமேல் துன்பத்தை மிகுதிப்படுத்துகிற என் காதலுக்கு இலக்கான தலைவனது திருத்துழாய் மாலையை, அளைந்து வருகின்ற குளிர்ந்த காற்றைத் தண்டித்து, பிரிவாற்றாமையால் மெலிந்த எனதுகைகளினின்று கழன்று விழத்தொடங்கிய வளையல்களைக் கழல ஒட்டாமல், தடுத்துப் பாதுகாப்பவர் யாவர் உளர்? ஒருவரும் இல்லை. ஊழிக் காலம் போல நீண்ட இரவுகள் என்னை ஈர்வதுபோல வருத்துகின்றன.

(விளக்கவுரை): தலைவனைப் பிரிந்த தலைவி இருளுக்கும் வாடைக்கும் வருந்திக் கூறும் பாசுரம் இது. சூரியனுடைய வெம்மையும், அரசனுடைய வெற்றிச் சிறப்பும் ஆகிய இரண்டையும் உணர்த்தத் 'தழல்வாய் அரசு' என்றாள். சூரியனைப் பேரரசன் ஆகவும், இருளை அவனது பகைவனாகிய சிற்றரசனாகவும் உருவகம் செய்தார். சூரியனின் மறைவை 'மறைய' என்னாமல் 'அவிய 'என்றது, மீண்டும் சூரியன் உதயமாகக் காணாமல் இராப்பொழுதே நெடுகுவதாகத் தோன்றுவதால், சூரியன் அழிந்தான் போலும் எனக் கருதும் வெறுப்புணர்வு புலப்படுத்துதற்கு சூரியன் அரசு செலுத்திய இடம் முழுவதும், இருளுக்குத் தான் வீற்றிருப்பதற்கு மாத்திரமே உரிய இடமாயிற்று என்னும் கருத்தில் 'பார் முழுதும்வீற்றிருந்தது' என்றார். வாடைக்காற்று கொடியதாயினும், முன்பு கூடி இருந்த காலத்துத் திருத்துழாயின்மீது அளைந்துவந்து குளிர்ச்சியாக வீசி இன்பம் செய்தது. ஆதலின், 'தண் வாடை' என்றார். இனி எதிர்மறை இலக்கணையால் வெம்மையுடைய வாடையைத் தண்மையுடைய வாடை என்று புகழ்வதுபோல் பழித்தாள் எனினுமாம்; அல்லது வாடை என்னும் சிறப்புப் பெயர் இங்குக் காற்று என்னும் பொதுப்பொருளில் வந்தது எனினும் ஆம். உருவம் இல்லாத காற்றைத் தடிதல் இயலாது எனினும், அது செய்யும் துயர் பொறுக்க முடியாமையால், சீற்றம் தோன்றத் 'தடிந்து' என்றார்.

இருளை ஒழிப்பதும் வெப்பம்மிக்கதும் தடையற்றதும் ஒப்பில்லாததும் ஆன கதிரவனின் ஒளிபோல, வேற்று நெறிகளை ஒழிக்க வல்லதும், அதனால் பிரதாபம் மிக்கதும்,இறைவனின் கட்டளையை எங்கும் தடையற நடத்துவதும், ஒப்பில்லாததும் ஆன விவேகம் குலையும்படியாக, வருத்தத்தை வளரச் செய்கின்ற கொடுமையை உடைய மோகாந்தகாரம் ஆகிய பேரிருள் பரவிவிட்டது. இனிமேல், பிரிந்த நிலையில் துன்பத்தை விளைவிக்கின்ற இவ்வுலகத்துப் பொருள்களை விலக்கி, மறந்தும் புறம் தொழாதபடி எனக்குள்ள அடிமைக்குணத்தை நீங்காமல் பாதுகாப்பவர் யார் என்று, இறைவனைப் பிரிந்து அறிவு குலைந்து மோகம் தலையெடுத்துத் தளர்ச்சி மேலிட்டுத் தஞ்சம் தேடும் படியான தமது நிலைமையை, ஆழ்வார் இப்

பாடலில் அருளிச் செய்தார் என்பது, இதன் உள்ளுறை பொருள்.(13)

ஈர்வன வேலும் அம்சேலும்;
உயிர்மேல் மிளிர்ந்து இவையோ
பேர்வனவோ அல்ல; தெய்வ நல்
வேள்கணைப் பேரொளியே
சோர்வன; நீலச் சுடர்விடும்
மேனி அம்மான் விசும்புஊர்
தேர்வன; தெய்வம் அன்னீர
கண்ணோ? இச் செழுங்கயலே

(பொழிப்புரை): பகையைப் பிளப்பவை யான வேல்கள் போலவும், அழகிய சேல்மீன் கள் போலவும் விளங்குகின்ற இக்கண்கள், எனது உயிரை வசப்படுத்தும் பொருட்டு, அதன் மேற் பாய்ந்து அதைவிட்டு நீங்குவன அல்ல; தெய்வத்தன்மையை உடைய அழகிய மன்மதனது அம்புகளினுடைய சிறந்த ஒளி யையே தாம் வெளியிடுவன; நீலமணியினுடைய ஒளியை வீசுகின்ற திருமேனியை உடைய வனான திருமாலினது, மேல் உலகமாகிய பரமபதத்தைத் தனக்கு ஒப்பாகத் தேடும் தன் மையுடையன; கொழுத்த கயல்மீன்கள் என்று சொல்லத் தக்க இவை, மோகினி என்னும் பெண் தெய்வத்தைப் போன்ற, உமது கண் களோ?

(விளக்கவுரை): தலைவன் தலைவியினது அழகை வியந்து புகழ்கின்ற 'நலம் பாராட்டல்' என்னும் துறையில் அமைந்தது இச் செய்யுள். தலைவியின் கண்களைத் தலைவன் புகழ்ந்த படி. ஆழ்வாருடைய ஞானவிளக்கத்தைக் கண்டு புகழ்ந்து கொண்டாடுகின்ற பாகவதர் களின் கூற்றாக இதன் உள்ளுறை பொருள் அமைந்துள்ளது. இங்குக் கண் என்பது ஞானத் தைக் குறிக்கும். ஆழ்வாரது ஞானத்தின் கூர் மையும் நீர்மையும், பிற சமயத்தவர்களை வெற்றிகொண்டு தம்மைச் சேர்ந்தவர்களை மகிழ்விக்கும் ஆதலின், அவற்றிற்கு முறையே வேலும், சேலும் உவமையாயின. இவருடைய ஞானம் சேதனர் அனைவரிடத்தும் முழுநிறை வான அருளைத் தவறாமல் கொண்டுள்ளது என்பது, 'உயிர்மேல் மிளிர்ந்து இவையோ பேர்வன அல்ல' என்பதனால் புலப்படுத்தப் பட்டது. மன்மதனின் அம்புகளாகிய மலர் களைப் போல, இவரது ஞானத்திறங்களும் தெய்விகத்தன்மையும் நன்மையும் மென்மை யும் பேரழகும் உடையனவாகும். ஆதலின் 'தெய்வ நல்வேள்கணைப் பேரொளியே சோர் வன' என்று சிறப்பிக்கப் பெற்றன. 'இருள் தருமா ஞாலத்துள் இனிப் பிறவியான் வேண் டேன்' என்றபடி, இவ்வுலகத்தை வெறுத்துப் பரமபத வாழ்க்கையையே விரும்பித் தேடுவது இவர்தம் ஞானத்துக்குத் தொழிலும் பண்பும் ஆதலின் 'விசும்பு ஊர் தேர்வன' என்று ஆழ் வாரின் ஞானத்திறங்கள் வியந்து ஓதப்பட்டன. மனித நிலையில் உலக இயல்பில் காணப்படு வது அன்றாய்த் தெய்விகநலம் மிக்கோங்கிச் சிறந்து திகழ்தலின், ஆழ்வாரின் ஞான நலத் தினைத் 'தெய்வம் அன்னீர கண்ணோ!' என்ற னர். ஆழ்வாரின் ஞானநல மாட்சிமையினைக் கண்டு வியந்து அன்பர்கள் போற்றி மகிழ்ந்தபடி (14).

திருவாய்மொழிக்கு விளக்கவுரைகள்

திருவாய்மொழிக்குப் பல விளக்கவுரைகள் உள்ளன. அவற்றுள் ஆறாயிரப்படி என்பதனைத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் எழுதியருளினார். விஷ்ணுபுராணம் 6,000 கிரந்தங்களைக் கொண் ருத்தலையொட்டி, அவர்தம் விளக்கத்தை அவ்வளவில் அமைத்தார். ஸ்ரீபாஷ்யம் 9,000 கிரந்தங்கள் உடையதாக விளங்குதலை நினைந்து, நஞ்சீயர் என்பவர் ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம் வகுத் தார். பாகவதபுராணம் 12,000 கிரந்தங்களில் அமைந்திருத்தலை எண்ணி, வாதிகேசரி அழகியமணவாள ஜீயர், திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி விளக்கவுரை வரைந்தார். வால்மீகி ராமாயணம் 24,000 சுலோகங்கள் கொண்டதாக விளங்குதலை உன்னி, பெரியவாச்சான்பிள்ளை அவர்கள் இருபத்து நாலா யிரப்படி விளக்கம் செய்தருளினார். பிரமசூத்திரத்திற்கு இராமாநுஜர் வகுத்தருளிய ஸ்ரீபாஷ்யம் என்னும் பேருரைக்குச் சுதரிசனபட்டர் என்பவர் எழுதிய சுருதப்பிரகாசிகை என்னும் விளக்கவுரை 36,000 கிரந்தங்களாக விரிந்திருத்தல் கருதி, வடக்குத் திருவீதிப்பிள்ளை என்பவர், திருவாய்மொழிக்கு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானம் விரித்துரைத்தருளினார். இம்முப்பத்தாறாயிரப்படிக்கு ஜீயர் அரும்பதம், அடையவளைந்தான் அரும்பதம் என்னும் இரண்டு குறிப்புரைகளும் உண்டு.

பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச் சான்பிள்ளை,
தெள்ளார் வடக்குத் திருவீதிப்—பிள்ளை
மணவாள யோகி, திரு வாய்மொழியைக் காத்த
குணவாளர் என்று நெஞ்சே கூறு.

உபதேசரத்தினமாலை, மணவாளமாமுனிகள்

பஞ்சபூதத் தலங்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

நம்முடைய தமிழ் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள். இயற்கைப் பொருள்களின் அழகினையும் இயல்புகளையும் நன்கு ஆராய்ந்தவர்கள். நம் தமிழ் முன்னோர்கள் கடைப்பிடித்த சமயமும், இயற்கைச் சமயமே ஆகும். நம்முடைய சமயத்தில் இயற்கை நுட்பங்களையும் சிறப்புக்களையும் நிரம்பக் காணலாம்.

நம்முடைய மனித வாழ்க்கையில், இயற்கையின் மூலப் பொருள்களாகத் திகழ்கின்ற பஞ்சபூதங்கள் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றன. இவ்வுலகமே நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு (பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்) என்னும் பஞ்சபூதங்களால் தான் அமைந்திருக்கின்றது. நிலமும் நீரும், நெருப்பும் காற்றும், இவைகளை உள்ளடக்கி இருக்கின்ற வானமாகிய விசும்பும், எவ்வளவு சிறப்புமிக்கன, வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதன என்பதனை, நாம் உணர்வோம். இவ்வாறே நம்முடைய உடம்பும்கூட, இந்த ஐந்து பூதங்களால்தான் ஆக்கப்பட்டிருக்கின்றது.

பாதம்	—	மண்
பாதம் முதல் தொப்புள் வரை	—	நீர்
தொப்புள் முதல் மார்பு வரை	—	நெருப்பு
மார்பு முதல் தோள்வரை	—	காற்று
கழுத்துக்கு மேலே	—	ஆகாசம்

எனவே, அண்டம் என்னும் இப்பெரிய உலகமும் (Macrocosm), பிண்டம் (Microcosm) என்னும் நம்முடைய சிறிய உடலும் ஆகிய இரண்டும், பஞ்சபூதங்களாலேயே ஆக்கப்பெற்றிருக்கின்றன என்று உணரலாம்.

> ''நிலம் நீர் தீவளி விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம்''

என்பது, சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியச் சூத்திரம். இவ்வாறே 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூறு என்னும் சங்ககால இலக்கியத்திலும், இவ்வுலகமானது ஐம்பூதங்களால் அமைந்துள்ளமை கூறப்படுகின்றது.

> ''மண் திணிந்த நிலனும்,
> நிலன்ஏந்திய விசும்பும்,
> விசும்புதைவரு வளியும்,
> வளித்தலைஇய தீயும்
> தீமுரணிய நீரும் என்றாங்கு,
> ஐம்பெரும்பூதத்து இயற்கைபோலப்
> போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
> வலியும் தெறலும் அளியும் உடையோய்''

எனவரும் புறநானூற்று வரிகள், ஐம்பூதங்களையும் அவற்றின் இயல்புகளையும் குறிப்பிட்டுக் கூறியிருத்தலைக் காண்கின்றோம்.

இங்ஙனம் மிகப் பழைய காலத்திலேயே, நம்முடைய தமிழ் முன்னோர்கள் இயற்கையை நன்கு ஆராய்ந்து தெளிந்திருந்தனர். எனவே இன்று Physics என்றும், Physical Sciences என்றும் கூறப்படுகின்ற, பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சியில், நம்முடைய தமிழ்முன்னோர்கள் மிகவும் தலைசிறந்து விளங்கியிருந்தனர் என்று தெரிகின்றது.

இந்தப் பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சியின் நுட்பங்களை, மேலும் மேலும் ஆராய்ந்ததன் விளைவாக, நம் தமிழ் முன்னோர்கள் அதனை மேலும் வளர்த்து ஆன்மீக விஞ்ஞானமாக - அருளியல் விஞ்ஞானமாக (Spiritual Science) ஆக்கினர். அதன் பயனாக, நம்முடைய முன்னோர்கள் அமைத்து வைத்த பழமையும் பெருமையும் சிறப்பும் மிக்க மாபெரும் ஆலயங்களிற் சில, பஞ்சபூதத் தலங்கள் என்னும்பெயர்பெற்று, நீண்ட நெடுங் காலமாக விளங்கி வருகின்றன. அவைகள் வருமாறு:

1. பிருதிவித் தலம்

பிருதிவி என்பது, நிலம் அல்லதுமண்ணைக் குறிக்கும். நிலவளம் அல்லது மண்வளம் என்பது, எத்தகைய சிறப்புடையது என்று நாம் உணர்வோம். மண்வளம் என்பது, வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையாக அமைந்து, பலவகையான மரம் செடி கொடிகளும், விளைபொருள்களும் தரும். மண்ணின் அடியில் இரும்பு செம்பு பித்தளை வெண்கலம் வெள்ளி பொன் முதலிய பொருள்களும், பல்

வேறு வகையான எண்ணெய்களும், நீரூற்றுக்களும் பிறவும் கிடைக்கின்றன. இவைகளெல்லாம் கிடைத்து நமக்குப் பயன்படும்படியாக, இறைவன் மண்ணை அமைத்திருக்கின்றான். மண்ணின மாட்சிமையும் பயனும் அளவிடற்கரியன. அவற்றை நமக்கு உணர்த்தும் வகையிலேயே பிருதிவித்தலம் அமைந்திருக்கின்றது.

திருவாரூரும், காஞ்சிபுரமும் பிருதிவித் தலங்கள் எனப்படும். உலக நாடுகளில் பழமையும் பெருமையும் வாய்ந்தது தமிழ்நாடு. உலகத்தின் மையக் கோட்டிற்கு அருகிலுள்ள தமிழகத்தின், குறிஞ்சித் திணையில்தான், முதன் முதலாக மனிதன் தோன்றினான் என்பது, சர் ஜான் எவென்ஸ் (Sir John Evans) போன்ற, மேலைநாட்டுப் பேரறிஞர்கள் ஆராய்ந்து கண்ட உண்மை. இத்தகைய தமிழ்நாட்டின் மிகப் பழைய பெருநகரங்களுள், காஞ்சிபுரமும் திருவாரூரும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவைகள் உலகியலில் மட்டுமின்றி, அருளியலிலும் தலைசிறந்து விளங்கும் தலங்களாகும். எனவே, மண்வளம் சிறந்த இவ்விரு பெருந் தலங்களையும், பிருதிவித் தலங்கள் என்று நம் பெரியோர்கள், இங்கு இரண்டு பழம் பெரும் கோயில்களை, மிகப் பழைய காலத்திலேயே அமைத்து வைத்துள்ளனர்.

திருவாரூர்:

உலக நகரங்களின் வரலாற்றை ஆராய்ந்தால், நியூயார்க், லண்டன், பாரிஸ் மாஸ்கோ வாஷிங்டன் முதலிய பல பெருநகரங்கள், எவ்வெப்போது உண்டாயின என்பதை, ஒருவாறு ஆராய்ந்து கூறமுடியும். ஆனால் காஞ்சிபுரமும், திருவாரூரும் வரலாற்றுக் காலத்திற்கும் மிக மிக முற்பட்டவை. 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர், அப் பழங் காலத்திலேயே, திருவாரூர்க் கோயில் தோன்றிய காலம் எப்போது? என்று, இறைவனையே கேட்கும் முறையில்,

''ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ?
ஒருருவே மூவுருவம் ஆன நாளோ?
கருவனாய்க் காலனைமுன் கடிந்த நாளோ?
காமனையும் கண்அழலால் காய்ந்த நாளோ?
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ?
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!

என்று, 11 திருத்தாண்டகங்கள் பாடியிருக்கின்றார். இதனால் திருவாரூர்க் கோயிலின் அளவற்ற பழமையை அறியலாம்.

திருவாரூர்க் கோயிலின் மூலத்தானமாகிய கருவறையில், சிவபெருமான் மண்ணால் அமைந்த புற்று வடிவமாக எழுந்தருளியிருக்கின்றார். அதனால் திருவாரூர்ப் பெருமானுக்குப் ''புற்றிடங்கொண்டார்'' என்பது பெயர்.

'' புற்றிடங் கொண்டான் தன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே'' என்ற திருநாவுக்கரசர் பாடலில், 'புற்றிடங்கொண்டார்' என்னும் பெயர் அமைந்து வந்திருத்தல் காணலாம். இதனையே வடமொழியில் 'வன்மீகநாதர்' என்பர். வன்மீகம் என்பது, மண்ணால் அமைந்த புற்றைக் குறிக்கும்.

காஞ்சிபுரம்:

காஞ்சிபுரம் நம் இந்திய நாட்டிலுள்ள நகரங்களிலெல்லாம், மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்தது. கி.பி. 5 ஆம் நூற்றாண்டில், வடநாட்டில் வாழ்ந்திருந்த காளிதாசர் என்னும் பெருங் கவிஞர், '' பெண்களில் சிறந்தவள் அரம்பை; நகரங்களில் சிறந்தது காஞ்சிபுரம்'' என்னும் கருத்தில், ''நாரீஷு ரம்பா,நகரேஷு காஞ்சி'' எனப் புகழ்ந்திருக்கின்றார். 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருநாவுக்கரசர் ''கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்'' என்றும், மணிவாசகர் தம் திருவாசகத்தில் ''தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற்கோயில்'' என்றும் போற்றுகின்றார். இந்தத் தலமும் பிருதிவித் தலமாகும். இங்கேதான் காமாட்சியம்மை, மணலால் இலிங்கம் அமைத்துச், சிவபெருமானை அச்சிவலிங்க வடிவில் வழிபட்டு அருள் பெற்றார். திருவாரூரிலும் காஞ்சிபுரத்திலும் கருவறையில் உள்ள இலிங்கங்கள் மண்ணால் அமைந்திருப்பதனால், அவைகளுக்குக் கவசம் சாத்தப்பெற்றிருக்கும். நீராலோ பாலாலோ அவைகள் அபிடேகம் செய்யப்படுவதில்லை. திருவாரூர்க் கோயில் சிவபீடப் பிருதிவித் தலம். காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயில், சக்தி பீடப் பிருதிவித் தலம் எனப் பெரியோர்கள் கூறுவர்.

2. அப்புத் தலம்

அப்பு என்றால், நீர் என்பது பொருள். உலகில் நம்முடைய வாழ்க்கையில், தண்ணீர் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் உணர்வோம். மழை பெய்யாமல் இருந்தால் நாம் எவ்வளவு வருந்துகின்றோம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. 'நீரின்றி அமையாது உலகு' என்பது திருவள்ளுவர் திருக்குறள். நீர் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை. மக்கள் எல்லாம் பஞ்சத்தால் செத்து மடிவார்கள். மரஞ்செடி கொடி புல்பூண்டுகள் எல்லாம் காய்ந்து அழிந்து போகும். விலங்குகள் பறவைகள் மற்றும் சிற்றுயிர்கள் யாவுமே மடிந்து ஒழிந்துவிடும். ஆதலின் நீர் நமக்கு மிகமிக இன்றியமையாதது. இதனை நமக்குப் படைத்துக் கொடுத்தவன் இறைவனே. அவனருளால்தான் மழை பொழிகின்றது.

''இன்னருளே என்னட்டொழியாய் மழை!
ஏலோர் எம்பாவாய்''

என்று பாடுகின்றார் மணிவாசகர். கடவுளால்தான் மழை பெய்கின்றது என்பதை உணர்த்துவதற்குத்தான், திருக்குறளில் 'கடவுள் வாழ்த்துக்'குப் பின்னர் 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்தை வைத்தார். மழையால் நமக்கு நீர் கிடைக்கின்றது. நாம் வளமுற்று வாழ முடிகின்றது.

இவ்வுண்மையை நம் அனைவருக்கும் உணர்த்துவதற்காகவே, நம்முடைய பெரிய வர்கள் அப்பு(நீர்)த் தலத்தை அமைத்திருக்கின் றார்கள். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருவானைக்கா என்னும் தலம், அப்புத் தலமாக விளங்குகின்றது. அங்குள்ள கோயிலின் கரு வறையில், இலிங்க வடிவத்தைச் சுற்றி எப் போதும் நீர் ஊறித் தேங்கி நிற்கின்றது. வேறு எந்தக் கோயிலிலும் காணப்படாத, வியப்பும் விந்தையும் மிக்க, அற்புத நிகழ்ச்சி இது! இங்கே யுள்ள சிவபெருமானுக்கு ''நீர்த்திரள் நாதர்'' (அப்புலிங்கம்) என்பது பெயர். திருவானைக் காவிலும் அதற்கு அருகில் உள்ள ஊர்களிலும் உள்ள பலர், 'அப்புலிங்கம்' என்னும் பெயரை வைத்துக் கொண்டிருப்பர், திருநாவுக்கரசர் இங்குள்ள அப்புலிங்க வடிவப் பெருமானைத் தரிசித்து வணங்கி மகிழ்ந்தார். அதனைத் ''திருவானைக்காவிற் செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே'' என்று, உருவகமாகப் பாடி உள்ளம் உருகுகின்றார்.

3. தேயுத் தலம்

தேய என்பது நெருப்புக்குப் பெயர். தேயுத் தலம் என்று தமிழகத்தில் தொன்று தொட்டுப் போற்றப் பெறுவது, வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை ஆகும். திருவண்ணாமலையிலுள்ள மலை, ஏனைய மலைகளைப் போன்றதன்று. 'மன்னும் இமய மலை எங்கள் மலையே, மற்றிதுபோல் சிறந் தது வேறு இலையே'' என்று, கவிஞர்கள் இமயமலையைப் பெரிதும் புகழ்வதுண்டு. ஆனால் உலகிலுள்ள மலைகளில் மிகமிகப் பிற்காலத்தில் தோன்றியது, வயதிற் குறைந் தது, இமயமலையேயாகும். ஒரு காலத்தில் இமயமலை உள்ள இடம், ஆழ்ந்த கடலாக இருந்தது. சிலபல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வானவெளியில் இருந்து ஒரு விண் மீன் சிதறித் தெற்குக் கடலில் வீழ்ந்தது. அத னால் தென்னகத்தில் பரந்திருந்த நிலப்பரப்பு கடலுக்கு அடியில் சென்றது. அதன் விளை வாக வடக்கே இருந்த கடல் மறைந்து, மேட்டு நிலமாயிற்று. அதுவே இமயமலை ஆயிற்று என்பது நிலநூலார் (Geologists) கண்ட றிந்த உண்மை. கடலுக்கு அடியில் இருந்த மணல்வெளியே மேடானதனால், பிற மலை களில் காணப்படுவது போலப் பாறைகள் எது வும் இமயமலையிற் காணப்படா. வெறும் மணற்குன்றுகளே காணப்படும். அம்மணற் குன்றுகளில் கடலில் வாழ்கின்ற திமிங்கிலங்கள் போன்ற மீன்களின் உறை படிவங்களை(Fossils) இன்றும் காணலாம். இம்முறையில் ஆராய்ந் தால் உலகிலுள்ள பழமையான மலைகளில், திருவண்ணாமலை மிகமிகப் பழமையானது. இம்மலையின் பாறையை ஆராய்ந்த விஞ் ஞானிகள், இப்பாறைகள் நெருப்புத் தன்மை வாய்ந்தவை (Igneous Rocks) என்று கூறுகின் றனர்.

இதனையே நம்முடைய சமயச் சான்றோர் கள், திருவண்ணாமலையில், இறைவன் நெருப்பு மலையாகத் தோன்றினான் என்று குறிப்பிட்ட னர். நெருப்பு நம்முடைய வாழ்க்கைக்கு எவ் வளவு தேவையானது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை. நெருப்பு நம் வாழ்க்கைக்கு எண்ணிறந்த எத்தனையோ பலவகைகளில் பயன்படுகின்றது. அதனால் இறைவனை நெருப்பு வடிவம் உடையவனாக, சோதி சொரூபம் உடையவனாக, நம் தமிழர்கள் கண்டனர். நெருப்பானது இருளைப் போக்கி வெளிச்சத்தைத் தருகின்றது. இறைவன் நம் அறியாமையைப்போக்கி, அறிவு விளக்கத்தைத் தருகின்றான். ஆகவே இறைவனைச் சோதி வடிவமாக நம்முன்னோர்கள் வழிபடலாயினர். மிகப் பழைய தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூலில், இவ்ஒளி வழிபாட்டின் அடிப் படையில், சூரியன் - சந்திரன் - நெருப்பு (அக்கினி) என்னும் மூன்றையும் கடவுளைப் போல வணங்கலாம் என்ற கருத்து, கூறப்பட் டுள்ளது.

''கொடிநிலை வள்ளி கந்தழி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே

என்பது தொல்காப்பியம்! சூரியனை எல்லா ரும் போற்றுவர். பாலைநிலப் பகுதிகளில் வாழ்பவர்கள், சந்திரனைப் பெரிதும் வணங்கு வர். அவ்வாறே பார்சி மதத்தினர் அக்கினியை வணங்குவார்கள். இவைகளெல்லாம் ஒளி அல்லது சோதியைத் தருவனவாகும். 'சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே' என்பது திருவாசகம். இராமலிங்க வள்ளலாரும், சோதி தரிசனத்தை வலியுறுத்தி 'அருட்பெருஞ்சோதி அகவல்' பாடியிருக்கின்றார். சோதி வழிபாட்டின் அருமை பெருமைகளை உணர்த்துவதே திரு வண்ணாமலை ஆகிய தேயுத்தலம்!

4. வாயுத் தலம்

வாயு என்பது காற்று. காற்றின் அருமை பெருமைகளை நாம் நன்கு அறிவோம். காற்று இல்லாமல் நாம் வாழ முடியாது. நாம் உயிர் வாழ்வதற்கு நாம் சுவாசிக்கின்ற காற்றேகாரண மாக விளங்குகின்றது. காற்றைச் சுவாசிப்ப தனால்தான் நாம் உயிர் வாழ்கின்றோம். அத னால், உயிருக்கே பிராணன் (காற்று) என்ற பெயர் ஏற்பட்டது. ஒருவர் உயிருடன் இருக் கின்றாரா? அல்லது இறந்து விட்டாரா? என் பதை அறிய, அவருடைய மூக்கில்கைவைத்துப் பார்க்கின்றோம். மூச்சாகிய காற்று ஓட வில்லையானால், அவர் இறந்துவிட்டார் என்று உணர்கின்றோம்.

இத்தகைய காற்றின் சிறப்பினை உணர்த் துவதற்காக, நம் முன்னோர்கள் அமைத்து வைத்த திருக்கோயிலே, திருக்காளத்தியில் உள்ள காளத்திநாதர் திருக்கோயில் ஆகும்.

காற்று எங்கும் பரவியிருந்தாலும், அதற்குச் சிலசில இடங்களில் ஏதேனும் சிற்சில சிறப் பியல்புகள் இருக்கும். மண்ணானது எங்கும் இருந்தாலும், சில இடங்களில் செம்மண்ணாக

வும், சில இடங்களில் கரிசல் மண்ணாகவும், சில இடங்களில் உவர்மண்ணாகவும், பிறவாக வும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அது போலவே, நீரும் வெவ்வேறு இடங்களில் வெவ் வேறு தன்மைகளைப் பெற்றிருக்கின்றது. காவிரி ஆறு பொன்சத்து உடையது என்றும், பொருனை ஆறு தாமிரசத்து உடையது என் றும், அறிஞர்கள் கூறுகின்றனர். சில இடங் களில் தண்ணீர் ஊற்றுக்களும், வேறு சில இடங்களில் வெந்நீர் ஊற்றுக்களும் காணப்படு கின்றன. சில இடங்களில் கந்தகச்சத்தும், மற்றும் சில இடங்களில் உப்புக் கரிப்பும் உடையதாக நீர் இருக்கின்றது.

அதுபோலவே காற்று எங்கும் பரவியிருந் தாலும், திருக்காளத்திப் பகுதியில் விளங்கு கின்ற காற்றுக்கு, ஒரு பெரும் தெய்விகச் சிறப் பியல்பு இருப்பதாக, நம் முன்னோர்கள், தம் முடைய அருள் உணர்வினால் கண்டுணர்ந் திருந்தனர். ஆதலின் அங்கே இறைவன் காற் றாக விளங்குகின்றான் என்பதனை உணர்த்தத், திருக்காளத்தியை வாயுத்தலம் என வழங்கினர். அதற்கு ஓர் அடையாளமாக, திருக்காளத்திக் கோயிலின் கருவறையில் சிவலிங்கத்தின் முன்பு எரிகின்ற விளக்கானது, பிற இடங்களில் காணப் படாத நிலையில், காற்றினால் அசைந்து கொண்டிருக்கக் காண்கின்றோம். இஃது ஒரு வியக்கத்தக்க சிறப்பு நிகழ்ச்சியாகும்! ஆதலால் திருக்காளத்தி (காளஹஸ்தி) வாயுத்தலம்என்று சமய நூல்களில் கூறப்படுகின்றது.

5. ஆகாசத் தலம்

பஞ்சபூதத் தலங்களில், ஆகாசம் என்னும் பூதத்துக்கு உரிய தலமாக விளங்குவது, சிதம் பரம். ஆகாசம் என்னும் பூதமானது, ஏனைய நிலம் நீர் நெருப்பு காற்று என்னும் நான்கு பூதங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, உலகைச் சுற்றி மேலே விரிந்து பரந்து கவிந்து கொண்டிருக்கிறது. அதுபோல ஏனைய எல் லாத் தலங்களுக்கும் மேலானதாய், அவைகளை யெல்லாம் தனக்குள் அடக்கிக்கொண்டு, ஞானி களுக்கு ஞானம் தருவதற்கு ஏற்ற சிறப்புமிக்க தாக விளங்கி வருவதனால், ஆகாசத்தலம் எனச் சான்றோர்களால் புகழப்படுகின்றது, சிதம்பரம்.

'அம்பரம்' என்னும் சொல்லுக்கே, ஆகா சம் என்பதுதான் பெயர். சிதம்பரம் என்றால் ஞானஆகாசம் என்பது பொருள். இதனையே தூய நல்ல தமிழில் ''திருச்சிற்றம்பலம்'' என்று நம் சமய ஆசிரியர்கள் வழங்கினர். சிதம்பரம், சைவசமயத்தின் தலைசிறந்த பெருந்தலம். தமிழ்நாட்டில் எத்தனையோ பல ஆயிரக் கணக்கான கோயில்கள் இருப்பினும், 'கோயில்' என்றால், அது சைவர்களுக்குச் சிதம்பரத்தை மட்டுமே குறிக்கும். சைவத் திருமுறைகளில், சிதம்பரத்தினைக் 'கோயில்' என்றே குறிப் பிட்டுப் பெரியோர்கள் வழங்கியுள்ளனர்.

உலகமே வியந்து மகிழ்ந்து புகழ்ந்து போற்றுகின்ற சிறந்த கலைவடிவினர் ஆகத் திகழும் நடராசப் பெருமான், எழுந்தருளி விளங்கும் புண்ணியப் புனிதப் பெருந்தலம், சிதம்பரமே யாகும். எல்லாம் வல்ல இறைவ னின் திருவுருவங்களிலெல்லாம் மிக மேலான சிறப்பு வாய்ந்தது, நடராசப் பெருமானின் திருவுருவமேயாகும். அதன் தத்துவ நுட் பங்கள் அருமை பெருமை மிக்கன. அளவற்றன வாகும்.

நமது மனித உடலில் இருதயம் என்னும் நெஞ்சப் பையில் இடைவிடாது நடைபெறு கின்ற இருதயத் துடிப்பையே, நடராசரின் திருநடனமாகப் பெரியோர்கள் கண்டுணர்ந்த னர். இருதயத் துடிப்பு நின்றுவிட்டால், நம் வாழ்க்கை முடிந்து அக்கணத்திலேயே நாம் இறந்து போவோம்! அதுபோலவே, இறைவ னின் திருநடனம் நிற்க நேருமாயின், இவ் வுலகமும் அசைவற்று இயங்காமல், அழிந்து ஒழிந்து போகும்.

(1) நம்முடைய இருதயம் ஆகிய நெஞ்சப் பையின் தாமரை மொட்டுப் போன்ற அமைப்பு—ஓங்காரம்.

(2) நெஞ்சப்பை ஆகிய இருதயத்தில் விளங் கும் மின்னொளி—நடராசப் பெருமான்.

(3) மின்னொளியின் அசைவு — நடராசரின் திருநடனம்.

(4) நெஞ்சப் பையில் விளங்கும் மூலமுதல் ஒலி யாகிய நாதம் — நடராசரின் திருவடிச் சிலம்பு ஒலி.

(5) நெஞ்சப் பையின் சுற்று வடிவு—திருவாசி யாகிய பிரபையின் சுடர் ஒளி.

என்று, நாம் நடராச வடிவத்தின் தத்துவ நுட்பங்களை உணர்ந்து கொள்ளுதல் வேண் டும். பேரறிஞர் ஆனந்தகுமாரசாமி போன்ற வர்கள் The Dance of Siva என்னும் நூலில், மேலை நாட்டவர்களும் வியந்து போற்றும் வண்ணம், நடராச தத்துவத்தின் நுட்பங் களை விளக்கியிருக்கின்றார். திருமூலர் அரு ளிய திருமந்திரம், திருவதிகை மனவாசகம் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கம்போன்ற வேறு பல நூல்களும், நடராச தத்துவத்தினை விளக்குகின்றன.

இத்தகைய நடராசப் பெருமான் எழுந் தருளி விளங்கும் சிதம்பரமே, ஆகாசத் தலம் ஆகும். சிதம்பர ரகசியம் என்னும் இடமே, ஆகாசத்தைக் குறிக்கின்றது.

— — — —

ஆசாரியர்களும் — மேகமும்

ஆசாரியர்களை மேகத்திற்கு ஒப்பிட்டுச் சொல்வது, தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒரு பெரும் மரபு ஆகும். மாணிக்கவாசகர் தம்மைத் திருப்பெருந்துறையில் குருவடிவில் வந்து ஆட்கொண்டருளிய இறைவனை, 'அண்டத்து அரும்பெறல் மேகன்' என்றே சிறப்பித்து உருவகம் செய்து போற்றியுள்ளார். மாணிக்கவாசகராகிய ஞானாசாரியரைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் மேகமாக உருவகித்துப் புகழ்ந்து பின்வருமாறு துதிக்கின்றார்:

''கங்கை நதியானது தலையிற் சேர்ந்த சிவபிரானாகிய கருணைக் கடலில், மாணிக்கவாசகர் ஆகிய மேகமானது முகந்துபொழிந்த அருள்மழையினால், திருவாசகம் என்னும் ஞானவெள்ளமானது பெருக்கெடுத்தது. அவ்வெள்ளம் ஓதுபவர்களின் மனமாகிய குளத்திற் புகுந்து, நாவெனும் மதகில் நடந்து, கேட்பவர்களின் செவியாகிய மடையில் சென்று, உள்ளமாகிய நிலத்தில் ஊன்றப்பெற்ற அன்பு எனும் விதையினின்று, சிவமாகிய மென்முளை தோன்றி வளர்ந்து, கருணையாகிய பூ மலர்ந்து, முத்தியாகிய பயன் விளையும்படி செய்தது'' என்றுவரும் அவர்தம் நால்வர்நான்மணி மாலைச் செய்யுளில், மாணிக்கவாசகரைச் சிவப்பிரகாசர், மேகமாக உருவகம் செய்திருத்தல் காணலாம்.

(அ) மேகமானது, கடல்நீரை முகந்து அதன் உவர்ப்பை நீக்கி, மிக்க சுவையுடையதாகும்படி செய்து, உலக உயிர்களுக்குப் பயன்படும்படி, மழையாகப் பெய்கின்றது. அதுபோல ஆசாரியர்கள் வேதாகமங்களாகிய கடலினின்று ஞானப் பொருள்களை முகந்து, விலங்காதவனவற்றையும் விளக்கி, எல்லோர்க்கும் சுவையும் பயனும் விளையும்படி, அருளுரை பரப்பியருளுகின்றனர்.

(ஆ) மேகமானது, உலக நலத்தின் பொருட்டுப் பல இடங்களிலும் சென்று மழையைப் பொழிந்து நலம் விளைக்கும்; அதுபோல, ஆசாரியர்களும் பல இடங்களுக்கும் எழுந்தருளிச் சென்று, தமது ஞானோபதேசங்களைச் செய்து உலக மக்களைத் திருத்தி உய்யக்கொள்வர்.

(இ) மேகமானது, மேடு பள்ளங்களாகிய வேறுபாட்டை நோக்காமல் எல்லாவிடத்திலும் ஒக்கப் பெய்யும்; அதுபோல, ஞானாசிரியர்களும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகள் நோக்காமல், மக்கள் அனைவரையும் ஒக்க நோக்கி இரக்கம் காட்டி ஆட்கொண்டு அருள்புரிவர்.

(ஈ) மேகமானது, பருவம் நோக்கி, அவ்வக் காலங்களில் மழையைப் பொழியும்; அதுபோல, ஆசாரியர்களும் மாணவர்களின் பக்குவம் அறிந்து, அவரவர்களின் நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப அருள் அருள்புரிந்து ஆட்கொள்வர்.

(உ) மேகமானது, உரிய காலங்களில் பெய்யாதொழியுமாயின், உலகிற் பஞ்சமும், பசியும், பிணியும் உண்டாகும்; அதுபோல, ஆசாரியர்கள் வழிகாட்டி அருளுபதேசம் புரியமுற்படாவிடில், உலக மக்கள்பால் அறியாமையும் மயக்கமும் தீயொழுக்கமும் பிறவும் ஆகிய குற்றங்கள் மலிந்து கெட நேரும்.

(ஊ) மேகமானது, கைம்மாறு கருதாமல் நிரம்பப் பொழியும், அதுபோல, ஆசாரியர்களும் தமக்கு ஒரு கைம்மாறும் கருதாமல், உலக நலம் கருதியே தமது ஞானச்செய்திகளை இடைவிடாமல் பரப்பிக் கொண்டிருப்பர்.

(எ) மேகம் சில சமயங்களில் சிறு தூறல்கள் மட்டும் இட்டு நின்றுவிடும்; மற்றும் சில சமயங்களிலோ போதும் போதும் என்னும்படி நிரம்பப் பொழியும்; அவ்வாறே ஆசாரியர்களும் சில சமயங்களில் மந்திரோபதேசம் என்று சில எழுத்துக்களை மாத்திரம் உபதேசிப்பர்; சில சமயங்களில் வேதாகமக் கலைகள் அனைத்தின் உட்பொருள்களையும் மிக விரிவாக எடுத்துப் பெரிதும் விளக்கியருள்வர்.

(ஏ) மேகம் பெய்கின்ற மழை, சில சமயங்களில் வீணாவதும் உண்டு, அங்ஙனமின்றிச் சிப்பிகளின் வாயில் விழுந்து முத்துக்களாக மாறி மிக வுயர்ந்த அணிகலன்களுக்குப் பயன்படுவதும் உண்டு; அம்முறையில் ஆசாரியரின் அரிய அருள் உபதேசங்கள் எளிய மக்களால் போற்றப்பெறாமல் புறக்கணிக்கப்படுவதும் உண்டு; அங்ஙனமின்றி மிகச் சிறந்த பக்குவான்மாக்கள் பலரை உருவாக்கி, அவர்களின் வாயிலாக உலகிற்குப் பெருந்தொண்டு ஆற்றுவிப்பதும் உண்டு.

(ஐ) உலகம் வாழ்வதற்கு மேகம் பொழியும் மழைநீர் இன்றியமையாதது; அதுபோல, உலக மக்களின் ஈடேற்றத்திற்கு ஆசாரியர்களின் ஞானோபதேசம் மிக மிக இன்றியமையாததாகத் திகழ்கின்றது.

—ஆசிரியர்

ஆகமங்களின் தொன்மை

திரு மு. அருணாசலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

ஆகமங்களின் தோற்றத்தைக் கூறிய இடத்தில், இப்பொருள் சிறிதளவு சொல்லப்பட்டது. பின்னும் சில செய்திகள் இங்கு சொல்லத் தக்கன. மொஹஞ்சதரோ அகழ்வாய்வுகளில் சிவலிங்கம் கிடைத்தது, ஒரு நடனமாதின் சிலைவடிவமும் காணப்பட்டது. இதையொட்டி ஒரு குறிப்புத் தரலாம். பிற்காலத்தில் சோழர் காலம் தொடங்கி, சிவசந்நிதியில் சிவபெருமானுக்குச் சோடச உபசாரங்கள் கோயிற் பூசை முடிவில் செய்யப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்ட 16 உபசாரங்களில் இறுதி மூன்று கீதம் வாக்கியம் நிருத்தியம் என்பன. இவை யாவன இசைப்பாட்டு, வாத்திய இசை, நடனம் என்பன. முதல்இரண்டும் இன்றும் வசதியுள்ள எல்லாக் கோயில்களிலும் நடைபெறுகின்றன. நடனம் என்பது. தளிப்பெண்டுகளாயிருந்த தேவதாசிகள் என்போர் மூலம் நடைபெற்று வந்தது. சில ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தின் மூலம், கோயில்களில் நிருத்தியம் என்பது பொதுவாக நின்று போயிற்று.

சோழமன்னர்கள் இந்த நிருத்தியத்துக்காகக் கோயில்கள் தோறும் நடனமாதருக்கு அனேக மானியங்கள் அளித்திருந்தார்கள். அந்த மானியங்களை அனுபவித்த காரணத்தால், அப்பெண்டிர் வழியில் வந்தோர் சிலர், இன்றும் தினந்தோறும் கோயில்களில் தங்கள் நடனத்தொண்டைப் புரிந்து வருவதைக் காண்கிறோம். மொஹஞ்சதரோ அகழ்வு மூலம் கிடைத்த நடனமாதின் சிலை வடிவம், மிகப் பழங்காலத்தில்கூட, இத்தகைய நடனம் கோயிலில் இறைவன் திருமுன் நிகழ்த்தப் பெற்று வந்தது என்று நாம் எண்ண இடந் தருகிறது. இந்த நடனங்களும் உபசாரங்களும் ஆகமங்களில் விதிக்கப்பட்டவை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆகமங்களைக் குறித்து அப்பர் சுவாமிகள் சொல்லும் கருத்தொன்றும் இங்குச் சிந்திக்கத் தக்கது. தக்கன் யாகம் செய்தான். வேதங்களிற் சொல்லியபடி செய்தான். உண்மை. ஆகமங்களிற் சொல்லியபடி அவன் செய்யவில்லை. ஆகமங்களில் சிவபிரானுக்கே யாகத்தில் முதலிடம் அளித்திருக்கும். இவ்வாறு அவன் செய்யாமையால், பெருமானின் சீற்றத்துக்கு ஆளாகி, யாகத்தை அவர் அழிக்க நேர்ந்தது என்ற மாதிரி பொருள்படும்படியாக அவர்பாடியிருக்கிறார்.

இந்திரன் பிரமன் அங்கி
எண்வகை வசுக்க ளோடு
மந்திரம் மறைய தோதி
வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திரம் அறியாத் தக்கன்
வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாரும்
சாய்க்காடு மேவினாரே

(தந்திரம்-ஆகமம். அப்பர் காலம் கி.பி. 590-671).

சோழன் காலத்துக்கு முன்னமேயே தமிழ் நாட்டில் ஆகமங்கள் பெரும் வியாபகம் எய்தியிருந்தன. காஞ்சியில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னனான இராசசிம்மன் (கி.பி. 686-705), தன்னைச் சைவசித்தாந்தி என்று சொல்லிக் கொள்பவன். அவனுடைய பட்டங்களில் ஒன்று ஆகமப்பிரியன் என்பது. இவ்வரசனே 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற் சிங்கன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையுள் சிறப்பிக்கப் பெற்றவர்.

முன்பு சிவதந்திரங்களைக் குறிப்பிட்ட இடத்து, ஆகமங்கள் பொதுவாக வடநாட்டுக் குப்தர் ஆட்சிக் காலத்துக்கு முற்பட்டெழுந்தவை என்ற கருத்தைக் கூறியிருக்கிறோம். (கி.பி. 4 ஆம் நூற்றாண்டு).

இன்றுள்ள ஆகமங்கள் யாவும் சமஸ்கிருதத்தில் உள்ளன. எனினும், இன்று தமிழ்

நாட்டிலுள்ள கோயில்கள், அவற்றின் அமைப்பு முறை, வழிபாடு, விழாக்கள், அவற்றில் மக்கள் ஈடுபாடு, சாமானிய மக்களுடைய பக்தி வாழ்க்கை இவற்றை, வட இந்தியாவில் இத்தகைய கோயில்களும், அலங்காரமான வழிபாட்டு முறைகளும் இல்லாத நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்து, இத்தகைய தமிழ்நாட்டுச் சமய நிலைக்குக் காரணமான மூல ஆகமங்கள் தமிழில்தான் ஆதியில் இருந்திருக்க வேண்டும். பின்னரே இவை வடமொழியில் பெயர்க்கப் பெற்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நாம் வருவோமானால், இது பிழை என்று சொல்லவியலாது. அனைத்திந்தியாவுக்கும் பொருந்துமாறு இவை பிற்காலத்தில் வடமொழியில் பெயர்க்கப்பட்டன. பெயர்த்த காலம் கி.மு. 6 முதல் கி.பி. 4 நூற்றண்டு வரையிருந்திருக்கலாம். எனவே மூல ஆகமக் கருத்துக்கள் இவற்றுக்கும் முன்னமே, அதாவது சுமார் கி.மு. 1,000 என்று அறுதியிடுவது பொருத்தமாயிருக்கும்.

ஆகமநூல்களுக்கு வழிபாடு:

அருள் நூல்களாகிய சாத்திரங்களைப் பூசிப்பது இந்து சமயத்தில் முக்கியமான நன்கறிந்த ஒரு மரபு. சாத்திரங்கள் கடவுளே திருவாய் மலர்ந்தருளியவை என்பது நம் கொள்கை யல்லவா? ஆகமங்கள் இறைவனுடைய பஞ்சமுகங்களில் வதிந்தன என்ற முறையில் அவற்றுக்கும் வழிபாடு சொல்லப் பெறும். தினமும் ஆத்மார்த்த பூசையில் சாத்திரங்களுக்கும் ஒரு வழிபாடு செய்யப்பெறுகிறது. இது புத்தக பூசை என்று சொல்லப் பெறும். பரார்த்தபூசையில் ஆகமங்களுக்குத் தனித்தனியாக ஒரு அதிதேவதை கற்பிக்கப்பட்டு அது ஆகம தேவதை என்ற பெயரில் வழிபடப் பெறுகிறது.

சிவாலயங்களில் ஆகமங்களின் பெயரால் சிவலிங்கங்கள் தாபிக்கப்பெற்று அவற்றுக்கு முறையான பூசை நிகழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. ஆகம தேவதையானது, தியானத்தின் பொருட்டுப் பின்வருமாறு வருணிக்கப்படும். சைவாகமதேவர் பளிங்குபோல் ஒளிமயமானவர். முக்கண்ணர். நுதலில் திருநீறு ஒளிவிடும். மான் தோலுரித்துப் புலித் தோலாசனத்தில் அமர்ந்திருக்கிறார். ஆசனம் பத்மாசனம், பதினாறு கரங்களில் வாள், சூலம், முத்தலைவேல், கதை, வில், கம்பு, வரத அபய ஹஸ்தங்கள், தண்டாயுதம், அங்குசம் சின் முத்திரை, செபமாலை, புத்தகம், கமண்டலம், கட்கம், கேடயம் ஆகியவற்றைத் தாங்கியிருக்கிறார். ''இவ்வாறு தியானிக்கும் சொரூபமுடைய சைவாகமதேவர் என்னைக் காப்பாராக'' என்று தியான சுலோகம் சொல்லுகிறது.

1838இல் செய்யப் பெற்ற தத்துவநிதி என்ற சில்பசாஸ்திரம் ஆகமதேவதையின் தியானத்தை ஸ்காந்தபுராணத்தின் லட்சுமி நாராயண சம்மிதையிலிருந்து எடுத்துப் பின் வருமாறு கூறுகிறது :

சைவாகமஸ் சைவ தீ வஸ;

பஞ்சாட் சரரிஷி :—

சுத்த ஸ்படிக சங்காக:

த்ரிபுண்ட்ராங்கித மஸ்தக:

த்ரயக்ஷஸ் கர்ம பரிதான:

ஸவயாக்ரஜின ஸம்ஸ்திதா:

சுத்த பத்மா சனோதேவீ

யஷ் டாப்யை: கட்வாங்க சூலகா

சக்தி தண்டம் காப பாணௌ

வாபீதி கதாங்குசம்

சின்முத்ரிகம் சாக்ஷமாளம்

மஸ்தகம் ச கமண்டலம்

கட்க கேடன ததானோ அயம்

பயத் சைலாகம இவாஹ:

-ச்ேலவர்ண :

(இந்தத் தியான சுலோகங்கள் எளிதில் கிடைக்க மாட்டா. ஆதலால் அவை இங்கு மூலத்தில் முழுமையாகத் தரப்படுகின்றன).

ஆத்மார்த்த சிவபூஜையில் புஸ்தகபூஜை என்ற பெயரில் ஆகம பூசை விதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாவரண பூசையின்பின் குருவுக்குப் பூசையும், வித்யாபீட பூசையும் நடைபெறுகின்றன. வித்யாபீட பூஜையே புஸ்தகபூசை. கிரியாம்சையில் இது ஆகம சாஸ்திரத்துக்குச் செய்யும் பூஜையே. 28 ஆகமங்களின் பெயரால் சிவலிங்க தியானம் செய்திருப்பது ஆத்மார்த்த பூசையில் சொல்லப்பட்ட வித்யா பூஜையைப் பரார்த்த பூஜையில் கடைப்பிடிப்பதாகும். புஸ்தகம் என்பது இங்கு பனையோலை ஏடு என்பது சொல்லாமலே அமையும். ஏடுகளின் நீள அகலம் புத்தகத்தின் அளவு போன்றனவெல்லாம் விதிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு அடைவுள்ள சுவடிகளுக்கு வெவ்வேறு பெயர்களும் சொல்லப்பட்டுள்ளன.

''ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்று மாணிக்க வாசகர் பாடுகிறார். இங்கு அவர் ஆகமநூலே சிவம் என்று ஐக்கியப்படுத்துகிறார். ஆகவே ஆகமவழிபாடு சிவவழிபாடே. திருமுதுகுன்று ஆகிய பிரசித்த தலமாகிய விருத்தாசலத்து விருத்தகிரீசர் ஆலயத்தில் பழங்காலம் முதலாக 28 ஆகமங்களுக்கும் 28 சிவலிங்கங்கள் தாபிக்கப் பெற்றுள்ளன. வெளிப்பிரகாரத்தின் மூலையில் ஆகமேசர் கோயில் அமைக்கப் பெற்றுள்ளது. இங்கு இச் சிவலிங்கங்கள் காமிகேசர் முதல் வாதுளேசர் இறுதியாக 28 ஆகமேசர் பெயர்களைப் பெற்றுள்ளன.

" ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஒருத்தி மகனாய் வளர்ந்தான் "

இஃது, ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவைப் பாடலில் வருகின்ற வரி. இதன் பொருள்நலம் சுவை நிறைந்தது! தசரதச் சக்கரவர்த்தி ஆகிய ஒருவன், சாதன அனுஷ்டானங்களைப் பண்ணி, மாணிக்கம்போல நான்கு பிள்ளைகளைப் பெற்றான். வசுதேவர் தேவகி நந்தகோபர் யசோதை என்னும் நால்வரும் சேர்ந்து தவம்புரிந்து, கண்ணபிரானாகிய ஒரு மகனைப் பெற்றெடுத்தனர். எல்லா உலகங்களுக்கும் நியாமகன் ஆனவனையும் கூட நியமிக்கும் அவளாய், நாட்டில் தனக்கு ஒப்பற்று இருப்பவள் தேவகி. ஆதலின் அவள் 'ஒருத்தி' என்று சிறப்பிக்கப் பெற்றனள். அனைத்துலகங்களுக்கும் தந்தையாக இருப்பவன் ஒருத்திக்குப் புதல்வன் ஆவதே என்ற வியப்பை 'மகன் எனும் சொல் புலப்படுத்துகின்றது. தாய் தந்தையர் ஏவியதைச் செய்வது புதல்வர்க்குக் கடமை. அம்முறையில் தேவகியின் குறிப்பறிந்து தன்னுடைய நான்கு கைகளை இரண்டாகக் குறைத்தும், அவற்றில் பற்றியிருந்த சங்கு சக்கரங்களை மறைத்தும், எளிய குழந்தைபோல் விளங்கிய சிறப்பையும், 'மகன்' என்ற சொல் உணர்த்துகின்றது.

சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன் பாலப் பருவத்தனாய்ப் பக்குவனான பின்னரே, தந்தையின் கட்டளையைக் கடைப்பிடித்து நின்றான். ஆனால் கண்ணபிரானோ பிறந்த அளவிலேயே சங்கு சக்கரங்களையும் தோள்களையும் மறைத்துத் தாயின் கருத்தை நிறைவேற்றினான். இவ்வருமைப்பாட்டினைப் 'பிறந்து என்னும் சொல் குறிக்கின்றது. வினைவயத்தால் உயிர்கள் படுவனவற்றையெல்லாம், அருள்வயத்தால் கண்ணபிரான் பட்டான் என்றபடி. ஏனைய மனிதர்களைப் போலப் பத்து மாதம் அல்லாமல், அவன் பன்னிரண்டு மாதம் வயிற்றிலே இருந்து கருணையால் பிறந்தான் என்பதும் உணர்த்தியவாறு! கால தத்துவத்தைக் கடந்த அவன் காலத்துக்கு உட்பட்டுப் பிறந்தருளினான். அவுன் பிறந்தருளிய அவ்விரவை ஒக்கும் இரவு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. ஆதலின் 'ஓர் இரவு' என்றார்.

தேவகி இவனை மகனாகப் பெறவேண்டும் என்று தவங்கிடந்தாள். ஆதலின் அவளுக்கு அவதார இன்பத்தைக் கொடுத்தான்; யசோதைக்கு லீலை இன்பத்தை அநுபவிப்பித்தான். ஓர் அவதாரத்திலேயே யாதவ ஜாதியனுமாய், கோப ஜாதியனும் ஆனான். தேவகியின்பாற் பிறந்த பிறப்பில் புரையில்லாமை போலவே, யசோதையின்பால் வளர்ந்த இடத்திலும் புரையற்று இருந்தான். இதனை 'ஒருத்தி மகனாய் வளர்ந்தான்' என்பது உணர்த்திற்று. கம்சனுடைய தீய விஷப் பார்வை படாதபடி 'ஒளித்துவளர' நாட்டார் செய்வன செய்யப் பெறாமல், கள்ளர் பட்டது, தான் பட்டான். ''அத்தத்தின் பத்தாம் நாள் என்ற பெரியாழ்வார் மகள் ஆனதனால், தேவகி யசோதை என்று பேர் சொல்லாமல் 'ஒருத்தி' என்று குறிப்பாற் கூறியபடி.

பெற்றெடுத்த தேவகியைக் காட்டிலும், வளர்த்துப் போற்றிய யசோதை சிறப்புடையவள் ஆயினாள். எங்ஙனமெனில், ''திருப்ரதிஷ்டை பண்ணினவர்களைக்காட்டிலும் ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களே முக்யர்' என்பதற்கு ஏற்ப, முதலில் கோயில் கட்டியவர்களைக் காட்டிலும், பின்னர் அது பழுதுற்றபோது திருப்பணி செய்து போற்றிப் பாதுகாப்பவரே சிறப்பும் புண்ணியமும் உடையவராவர், அதுபோல என்பது.

இப்பாடலிற் கண்ணபிரான் இரவில் பிறந்ததும், கம்சனின் பொருட்டு ஒளிந்து வளர்ந்துமாகிய செய்திகள் சிறப்பாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறு, மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் ஒப்புமை உடையதாக விளங்குகின்றது.

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந்தான். இயேசுநாதர், ஏரோது (HEROD) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைந்து வளர்க்கப் பெற்றார். கம்சனைப் போலவே ஏரோது அரசனும் தன் உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரான் அவதாரம் பற்றிய அறிவிப்பு முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப் பெற்றது. கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்தில் பிறந்தார். இயேசுவை ''நல்ல மேய்ப்பன் (GOOD SHEPHERD) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரான் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனாகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாக விளங்கினான். இயேசு மலைச்சொற்பொழிவு (SERMON ON THE MOUNT) நிகழ்த்தினார். கண்ணபிரான் குருக்ஷேத்திரத்தில் தேர்த்தட்டில் கீதை உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன. *

—ஆசிரியர்.

---

* "The birth stories of Budda, Krishna and Jesus have certain striking resemblences, suggestive of mutual borrowing.

The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have lead some to think that Krishna and Chirst were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings, is undoubtedly an instructive Study.

The study of the ancestry of ideas is a fertile branch of Comparative Religion..."

—Dr. S. Radhakrishnan,
East and West in Religion, p.35.



கோடம்பாக்கம் வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவிற்காக அமைக்கப்பட்டுள்ள யாகசாலை பற்றிய விவரங்களை, நிர்வாக அதிகாரி திரு. கோலப்பன் அவர்கள், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களுக்கு விளக்குதல். (6.2.84).



கோடம்பாக்கம் வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவினையொட்டி யாகசாலைக்குக் கலசங்கள் புறப்பட்டுச் செல்லுதல். (6.2.84)

அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவில் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலாளர் உயர்திரு **கே. சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் வணிகவரி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் உயர்திரு **ஆர். ஷண்முகசிகாமணி ஐ.ஏ.எஸ்.** அவர்கள், மற்றும் அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு கு. **ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் கலந்து கொள்ளுதல். (6.2.84.)



மருதமலை அருள்மிகு முருகன் திருக்கோயில்வேன் கிளீனராகப் பணி புரிந்து **திரு. ரெ. பாலசுப்பிரமணியம்** என்பவர் அகால மரணம் அடைந்ததை முன்னிட்டு, திருக்கோயில் பணியாளர்களின் நலன்கருதி மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் **திரு. இராம. வீரப்பன்** அவர்களால், 1.7.82 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ், ஆயுள்காப்பீட்டுக் கழகத்திலிருந்து, காலஞ்சென்ற வேன் கிளீனர் ரெ. பாலசுப்பிரமணியம் குடும்பத்தினருக்கு, அவரது தகப்பனார் திரு. திரு. ரெங்கசாமிநாயுடு பெயரில், ரூபாய் 5000/- க்கான காசோலையை அறநிலைய ஆணையர் **திரு. கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் வழங்குதல் (10.12.83)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.